அரசியல், சமூக, பொருளாதார இதழ்

எழுநிலம்
EZHUNILAM

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 57 | பெப்ரவரி 2026 | திருவள்ளுவர் ஆண்டு 2057




## காவியத் தடம்

# கரிநாள்

சுவிஸ் தூதரகத்தின் அழைப்பும் தமிழ் தலைவர்களின் தெருச்சண்டையும்

தமிழர்களுக்கான உரிமை மறுக்கப்பட்ட சிறிலங்காவின் சுதந்திர தினம்

மாகாண சபை தேர்தலில் ஒரு திருப்புமுனை




**பவானி**

சுதந்திர தினம் என
சுற்றிச் சுழன்றாடி
சிங்கக் கொடி பறக்க...
வரலாறு அறியாதோர்
மகிழ்வோடு கொண்டாட...
வெறுப்பில்
தமிழீழத் தாய்
இரத்தக் கண்ணீர்
வடித்தாள்!!

சொல்லொணா
துயரங்களை சுமந்து..
அடிமை வாழ்வினில்
ஆண்ட பரம்பரை
அவதியுற்ற போது
தமிழ் மக்களை
மீட்டிடும் மீட்பராய்
வந்தவர் எம்
தேசியத்தலைவர்!

அவர் வகுத்த பாதையில்
ஆயிரமாயிரம்
வேங்கைகள்
இளமை வாழ்வினை
மறந்து
இன்னல்கள் மத்தியில்
இருண்ட தமிழர் வாழ்வு
விடிவு பெற வேண்டி
இன்னுயிர்களை
யாகம் செய்தனர்!
எமக்காக.... எம்
மண்ணுக்காக
வாழ்ந்த புனிதர்களை
காட்டிக் கொடுத்து
கயவர் மாபெரும்
துரோகமிழைத்து
இன்றும் வாழ்கின்றனர்!

பிஞ்சு நெஞ்சங்களின்
நஞ்சு விதைத்து
தேசிய வாழ்வை சிதைத்து
புனிதர்களை போற்ற
வேண்டிய மனங்களில்...

வரலாற்றுச்
சிதைவை காட்டி
வாழ்ந்திடும் மூடர்களே...!

எம் புனிதர்களின்
தியாகம்
வீண் போகாது!

வரலாற்றைச் சிதைத்திட
எவராலும் இயலாது.
சுதந்திர தமிழீழ
அன்னை மலர்வாள்!!

மலர்கின்ற நாளில்
மண்ணாகி போவர்
துரோகிகள்!

எழுநிலம்
EZHUNILAM

மாத இதழ் | மணம்: 57
பெப்ரவரி
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| சுவிஸ் தூதரகத்தின்... | 06 |
| மாகாண சபை தேர்தலில்... | 09 |
| இறைவி (கவிதை)... | 11 |
| பெப்ரவரி 4: கரிநாள்... | 12 |
| வாழ்க்கைப் பயணம் (கவிதை)... | 15 |
| மனிதம் போற்று (கவிதை).... | 16 |
| விமான மற்றும் துறைமுக.... | 17 |
| விடியலைத் தேடி (கவிதை)... | 19 |
| ஆறு ஆண்டுகளுக்கும்... | 20 |
| பெண் மனம் (சிறுகதை)... | 23 |
| பயங்கரவாதச் சட்டங்கள்... | 25 |
| ஆஸியில் வெறுப்புப் பேச்சு.... | 30 |
| ஆரணி என்கிற (சிறுகதை)... | 33 |
| இலங்கைத் தமிழரசு... | 36 |
| தமிழின்றி நாமில்லை (கவிதை)... | 39 |
| போர்க்காலத்தின்... | 40 |
| வலை... (நெடுங்கதை) | 42 |
| வேர்கள் (கவிதை)... | 45 |
| மலையக மண்ணில்... | 46 |
| காவியத் தடம் (சிறுகதை)... | 48 |
| தமிழ் இனத்தின்... | 51 |
| சுயநலம் (கவிதை)... | 53 |
| திருக்குறள் பற்றி... | 54 |




# திருக்குறள்

**குறள் 119:**

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்."

**விளக்க உரை:**

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவர்க்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவு நிலைமை.















# அகவை 5 இல் எழுநிலம்

பத்திரிகையில் கண்ட கண்ட கட்டுரைகளையும் போடாமல் தேர்ந்தெடுத்து போட்டிருப்பது வாசிக்கக்கூடியதாக உள்ளது. என்ன..? பெண்கள் பிரச்சனைகள், சமுதாயப் பிரச்சனைகள் தொடர்பாக குறைவான கட்டுரைகளே வருகின்றன. எந்த விடிவையும் தராத அரசியல் கட்டுரைகளைத்தான் வாசித்துக் கொண்டிருக்கிறோம். கிழக்கின் பிரச்சனைகள் அனேகமாக வருவதே இல்லை எனலாம். தயவு செய்து அந்தப் பக்கத்தைக் கவனியுங்கள்.

**-சம்யுக்தா வர்ணீஷ்**
**வெல்லிங்ரன், நியூசிலாந்து.**

வடக்கில் முதலீட்டுக்கான உச்சி மாநாடு நடந்தது சரி, முதலீடு நடக்குமா? அதனால் தமிழர்களுக்கு நன்மை விளையுமா? அல்லது பெரும்பான்மை இனத்தவரையும் அந்நிய சக்திகளையும் உள்ளே கொண்டுவந்து,
தமிழர் குடிப் பரம்பலைச் சிதைத்து, தமிழரின் தாயக நிலம் என்ற கோட்பாட்டையே மாற்றும் நீண்டகாலத் திட்டமா என்று யோசிக்கத் தோன்றுகிறது.
இருப்பவர்களிலேயே பெருங் கள்ளர் இந்த ஆட்சியில் இருப்போர். இந்த சோழியர்களின் குடுமி சும்மா ஆடுமா?

**பிரணவன் சுவாமிநாதன்**
**ஒட்டாவா, கனடா**

ராஜீ எழுதிய கட்டுரை மனசாட்சியை உலுக்குவதாக அமைந்திருக்கிறது. அதற்கு ஏற்ற படங்கள் வேறு. முட்கம்பிகளின் பின்னால் இருந்த வாழ்க்கையை மறந்து, எங்களுக்காக உயிரை விட்ட இளங் குருத்துகளை மறந்து இப்படி அலைகிறார்களே.
இவர்களுக்காகவா அத்தனை பேரும் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தார்கள் என்று தோன்றுகிறது. வழமைபோல பத்திரிகை மனதைத் தொடும் கனதியுடன் வந்திருக்கிறது. கவிதைகள், கதைகள்கூட மனதைத் தொட்டு நிற்பது சிறப்பு. பிரபா அன்புவின் சிறுகதை. ஐயோ! மனதை ரணமாக்கி விட்டது.

**சேரலாதன் சிவநாதன்**
**பார்சிலோனா, ஸ்பெயின்.**




எழுநிலம் மணம் 56 பார்த்தேன். அட்டைப்படம் சொல்லும் கேவலமான கதை மனவருத்தம் தருவதாக இருக்கிறது. மாவீரங்கள் விதைந்த மண்ணில் செல்ஃபிக்காக அலையும் கூட்டம் திருந்த வாய்ப்புள்ளதா? 2ம் பக்க கவிதையில் அவர்கள் எண்ணம் அருமையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆசிரியர் தலையங்கம் நச்சென்று மனதைக் குடைவது போல சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு வேண்டுகோள். ஒவ்வொரு பத்திரிகையிலும் திருக்குறள் ஒன்றை விளக்கத்துடன் தருவது போல தமிழ்ப்பா ஒன்றை விளக்கத்துடன் தருவதற்காக ஒரு பக்கத்தை ஒதுக்கினால் என்ன?

**-வயிரமுத்து அம்பலவாணர்**
**சவுத்ஹால், இங்கிலாந்து**

எங்கள் அரசியல்வாதிகளின் நடத்தையைப் பார்த்தால் எங்களை நாங்களே செருப்பால் அடித்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு பதவிக் கதிரைகளும் வேண்டும், யாரையும் பகைத்துக் கொள்ளாமல், நோகாமல் கதைக்கவும் வேண்டும், தமிழ் மக்களின் பிரச்சனைகளும் தீரக் கூடாது. என்னையா இது? ஒட்டு மொத்தமாக எங்கள் தமிழ் அரசியல்வாதிகளைத் தலை முழுகினாலாவது நாங்கள் கொஞ்சம் நிம்மதியாகச் சுவாசிக்கலாம். கேடுகெட்ட சிங்களனே மேல் என்பதுபோல் ஆக்கி விட்டார்கள். இதில் சுமந்திரனா, சாணக்கியனா, சிறிதரனா பெரிது என்ற போட்டி வேறு. இங்கு அரசியல் என்று எதுவுமே நடக்கவில்லை.
எந்த அநியாயத்தையும் அவர்கள் தட்டிக் கேட்கவுமில்லை. தவறுகளுக்கு துணை போகிறார்கள். இதுவும் தாயகத்தில் தமிழ்மக்கள் திசைமாறிய வாழ்க்கை வாழ்வதற்கு ஒரு காரணம்.

**-நொந்துபோன தமிழன்**
**தாயகம்.**

மாதமொருமுறை வரும் எழுநிலம் பத்திரிகை வாரம் ஒருமுறை வந்தாலென்ன என்று கேட்கும் அளவுக்கு தரமான பத்திரிகையாக வருகிறது. சிலசில குறைகள் இருந்தாலும் அவற்றைக் கேட்டு அதைத் திருத்திக்கொள்ளும் உங்கள் பாங்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இவ்வளவு சிறப்பாகச் செயற்படும் ஆசிரியர் குழுவிற்கு எங்கள் வாழ்த்துகள். புத்தகத்தைப் புரட்டிப் பார்ப்பது போன்ற வடிவிலும் தருவது கூடுதல் சிறப்பு. வடிவமைப்பு, அட்டைப்படம் எதிலும் குறை சொல்ல முடியவில்லை. அநுரவின் படங்களை பக்கத்துக்குப் பக்கம் பிரசுரிப்பதை மட்டும் விட்டு விடுங்களேன். உங்களுக்குப் புண்ணியமாகப் போகும்.

**-தமயந்தி நடராசா**
**ஹைதராபாத், இந்தியா.**

மணம் 56 வாசித்தேன். கதைகள், கவிதைகள் அத்தனையும் அருமை. முல்லை பாஸ்கர் வித்தியாசமான கோணத்தில் பார்த்து கவிதை தருவது நன்று. போர்சார்ந்த காவியங்களாக பெரும்பான்மை ஆக்கங்கள் இருப்பதானது எமது இருப்பை உறுதியாக எடுத்துக் காட்டுகிறது. வலை நெடுங்கதை மிகச் சிறப்பாகப் போகிறது. தமிழை சரி வரப் புரிந்துகொள்ள முடியாத எனது பிள்ளைகளுக்கு கதைகள், கவிதைகளை வாசித்துக் காட்டி விளக்க என்னால் முடிகி றது. கட்டுரைகள் அப்படியல்ல. அதனால் கதை, கவிதைகள் ஒரு தகவலைச் சொல்லும் ஆக்கங்களாக இருப்பது மகிழ்ச்சி.

**-சுபாங்கி ரமணன்**
**பேர்ளின், ஜேர்மனி.**

ஈழவன் அனுராஜ் இம்முறை வித்தியாசமான ஒரு கவிதை தந்திருக்கிறார். பொழிலின் கவிதைகள் எப்போதும் போர்க்குணம் சார்ந்ததாக அதற்குள் ஒரு துயரம் இழையோடுவதாக இருக்கின்றன. சிறுகதைகள் எப்போதுமே சிறப்பான கருத்துகளைத் தாங்கி வருகின்றன. ஒரு முன்னாள் போராளியின் கண்களுக்கூடாக தான் போராடிய சமுதாயத்தைப் பார்க்கும் வலை கதை எப்போதுமே என்னை வியக்க வைக்கும். ஒரு போராளியின் மனதில் என்ன ஓடும் என்று முன்பு நான் எண்ணியதுண்டு. அதற்குப் பதிலளிப்பதுபோல வலை கதை இருக்கிறது. ஐங்கரனின் கட்டுரைகளும் உலக விடயங்களை அறியத் தருகின்றன.

**-சிவராசா கணபதிப்பிள்ளை**
**பாரிஸ், பிரான்ஸ்.**




எழுநிலம் சஞ்சிகையின் கடந்த
மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின்
இணையத்தளத்தில்
இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

ஆசிரியர் பக்கம்

# கபளீகரம் செய்யப்படும் தமிழர் தாயகம்

எந்த சிங்கள அரசு ஆட்சியில் இருந்தாலும் தமிழர் தாயக நிலப்பரப்பை ஆக்கிரமிப்பு செய்து, தமிழர் தாயகத்தை இல்லாதொழிப்பதை திட்டமிட்ட வகையில் நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழர் குடிப்பரம்பலை சிதைக்கவென தமிழர் தாயக மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குகிறது.

வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையிலான சிங்களக் குடியேற்றம் மூலம் தாயக மண்ணை துண்டாடி 'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டை இல்லாதொழிக்க படாதபாடு படுகிறது.

முந்தைய இனவாத அரசுகளுக்கு தாங்களும் கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை, 'கிவுல் ஓய' என்ற ஆபத்தான திட்டத்தை மீண்டும் கையில் எடுத்து சிங்களக் குடியேற்றத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கும் அநுர அரசும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

ஆரம்பத்தில், ஒரு அபிவிருத்தித் திட்டம் என்று கூறப்பட்ட - மகாவலி கங்கை நீரை வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குக் கொண்டு வரும் மாவலி - எல் வலயத் திட்டம், வடமாகாண குடிப் பரம்பலை மாற்றியமைக்கும் உள்நோக்கத்துடனான சதி என்பதை தமிழ்மக்கள் புரிந்து பல ஆண்டுகளாகி விட்டன.

இருபோக விளைச்சல் கிடைக்கும் என்று தமிழர்களின் காதில் பூ சுற்றினாலும் உண்மையில், 1983 இல் குடியேற்றப்பட்ட சிங்களர்களின் நீர்த்தேவையை பூர்த்தி செய்யவும் சிங்கள குடியேற்றத்தை பெருப்பிப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட திட்டமே இது.

திட்டத்தின் குறைபாடுகள் காரணமாகவும், போரின் பின்னர் கிளம்பிய பல்வேறு எதிர்ப்புகள் காரணமாகவும் கிடப்பில் போடப்பட்ட இத்திட்டத்தை 2011 இல் புதிய மூலோபாயங்கள் மூலம் மறுபடியும் 'கிவுல் ஓய' என்ற பெயரில் புதுப்பிக்க முயற்சி எடுத்திருந்தார்கள். அதன் திருத்திய வடிவத்தைத்தான் இப்போது அநுர அரசு கையில் எடுத்து மீண்டும் தமிழர்கள் வாழ்வை சிதைக்க முயற்சிக்கிறது.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் அடையப்போகும் நன்மைகளை விட கிடைக்கும் தீமைகளின் பட்டியல் மிகவும் நீளமானது.

குடிப்பரம்பல் தீவிரமடையும், பல நூற்றாண்டுகள் கடந்த - ஆதித் தமிழனின் அடையாளத்தை பறைசாற்றும், வன்னி இராச்சியத்துடன் தொடர்புடைய தொன்மங்கள், தொல்பொருள் பகுதிகள் அழிக்கப்படும்.

பாரிய வெள்ள அனர்த்தங்கள் ஏற்படும், சுற்றுச் சூழலின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும், பல்லாயிரம் ஏக்கர்கள் நிலப்பரப்பில் அமைந்துள்ள காடுகள் அழிக்கப்படும், இதனால் மழைவீழ்ச்சி பாதிக்கப்படும், காடுகள் அழிக்கப்படுவதனால் யானைகள் போன்ற விலங்குகள் மனிதக் குடியிருப்புகளினுள் நுழைந்து உயிராபத்துகளை விளைவிக்கும். என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

காட்டுப் பூவரசங்குளம், வெடிவைத்த கல்லு, மருதோடை, காஞ்சிரமோட்டை, கூழாங்குளம் போன்ற கிராமங்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கும். இராமன்குளம், வேலன்குளம் போன்ற சிறிய நீரேந்து பகுதிகளும் முழுமை யாக மூழ்கும். பெரியகட்டிக்குளம் காடுகள் முற்றாக அழியும், மொத்தத்தில் 2500 ஹெக்டர் காடுகள் அழிக்கப்படும்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் வயல் நிலங்களை அரசு பறிமுதல் செய்து இத்திட்டத்திற்கு வழங்குவதால் மக்களின் வாழ்வாதாரம், இருப்பிடம் என்பன நிரந்தரமாக கேள்விக்குறியாகின்றன. இத்திட்டத்திற்காக முல்லைத்தீவு எல்லைக் கிராம மக்கள் வெளியேற்றப் படுகின்றனர்.

காடுகள் அழிப்பினால் மழைவீழ்ச்சி குறைந்து நீண்ட காலத்தில் தமிழர் பகுதி வரட்சியடையும் என்பதும், வெள்ள அனர்த்தங்களால் தமிழ்க் கிராமங்கள் முற்றாக மூழ்கும் என்பதும், விரட்டப்பட்ட மக்கள் போக்கிடமின்றித் தவிப்பார்கள் என்பதும் சிங்கள அரசுக்குத் தெரியும்.

அதனால்தான் திட்டமிட்டபடி விடுவிக்கப்படாத தமிழர் பிரதே சங்களை இத் திட்டத்திற்கு ஒதுக்கி அங்கு சிங்களவர்களை மட்டும் குடியேற்றி, அவர்களுக்கான அத்தனை வசதி களையும் செய்து கொடுத்து பாதுகாக்கிறது. வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில் அமையும் இந்த சிங்களக் குடியேற்றம் வடக்கையும் கிழக்கையும் முற்றாகத் துண்டாடி விடும்.

இந்த ஆபத்தான குடியேற்றத்தைப் பற்றி எத்தனை தமிழர்கள் அறிந்திருக்கிறார்கள்? ஏதோ எல்லையில் உள்ள கிராமங்களில் நடக்கிறது, எமது காலடிக்கு பிரச்சனை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருப்ப தனால்தான் சிங்கள அரசுகளால் எதிர்ப்புகள் இன்றி சிங்களக் குடியேற்றங்களைத் தீவிரப்படுத்த முடிகிறது. என்று விழிப்புடனும் ஒற்றுமையாகவும் செயற்படுகின்றோமோ அன்றுதான் எமக்கான பாதையை உருவாக்கிக் கொள்ள முடியும்.



ராஜ்

# சுவிஸ் தூதரகத்தின் அழைப்பும் தமிழ் தலைவர்களின் தெருச்சண்டையும்



**தேசிய** இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் காலத்துக்கு காலம் தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகளின் தலைவர்கள் கரிசனை கொண்டு செயற்படுவதாக காண்பித்து வந்தாலும், அதற்கான சரியான பாதையை தேர்வு செய்து ஓரணியாக பயணிப்பதில் பிளவுபட்டு நின்றதே வரலாறு. அந்தக் கறை படிந்த வரலாறு இன்றும் தொடர்வதே பெரும் சோகமாகும்.

இலட்சக்கணக்கான உயிர்களை இழந்த பின்னரும், கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்த பின்னரும், ஆயிரக்கணக்கான மக்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் பல ஆயிரக்கணக்கான உறவுகள் தேடி அலைந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் தலைவர்கள் தங்களை இன்னும் திருத்திக் கொள்ளவில்லை என்பது பெரும் சாபக்கேடாகும்.

77 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சமூகம் தன்னுடைய இருப்புக்காகவும் உரிமைகளுக் காகவும் போராடி வரும் சூழலில், அந்த இனம் எந்தளவுக்கு பக்குவப்பட்டிருக்க வேண்டு மென்பது வரலாற்று சம்பவங்கள் பல எம்முன் இருக்கின்றன.

ஆனால், அந்த சமூகம் மீண்டும் மீண்டும் பிற்போக்குத்தனமான சிந்தனையை நாடுவது என்பது அல்லது மீண்டும் மீண்டும் தவறுகளை செய்வது என்பது அந்த இனம் உண்மையிலேயே இதுவரை காலமும் போராடிய போராட்டங்களில் சந்தேகங்களை ஏற்படுத்துவதாகவே அமையும்.

தேசிய இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பிராந்திய - சர்வதேச அரசுகளின் ஈடுபாடும் கரிசனையும் நிலையானதாகவே காணப்பட்டு வந்திருக்கிறது - வருகின்றது. இந்தியா, நோர்வே

**தமிழர்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியத் தலைமைகள் ஒரு தெளிவுக்கு வரவேண்டும். அந்தத் தெளிவு தான் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு பாதையை திறந்து வைக்கும். வெறுமனே அவர்களுடன் பேசுகிறோம், இவர்களுடன் பேசுகிறோம், அந்த நாடு எங்களுக்கு அனுசரணை தருவார்கள் என்று வாய்ச்சவடால் விட்டு ஒரு சமூகத்தின் - ஒரு இனத்தின் தேச விடுதலைக்கான கனவை குழிதோண்டி பறிப்பதை நிறுத்திவிட வேண்டும்.**

வரிசையில் 2009 யுத்த மௌனிப்புக்கு பின்னர் சுவிற்சர்லாந்தும் தமிழ் மக்களுடைய விவகாரத்தில் ஏதோவொரு வகையில் பின்னிப் பிணைந்ததாகவே இருந்து வருகிறது.

குறிப்பாக ஜெனீவா அமர்வு என்பது 2009 இற்கு பின்னர் ஈழத்தமிழ் மக்களுடன் பின்னிப் பிணைந்ததாகவே இருந்து வருகிறது. குறிப்பாக 2009 இற்கு பின்னர் தமிழ் மக்கள் ஜெனீவா என்ற இடத்தை உச்சரித்ததே அதிகம். இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் இலங்கையிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகம் தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கு அண்மையில் ஒரு அழைப்பை விடுத்திருந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் அனைத்தையும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு கொண்டுவரும் நோக்கில் இந்த அழைப்பை சுவிட்ஸர்லாந்து தூதரகம் விடுத்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் இந்த சந்திப்பு தற்சமயம் பிற்போடப் பட்டிருக்கிறது.

இலங்கை - சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிட்ஸர்லாந்து அரசின் ஏற்பாட்டில் அந் நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு தெளிவூட்டும் வகையிலான செயலமர்வு ஒன்று கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்றது.

அந்தச் செயலமர்வில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, பிரதி அமைச்சர் முனீர் மௌபப்ர், நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம ஹெட்டியாராச்சி, நிலாந்தி கொட்டஹச்சி, சமன்மலி குணசிங்க ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவலவும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கமும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரளவும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் டபிள்யூ. ரி.பத்மா மஞ்சுளவும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கான ஒருங்கிணைப்பு செயலாளருமான கபிலன் சுந்தரமூர்த்தியும் கூட கலந்து கொண்டிருந்தனர். அந்தச் செயலமர்வின்போது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இரு தரப்பு உறவுகள், சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி (பெடரல்) முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புகளில் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. இக் கலந்துரையாடல்களின் போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சகல தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம் என்ற விடயம் சுவிஸ் தூதரகத்திடம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.




அதன் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனையும் அழைத்து குறித்த செயலமர்வு தொடர்பிலும் விளக்கம் அளிக்கப்பட்டிருந்த நிலையில்தான் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஒருங்கிணைப்பில் ஒரு கூட்டு சந்திப்பை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் உடன்பட்டிருந்தது.

அதனை பெப்ரவரி 19 ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சாணக்கியன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன் மற்றும் ப. சத்தியலிங்கம் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சி தீர்மானிக்கும் பிறிதொருவரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கூட்டணி தீர்மானிக்கும் பிறிதொருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், குறித்த சந்திப்பு தற்சமயம் திகதி அறிவிக்கப்படாது பிற்போடப் பட்டிருக்கிறது. காரணம், குறித்த கூட்டத்தில் பங்குபற்றவிருந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள் தாமும் உள்ளடங்கிய தமிழ்த் தேசிய பேரவையின் பெயரில் அதேபோன்ற கூட்டம் ஒன்றை 19 ஆம் திகதிக்கு முன்னர் அதாவது பெப்ரவரி 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முயற்சி எடுத்த





பின்னணியில், தன்னுடைய இந்த சந்திப்பை இடைநிறுத்தம் செய்வதாக சுவிஸ் தூதரகம் அறிவித்திருந்தது.

ஆனாலும் இந்த சந்திப்பு நடைபெறாமல் போனதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தான் காரணம் என சுமந்திரனும் சுமந்திரன் தான் மேற்படி சந்திப்பை நிறுத்தியிருக்கிறார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தெருச்சண்டை போட்டிருந்தார்கள்.

இராஜதந்திர ரீதியில் நகர்த்த வேண்டிய ஒரு சந்திப்பை தெருக்கூத்தாக மாற்றிய தலைவர்கள் தான் இன்று ஈழத் தமிழர்களின் தலைவர்களாக இருக்கிறார்கள் என்பது எத்தனை கேலிக்கூத்தாகும். 2009 இற்கு பின்னர் தமிழ்த் தேசியத் தலைவர்கள் தேர்தல் அரசியலுக்காக தங்களை தயார்படுத்துவதில் ஈடுபட்டார்களே தவிர, நொந்துபோன இனத்துக்கு ஒரு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு ஆத்மார்த்த ரீதியாக பணியாற்றவில்லை என்பது உலகம் அறிந்த உண்மை.

இராசதந்திரம் இல்லை, சமூக பொறுப்பு இல்லை, இன விடுதலைக்கான வேலைத்திட்டங்கள் இல்லை. இவ்வாறு எந்த அடிப்படை தேவைகளும் இல்லாமல் வெறுமனே தேர்தல்களை நோக்கமாக கொண்டதாகவும் அதற்கான தயார்ப்படுத்தல்களுக்காக பிரிந்து நின்றுகொண்டு தெருச்சண்டை ரவுடிகளை போல் ஒருவரை ஒருவர் விமரிசிப்பதுவுமே கடந்த 17 ஆண்டு காலமாக ஈழத் தமிழருடைய தலைமைகள் என்று கூறிக்கொண்டவர்கள் செய்த சாதனை யாகும்.

இத்தனை அழிவுகளை சந்தித்தும் - ஒரு பொறுப்புக் கூறலுக்காக காத்திருக்கும் நாங்கள் (தமிழர்கள்) இன்றுவரை எந்தவொரு நாட்டோடும் நெருக்கமாக செல்ல முடியாததற்கு எங்கள் மத்தியில் இருக்கின்ற இராஜதந்திரமற்ற - வெறுமையான அரசியல் அறிவின்மையே பிரதான காரணமாகும்.

இந்தியா என்று கூறுகிறோம். ஆனால் இந்தியாவுடன் நாங்கள் எந்தளவுக்கு நெருக்கமாக செயற்படுகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமெரிக்கா என்கிறோம், ஜெனீவா என்கிறோம், இங்கிலாந்து என்கிறோம், கனடா என்கிறோம். ஆனால், இவர்களுடன் எந்தளவுக்கு எங்களுடைய உறவு - நகர்வு - இராஜதந்திர நட்பு இருக்கிறது என்று எந்தவொரு தலைவராலும் பொதுமேடையில் வந்து பேச முடியுமா?

இல்லை, தமிழர்களுக்கு இதுதான் தீர்வு என்று ஒட்டுமொத்தமாக தமிழ்த் தலைமைகள் ஒரே குரலில் ஒரு சர்வதேச நாட்டுடன் பேசும் சூழல் இருக்கிறதா? இல்லை. சுவிஸ் தூதரகத்தின் அழைப்பை குழப்பியதிலும் இந்த முரண்பட்ட அல்லது ஒருமித்த நிலைப்பாடு இல்லாததே பிர தான காரணமாக இருக்கிறது.

ஆகவே முதலில், தமிழர்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியத் தலைமைகள் ஒரு தெளிவுக்கு வரவேண்டும். அந்தத் தெளிவு தான் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு பாதையை திறந்து வைக்கும். வெறுமனே அவர்களுடன் பேசுகிறோம், இவர்களுடன் பேசுகி றோம், அந்த நாடு எங்களுக்கு அனுசரணை தருவார்கள் என்று வாய்ச்சவடால் விட்டு ஒரு சமூகத்தின் - ஒரு இனத்தின் தேச விடுதலைக்கான கனவை குழிதோண்டி பறிப்பதை நிறுத்திவிட வேண்டும்.

இனத்துக்கான அரசியலை முன்னெடுக்கும் தலைவர்களாக இவர்கள் மாறாதவரை அல்லது அவ்வாறான தலைவர்களை ஈழத்தமிழர்கள் இனம் காணாதவரை ஈழத் தமிழினம் இன்னும் பல நூறாண்டுகள் வரை தங்களது அபிலாஷை களுக்காக காத்திருக்கத்தான் வேண்டும்.




**இராசதந்திரம் இல்லை, சமூக பொறுப்பு இல்லை, இன விடுதலைக்கான வேலைத்திட்டங்கள் இல்லை. இவ்வாறு எந்த அடிப்படை தேவைகளும் இல்லாமல் வெறுமனே தேர்தல்களை நோக்கமாக கொண்டதாகவும் அதற்கான தயார்ப்படுத்தல்களுக்காக பிரிந்து நின்றுகொண்டு தெருச்சண்டை ரவுடிகளை போல் ஒருவரை ஒருவர் விமரிசிப்பதுவுமே கடந்த 17 ஆண்டு காலமாக ஈழத் தமிழருடைய தலைமைகள் என்று கூறிக்கொண்டவர்கள் செய்த சாதனையாகும்.**




# மாகாண சபை தேர்தலில் ஒரு திருப்புமுனை

ராஜ் சிவநாதன்

**சுவிஸ்** தூதரகத்தின் முன்னெடுப்பில் நடைபெற இருந்த தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையேயான சந்திப்பு காலவரையற்ற முறையில் ஒத்தி வைக்கப்பட்டிருப்பது, இலங்கையின் மாகாண சபை அமைப்பின் எதிர்காலம் குறித்து புதிய விவாதத்தை தூண்டியுள்ளது.

ஆரம்பத்தில் இது தமிழ் அரசியல் ஒற்றுமையை உருவாக்கும் ஒரு தூதரக முயற்சியாக தோன்றினாலும், அது தமிழ் அரசியலின் ஆழமான கட்டமைப்பு முரண்பாடுகளை வெளிக் கொணர்ந்ததுடன், தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் அரசியல் கணக்கீடுகளையும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வை தனித்த சம்பவமாக பார்க்க முடியாது. இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு விரிவான அரசியல் மாற்றத்தின் ஒரு பகுதியாகும்.

## ஒத்திவைப்பு, அரசியல் காலநிலை மற்றும் தமிழ் பிரதிநிதித்துவத்தின் எதிர்காலம்

முன்மொழியப்பட்ட சந்திப்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC), இலங்கை தமிழ் அரசு கட்சி (ITAK) மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (DTNA) ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ் அரசியல் நடிகர்களிடையே ஒற்றுமையை உருவாக்குவதே இதன் நோக்கமாக கூறப்பட்டது.

ஆனால் அழைக்கப்பட்ட தரப்புகளின் அமைப்பும், விவாதங்களின் திசையும் பல நியாயமான கேள்விகளை எழுப்பின. மாகாண சபை அமைப்பை நிராகரிக்கும் ஒரு ஒருங்கிணைந்த முடிவு உருவாகி, அதற்கு பதிலாக அதிகபட்ச கூட்டாட்சி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தால், அது தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டவையோ அல்லது அரசியல் ரீதியாக நடைமுறைசாரா கோரிக்கைகளை முன்வைப்பவையோ என கொழும்பின் வாதத்தை வலுப்படுத்தியிருக்க வாய்ப்புண்டு.



இந்த ஒத்திவைப்பு உடனடிப் பதற்றத்தை தவிர்த்தாலும், தமிழ் அரசியல் ஒருங்கிணைப்பு எவ்வளவு நெகிழ்வான நிலையில் உள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

13 வது திருத்தச்சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை அமைப்பு இன்னும் அரசியலமைப்பில் பதியப்பட்டதாகவே உள்ளது. அதை நீக்கும் எந்த அதிகாரப்பூர்வ முயற்சியும் தற்போதைய NPP அரசாங்கத்தால் முன்வைக்கப் படவில்லை. இருப்பினும் தேர்தல்கள் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையிலான ஆட்சி ஒரு சிக்கலான சமநிலையை கையாள வேண்டியுள்ளது. தெற்கு வாக்காளர் ஆதாரம் விரிவான அதிகாரப் பகிர்வில் எச்சரிக்கையாக உள்ளது. அதே சமயம் சீர்திருத்தவாத நம்பகத்தன்மை ஜனநாயக அங்கீகாரத்தில் தங்கியுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் NPP-யின் செல்வாக்கு வளர்ந்து வருகிறதாலும், அது இன்னும் கட்டமைப்பாக வலுவடைந்ததில்லை.

இந் நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்துவது அரசியல் அனிச்சையை உருவாக்கக் கூடும். பிளவுபட்ட அல்லது எதிர்க்கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் மாகாண முடிவுகள் மத்திய நிர்வாக கட்டுப்பாட்டை குறைக்கக்கூடும். எனவே, தேர்தல் ஒத்திவைப்பு ஒரு கொள்கை மாற்ற முயற்சியாக அல்லாமல், அரசியல் காலநிலையை கணக்கிட்டு மேற்கொள்ளப்பட்ட தந்திரமாகவே தெரிகிறது.

இதே நேரத்தில் தில்வின் சில்வாவின் இந்திய விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியாவின் நிலைப்பாடு தெளிவானது. 13 வது திருத்தச்சட்டம் தளர்த்தப்படக் கூடாது; அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு நீண்டகால நிலைத்தன்மைக்கு அவசியமானது.

இந்த சந்திப்பு பல நோக்கங்களைக் கொண்டிருக்கக் கூடும்: அரசியலமைப்பு அதிகாரப் பகிர்வு திரும்பப் பெறப்படாது என்ற உறுதிப்பாடு, இருதரப்பு அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை பாதுகாத்தல், மற்றும் உள்நாட்டு அரசியல் கணக்கீடுகளின் போது பிராந்திய பார்வைகளை நிர்வகித்தல்.

இந்தியா தாமதத்தை பொறுத்துக் கொள்ளலாம்; ஆனால் அமைப்பு பின்னடைவைக் கடைப்பிடிக்காது. இது அரசாங்கத்தின் விருப்பங்களை கட்டுப்படுத்துகிறது.

தமிழ் அரசியல் தரப்புகள் தன்னாய்வை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. அதன் குறைபாடுகள் இருந்த போதிலும், மாகாண சபை அமைப்பு தற்போது அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே அதிகாரப் பகிர்வு நடைமுறை அமைப்பாகும்.

நடைமுறை ஈடுபாடு மற்றும் சின்னார்த்த அதிகபட்ச கோரிக்கைகள் என்ற இரு துருவங்களுக்கிடையே தமிழ் கட்சிகள் பிளவுபட்டிருப்பின், அது அரசாங்கத்தின் மீது உள்ள அழுத்தத்தை குறைக்கும்.

வடக்கு மற்றும் கிழக்கின் அரசியல் சூழல் மாறிக் கொண்டிருக்கிறது. நிலம், பொருளாதார மீட்பு, இளைஞர் வாய்ப்புகள் மற்றும் நிர்வாக திறன் ஆகியவையே இப்போது வாக்காளர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. இது எதிர்பார்ப்புகளில் தலைமுறை மாற்றத்தை சுட்டிக்காட்டுகிறது.

மூன்று சாத்தியமான நிலைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

**முதலாவது**: NPP தமிழ் பெரும்பான்மை பகுதிகளில் தனது நிலையை வலுப்படுத்தினால், தன்னம்பிக்கையுடன் தேர்தலை அறிவிக்கலாம்.

**இரண்டாவது**: அரசியல் அனிச்சை நீடித்தால், தேர்தல் ஒத்திவைப்பு தொடரலாம்; இது ஜனநாயக சோர்வை உருவாக்கும் அபாயம் உள்ளது.

**மூன்றாவது**: தற்போதைய அமைப்பை செயல்படுத்தி வலுப்படுத்தும் நோக்குடன் புதிய தலைமுறை தமிழ் அரசியல் தலைவர்கள் உருவாகலாம்.

அடுத்த சில மாதங்கள் தீர்மான காலமாக இருக்கும். மாகாண சபை கேள்வி இனி அரசியலமைப்பு கோட்பாடு மட்டும் அல்ல. அது அரசியல் முதிர்ச்சி, நேரம் மற்றும் நம்பகத்தன்மையை பற்றியது.

NPP தன் ஒத்திவைப்பு சீர்திருத்தக் களஞ்சியத்தை வலுப்படுத்துகிறதா அல்லது பலவீனப்படுத்துகிறதா என்பதை தீர்மானிக்க வேண்டும். தமிழ் அரசியல் தரப்புகள் பிளவு நீண்டகால நலனுக்கு பயன் படுகிறதா என்பதை ஆராய வேண்டும்.

சுவிஸ் முயற்சி ஒத்தி வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அனைத்து தரப்புகளின் தலைமையையும் தரத்தையும் சோதிக்கும் பெரிய பரீட்சை இப்போது தான் தொடங்கியுள்ளது.

இந்த திருப்புமுனையில், இலங்கை எச்சரிக்கையான நடைமுறை அரசியலுக்கும் நீண்டகால அனிச்சைக்கும் இடையில் ஒரு தேர்வை எதிர்கொள்கிறது. அந்தத் தேர்வே மாகாண சபைகளின் எதிர்காலத்தையும், தமிழ் அரசியல் பிரதிநிதித்துவத்தின் தரத்தையும் தீர்மானிக்கும்.



# இறைவி



உன்னை விட சிறந்தவர்
எவருமில்லை.
உன்னை நம்பு!
ஒரு உயிரை உருவாக்க
உன்னால் மட்டுமே முடியும்!!

பெண்ணே...!!
உன்னால் எதுவும் முடியும்.
நீ உலகை ஆளப் பிறந்தவள்!

சில விதைகள் கூட
கொதிநீரில் இட்டால் மட்டுமே
முளை விடும்.
அவை வலியன.
வாடி விடுவதில்லை..
நிலத்தை பிளக்கும்.

நீ களத்தில் குதிக்க
கையில் வாள் மட்டும்
போதாது!
நம்பிக்கை வேண்டும்!

நீ ஆக்கத் தெரிந்தவள்.
சமையலை மட்டுமல்ல...
சமுதாயத்தையும்!!

அன்புடன் முல்லை பாஸ்கர்

# பெப்ரவரி 4: கரிநாள்




நவீனன்

# தமிழர்களுக்கான உரிமை மறுக்கப்பட்ட சிறிலங்காவின் சுதந்திர தினம்

**1948 பெப்ரவரி** 4 இல் ஆங்கிலேயர் இலங்கைக்கு சுதந்திரம் அளித்துச் சென்ற நாள். ஆனால், அந்த நாளை சிங்கள தேசம் தனக்கு மட்டுமே சுதந்திர நாளாக்கி, தமிழ் இனத்தை அடிப்படுத்தி, அதை தமிழருக்கான கரிநாள் ஆக்கியது.

காலங்காலமாக இது தொடர்கின்றது. அடக்கு முறைகளின் ஒரு கட்டமாக 1956 தனிச் சிங்களச் சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியது. சிங்களம் அரச மொழியானதால் பல தமிழ் அரச உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இந்த அநீதிகள் அரங்கேறிய அதேநேரம், தலைநகர் கொழும்பில் தமிழர்கள் மீது இனஅழிப்பு கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழர்கள் முதுகில் சிங்கள ஸ்ரீ சூடுவைக்கப்பட்து.

பச்சைக் குழந்தைகள், வயோதிபர்கள் என்ற வித்தியாசம் இன்றி, கொதிக்கும் தார்ப் பீப்பாய்க்கள், தோசைக்கல் என்பவற்றில் அவர்கள் போடப்பட்டனர்.

தமிழர்கள் உரிமைக்காக குரல் கொடுக்கும் போதெல்லாம் இன அழிப்பு என்னும் பயங்கரத்தை மேற்கொண்டு தமிழர்கள் உணர்வுகள் அழிக்




கப்பட்டன. மேற்படி எல்லாத் தடைகளையும் தாண்டி, மக்களின் பேராதரவுடன் மேற்கொள்ளப்பட்ட தாயக விடுதலைப் போராட்டம் கூட 2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கச் செய்யப்பட்டது.

1948-இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றாலும், தங்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்றும், உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளாக்கப் படுவதாகவும் தமிழர்கள் உணர்கின்றனர். இதனால் இலங்கை சுதந்திர தினத்தை தமிழர்கள் துக்க நாளாகவும், கறுப்பு தினமாகவும் கருதி தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்தாலும், அது தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டவில்லை என்ற அடிப்படையில், ஈழத்தமிழர்கள் மத்தியில் இது ஒரு கறுப்பு நாளாகவே பார்க்கப்படுகிறது. ஆண்டுதோறும், குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் மற்றும் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்கள் இந்த




தினத்தில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை நடத்தி, கறுப்புக்கொடி ஏந்தி தங்களின் துயரத்தை வெளிப்படுத்துகின்றனர்.

தமிழர்களின் நில அபகரிப்பு, அரசியல் உரிமைகள் பறிப்பு, மற்றும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத நிலை போன்றவற்றால், இந்த நாள் ஒரு போராட்ட தினமாகவே கருதப்படுகிறது. இதனாலேயே சிறிலங்காவின் சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாளாக தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

சிங்களவர்களின் சுதந்திர தினத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டங்களும், பேரணிகளும் தமிழர் தாயகம் எங்கும் காலங்காலமாக முன்னெடுக்கப் பட்டுவந்துள்ளன. தமிழர்கள் வரலாற்றில் கறைபடிந்த வடுக்களைப் பதிவாக்கிக் கொண்ட இனக் கலவரங்களையும், இனப் படுகொலைகளையும் உருவாக்கிய சிங்கள அரசுகளின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் கரிநாளாக அனுஸ்டிக்கின்றனர்.

சிறிலங்காவின் சுதந்திரதினம் என்பது சிங்களவர்களிற்கானது என்று ஆக்கப்பட்டபோது நாட்டின் சுதந்திர தினம் சிறுபான்மைத் தமிழ் மக்களிற்கு வேதனைக்குரிய நாளாகிப் போனது. சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பதே ஒரேவழி என்று தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே முடிவு செய்து அதைக் கடைப்பிடிக்கின்றனர்.

தமிழர்க்கான சுதந்திரத்தை தர மறுத்துவிட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள் என்றால் அது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்? பிரித்தானிய காலனியாதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பெப்ரவரி நான்காம் தினமே முன்னைய இலங்கையின் (Ceylon) சுதந்திர தினமாக அனுஷ்டிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

## தமிழர் இரண்டாம் தர பிரஜைகளா?

ஆயினும் இன்றைய சிறிலங்காவில், (Sri Lanka) சிங்களவர்களுக்கு சுதந்திரம் கிடைத்து பல வருடங்கள் ஆகினாலும், சிறுபான்மையின தமிழர் இரண்டாம் தர பிரஜைகளாக அல்லது ஏதிலிகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கான தேசிய எழுச்சி பிரித்தானிய காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வடிவத்திலும் பரந்துபட்ட மக்களை இணைத்து நடாத்தப்பட்ட போராட்டமாகும். இந்தியாவின் போராட்டத்தின் பக்க விளைவுகள் இலங்கையிலும் பிரதிபலித்ததாய் இருந்தது என்பதே சாட்சியமாகும்.

ஆங்கிலேயர்கள் பிரித்தானிய நவ காலனித்துவ சுரண்டல் முறைமைக்கு தம்மை மாற்றிக் கொண்டு இந்தியாவை விட்டு வெளியேறும் போது இலங்கையையும் விட்டு வெளியேறினர். உண்மையில் இலங்கை தனது சுதந்திரத்திற்காக இந்தியா அளவிற்கு போராடவில்லை. இலங்கையின் சுதந்திரத்திற்காக தமிழ் மக்கள் செய்த பங்களிப்பும் தியாகங்களும் அளப்பரியதாகும்.

பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ரவரி நான்கில் கிடைத்த இலங்கையின் சுதந்திரம் தமக்கான சுதந்திரம் என்று தமிழர்களால் உணரப்படாமல் தள்ளிப் போனமைக்கான முக்கிய காரணமாக ஆட்சியாளர்களின் விரோத இனத் துவேசம் அமைகின்றது.

பிரித்தானியர் சுதந்திரத்தை வழங்கும் போது இலங்கையின் அனைத்து இனத்தவர்களுக்குமே வழங்கினராயினும் துரதிர்ஸ்டவசமாக இலங்கையின் சுதந்திரம் பௌத்த சிங்களவர்களுக்காக போனது காலத் துயரமே. இந் நிலைமையானது நாட்டின் சுதந்திரம் என்பது இலங்கையில் வாழும் ஒரு பகுதியினருக்கு மட்டுமே என்றாயிற்று.

பிரித்தானியர் இலங்கைக்கு வழங்கிய சுதந்திரத்தை தமதாக்கியவர்கள் நாடும் தங்களுடையது, ஆட்சியும் தமக்கானது என்று முடிவு செய்தனர். அதை நிலை நிறுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை சிங்கள அரசுகள் மேற் கொண்டன. அதன் ஒரு அம்சமாக தமிழர்கள் இரண்டாந் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டதுடன், தமிழர்கள் காலத்திற்குக் காலம் வஞ்சித்துத் தண்டிக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும் எழுந்து பேரினவாதிகளால் அடிமைப் படுத்தப்பட்டனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகத்தில் வாழும் சிறுபான்மையின தமிழ் மக்கள் தாம் இரண்டாம் தர பிரஜைகளாக வாழும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம் என்ற உணர்வலைகளுக்கு சிங்கள அரசுகளால் உள்ளாக்கப் பட்டனர்.

## தமிழீழ அரசின் நிர்வாகத் திறமை :

இதுவே இன்று வரை சுதந்திர தினம் சிறுபான்மை வடக்கு, கிழக்கு, மலையக தமிழ் மக்களால் கொண்டாடப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணமாக உள்ளது. ஆண்டாண்டு காலமாக சிங்கள அரசால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின தமிழ் மக்கள் தமது சம உரிமைகளை கோரி அகிம்சை, ஆயுதப் போராட்டம் என்று பல்வேறு வழிகளில் போராடி வந்தனர்.

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையை புரிந்து கொள்ளாத இலங்கை ஆளும் வர்க்கம் இவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி ஆயுத ரீதியில் ஒடுக்க முற்பட்டதன்

விளைவு தமிழீழ ஆயுத போராட்டமாக வீரியம் அடைந்தது. இருபது ஆண்டு காலம் தமிழீழ அரசின் நிர்வாகத் திறமையை முழு உலகிற்கே புலப்பட்டது.

சிறிலங்காவின் சுதந்திரம் என்பது தமிழரை ஒடுக்கும் ஒரு அரசின் கொண்டாட்டத் தினமே ஒழிய சிறுபான்மையின தமிழரின் கொண்டாட்டத் தினம் அல்ல என்ற உணர்வலைகளை மேலும் மேலும் அதிகரிக்க செய்தமை சிங்கள அரசின் கொடூர ஆட்சியே காரணமாகும்.

## சிங்கள அரச ஒடுக்குமுறை :

இதனாலேயே சிறிலங்காவின் சுதந்திர நாள் தமிழர் தாயகம் எங்கும் நீண்ட காலமாக பகிஷ்கரிக்கப்படும் ஒரு தினமாகவும் பரிணா மம் அடைந்துள்ளது. சிறிலங்காவில் தமிழர் உரிமை மறுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற உணர்வலை இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

போர் மௌனித்த 2009 முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னரும், சிங்கள பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதற்கு சிறிலங்கா அரசின் இனத்துவேச ஆட்சியே காரணியாகின்றது.

## தொடரும் சிங்கள குடியேற்றங்கள் :

இதேவேளை தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனுமதி வழங்காமல் சிங்கள குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள். தமது உரிமை களுக்காக போராடும் மக்கள் கைது செய்யப்பட்டு கொடூரமாக அச்சுறுத்தப் படுகிறார்கள்.

இவ்வாறு தமிழர் தாயக்கதில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக்குறியாகி உள்ள நிலை யில் சிறிலங்காவின் சுதந்திர நாளை

தமிழ் மக்கள் கரிநாளாக பிரகடனப்படுத்தி, தமது




எதிர்ப்பை சிங்கள அரசுக்குத் தெரிவிப்பதுடன் சர்வதேசத்துக்கும் தம் மக்களின் உண்மை நிலையை உரத்துக்கூறி வருகின்றனர்.

தமிழர்கள் தமது உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், தமது இருப்பை உறுதி செய்வதற்காக தாயக மண்ணில் தொடர்ந்தும் போராட வேண்டிய சூழ்நிலைக்கு சிங்கள அரசு தள்ளியுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி, தமிழ்க் கட்சி பேதங்களை கடந்து சகல தரப்பினரின் ஒத்துழைப்புடனும் சிங்கள அரசிற்கு எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

## தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமை:

கடந்த பல ஆண்டுகளாக சுதந்திர தினத்தை வெற்றி விழாவாக சிங்களவர்கள் நாங்கள் கொண்டாடுகிறோம், நீங்களும் தேசியக் கொடியைத் தூக்கிப்பிடிக்க வேண்டும் என்றால் இனமானம் உள்ள எந்தத் தமிழனும் செய்யப் போவது இல்லை.

தமிழ் இனத்தை அழித்துவிட்டு அந்த அழிப்பை, சிங்கள அரசுகள் வெற்றித் திருநாளாகக் கொண்டாடுவதை எப்படி எம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்?

பெப்ரவரி 4 ஆம் திகதி, சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து

தமிழ் மக்கள் எழுச்சி பயணத்தில் ஒன்றுகூட வேண்டிய வரலாற்றுக் கடமை ஈழத் தமிழ் மக்கள் அனைவருக்கும் உள்ளது.



# வாழ்க்கைப் பயணம்

நீ நடக்கும் பாதையில்
எத்தனை கற்கள் கிடந்தாலும்...
எத்தனை முட்கள் உனை
தைத்தாலும்....

நீ
நடந்து செல்லும் பாதை
உன் பாதங்களை
எவ்வளவு பதம் பார்த்தாலும்...
உன் பயணத்தின் இலக்கு
தொடர்ந்து கொண்டே இருக்கட்டும்!

வலியால் நடுங்கிய தருணங்கள்...
ரத்தம் தோய்ந்த பாதங்கள்...
கண்ணீரால் நனைந்த இரவுகள் - என்று
எத்தனை இடர்கள் நேரிடினும்
நீ மனதால்
பின்னடைவு கொள்ளாதே!

கற்கள் கொடுத்த வலிகொண்டு
உன் துணிச்சலை
என்றும் பெருக்கிக் கொள்!
முட்கள் கொடுத்த வலி கொண்டு...
உன் துணிவை பெருக்கிக்கொள்!

இவைகளையே
வழித் துணையாய் ஏற்றுக்கொண்டு
பயணத்தை
என்றும் தொடர்ந்து விடு!

வீழ்ந்த தருணம்
தோல்வி என்றாலும்...
எழுந்த தருணம்
வெற்றியாக இருக்கட்டும்!!


உன் இலக்கு
வெகு தொலைவில் இருந்தாலும்
உன் நம்பிக்கையின் துணை கொண்டு
விரைந்து விடு!

உன் பயணம்
இலக்கை அடைந்தே தீரும்.
அதுவே உன் உறுதி!
அதுவே உன் வெற்றி!!



கவிதா பிரபாகர்

# மனிதம் போற்று



பெரு வனத்திடை வளர்ந்த
மரம் ஒன்றில்
உதிரும் ஒற்றை இலை
நம் வாழ்க்கை.

மனிதனில் பேராசை
பிறக்கும் போதெல்லாம்
மரணிக்கத் தொடங்குகிறது
மனிதம்.


வற்றிய வயிறும்
ஒட்டுத்துணியுமாய்
வறண்ட வயற்காட்டில்
ஆயுத எச்சங்களை
பொறுக்கிக் கொண்டிருக்கிறாள்
அனாதைச் சிறுமி.

தூணிலும் துரும்பிலும்
இருக்கும் கடவுள் ஏனோ
ஆயுதத்திலும் அதை
பிரயோகிப்பவனிடத்திலும்
இல்லாமல் போனார்.

தூரப் பிரயாணத்தில்
எனக்கு உதவிச் சென்ற மனிதன்
எந்த மொழிக்காரன் என்று
எனக்குத் தெரியவில்லை.

தியானித்திருக்கிறார் புத்தர் என
நினைத்திருந்தேன்.
அவர் உறைந்து போய் இருப்பதை
இப்போது உணர்ந்து
கொள்கிறேன்.

முதிர்ந்த மரம் ஒன்று
கோடாரியால் வெட்டி
வீழ்த்தப்படுகிறது
விரவிக் கிடக்கின்றன
அதன் விதைகள்.



**புகழ்**

# விமான மற்றும் துறைமுக இணைப்பு மேம்பாட்டு முன்மொழிவு அமைச்சரிடம் கையளிப்பு




ராஜ் சிவநாதன்

## வட மாகாண அபிவிருத்தி முன்முயற்சி

**2026** பிப்ரவரி 20 ஆம் தேதி, யாழ்ப்பாண வர்த்தக சபை, மூலோபாய விமான மற்றும் துறைமுக இணைப்பு மேம்பாட்டு குறித்த விரிவான முன்மொழிவை, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பேராசிரியர் அருண குணத்திலக்க அவர்களிடம், யாழ்ப்பாண YMCA மண்டபத்தில் உத்தியோகபூர்வமாக கையளித்தது.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டத்தில், யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் அவர்களிடம் வட மாகாணத்தின் பொருளாதார திறனை முழுமையாக வெளிக்கொணர, விமான மற்றும் கடல்சார் இணைப்புகளை வலுப்படுத்துவதின் அவசியத்தை சபை பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

அமைச்சர் அவர்கள் முன்மொழிவை கவனமாக ஆய்வு செய்வதாக உறுதியளித்தார். மேலும், பிப்ரவரி 24 ஆம் தேதி மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, யாழ்ப்பாண போரம் மேலாண்மை குழுவினருடனும் (JMF) யாழ்ப்பாண வர்த்தக சபை பிரதிநிதிகளுடனும் அபிவிருத்தி முன்னுரிமைகள் குறித்து மேலதிக கலந்துரையாடல்களை நடத்துவதாக தெரிவித்தார். இந்த தொடர்ச்சியான கலந்துரையாடல் கட்டமைக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்திக்கான ஒரு ஊக்கமான முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் விமான இணைப்பு விரிவாக்கம்.

இந்த முன்மொழிவு, யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் திட்டமிட்ட விமான சேவைகளை விரிவாக்குவதற்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கிறது.

யாழ்ப்பாணம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் இடையே அதிக அதிர்வெண் கொண்ட உள்நாட்டு சேவைகளை வலுப்படுத்துவதோடு, யாழ்ப்பாணத்தை நேரடியாக சிங்கப்பூர் மற்றும் கோலாலம்பூர் நகரங்களுடன் இணைக்கும் பிராந்திய சர்வதேச சேவைகளை ஆரம்பிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தற்போது, கொழும்பு வழியாக வரும் வெளிநாட்டு வாழ் தமிழர்களும்



சுற்றுலாப் பயணிகளும், யாழ்ப்பாணத்தை அடைய எட்டு முதல் பத்து மணிநேர சாலைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

ஒரு மணிநேர நேரடி விமான சேவை பயண நேரத்தை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்து, நெடுஞ்சாலை நெரிசலை தணித்து, விபத்து அபாயத்தை குறைத்து, முதியவர்கள் மற்றும் இரண்டாம் தலைமுறை வெளிநாட்டு வாழ் தமிழர்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை வழங்கும்.

முழுமையான பயணப்பெட்டி அனுமதி மற்றும் சரக்கு சேமிப்பு வசதியுள்ள பொருத்தமான பிராந்திய விமானங்களை அறிமுகப்படுத்துவதானது பயணிகளின் வசதியை மேம்படுத்துவதோடு, சுற்றுலா வளர்ச்சி, வணிகச் செயற்பாடுகள், முதலீட்டு ஈர்ப்பு மற்றும் சமநிலையான பிராந்திய அபிவிருத்திக்கும் துணைபுரியும்.

நம்பகமான விமான இணைப்பு என்பது வெறும் போக்குவரத்து விஷயம் மட்டுமல்ல. அது தனியார் துறை விரிவாக்கத்தையும் பிராந்திய ஒருங்கிணைப்பையும் விரைவு படுத்தக்கூடிய ஒரு மூலோபாய பொருளாதாரக் கருவியாகும்.

## காங்கேசன்துறை துறைமுகத்தின் கட்டங்களான மேம்பாடு.

விமான இணைப்பு விரிவாக்கத்துடன் இணைந்து, காங்கேசன்துறை துறைமுகத்தை கட்டங்களாக மேம்படுத்துவதற்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக, சிறிய ஃபீடர் கப்பல்களுக்கு கண்டெய்னர் சேவையை இயக்கி, சென்னை துறைமுகத்துடன் நேரடி வர்த்தக இணைப்பை ஏற்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.

KKS துறைமுகத்தில் கண்டெய்னர் தள வசதி ஏற்படுத்தப்பட்டால், வடக்கு வணிகர்களின் கொழும்பு சார்ந்திருக்கும் நிலை குறையும்.




இதன் மூலம் சரக்கு செலவுகள் குறைந்து, மதிப்பூட்டப்பட்ட ஏற்றுமதிகள் அதிகரித்து, மீன்பிடி, வேளாண்மை, உப்பு உற்பத்தி, தொழில்துறை மற்றும் உற்பத்தித் துறைகள் ஊக்கமடைந்து, பிராந்திய வேலைவாய்ப்பும் உள்நாட்டு மொத்த உற்பத்தியும் உயர்வடையும்.

வட இலங்கை மற்றும் தென்னிந்தியாவுக்கு இடையேயான நேரடி கடல்சார் இணைப்பு, KKS துறைமுகத்தை ஒரு புறநகர் மாற்றுப்பாதையாக அல்லாது, செயல்படும் வர்த்தக நுழைவாயிலாக மாற்றும்.

## ஒருங்கிணைந்த வடக்கு இணைப்பு கட்டமைப்பு

இந்த முன்மொழிவு, கொழும்பு - யாழ்ப்பாண உள்நாட்டு விமான சேவை, யாழ்ப்பாணத்திலிருந்து பிராந்திய சர்வதேச சேவைகள், மற்றும் KKS துறைமுகத்தில் கண்டெய்னர் செயல்பாடுகளை இணைக்கும் ஒருங்கிணைந்த பல்வேறு போக்குவரத்துக் கட்டமைப்பை முன்வைக்கிறது.

இவ்வகை ஒருங்கிணைந்த இணைப்பு, விமானம், கடல், சுற்றுலா, வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர் ஈடுபாடு ஆகியவற்றை இணைக்கும் வடக்கு பொருளாதார வழித்தடத்தை உருவாக்கும். இது தேசிய பொருளாதார நிலைத்தன்மையை வலுப்படுத்துவதோடு, உள்ளடக்கமான மற்றும் சமமான பிராந்திய அபிவிருத்தியையும் உறுதி செய்யும்.

## வரவேற்கத்தக்க கலந்துரையாடல்

பிப்ரவரி 24 அன்று மேலதிக ஆலோசனைகளுக்காக யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்க செய்தியாகும். இத்தகைய கலந்துரையாடல்கள், தேசிய அடித்தள திட்டமிடலையும் பிராந்திய தேவைகளையும் ஒருங்கிணைக்க அத்தியாவசியமானவை.

வட மாகாணத்தின் நிலையான அபிவிருத்திக்குத் தெளிவான கொள்கை, துறைமுகங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, மற்றும் கட்டமைக்கப்பட்ட பொது - தனியார் கூட்டாண்மை அமைப்புகள் தேவைப்படுகிறது. இந்த மூலோபாய முயற்சிகள் முன்மொழிவு நிலையிலிருந்து நடைமுறை அமலாக்க நிலைக்கு முன்னேறுவதற்காக அமைச்சகத்துடனும் தொடர்புடைய அதிகாரிகளுடனும் இணைந்து செயல்படத் தயாராக இருப்பதாக யாழ்ப்பாண வர்த்தக சபை மீண்டும் உறுதி செய்துள்ளது.

இணைப்பு என்பது பொருளாதார மாற்றத்தின் அடித்தளம் ஆகும். ஒருங்கிணைந்த விமான மற்றும் கடல்சார் சீர்திருத்தங்களின் மூலம், வட மாகாணம் மீட்பு நிலையிலிருந்து கட்டமைக்கப்பட்ட, நிலையான மற்றும் முதலீட்டால் இயக்கப்படும் வளர்ச்சியின் பாதைக்கு நகர முடியும்.

# விடியலைத் தேடி...

ஈழவன் அனுராஜ்



மழைத் துளிகள்
மூச்சின் மீது விழுந்தாலும்
மனத்தின் தீப்பொறி அணையாது.

தோள்களில் சுமை அல்ல..
தலைமுறைகள் கட்டிய
கட்டுகளின் எடை.
கால்களில் காயம் அல்ல...
காலங்காலமாக நெரித்த
அடையாளத்தின் ரணம்.

இவள் இழுக்கும் வண்டி
மரச்சக்கரம் மட்டும் அல்ல..
மூடநம்பிக்கையின் மலை.
மௌனத்தின் மண்.
"பெண் என்றால்.." என்று தொடங்கும்
எல்லா வாக்கியங்களின் பாரம்.


மழை வழிகிறது முகத்தில் ...
அது வியர்வையோ கண்ணீரோ
யாருக்குத் தெரியும்?
ஆனால்
கண்களில் எரியும் ஒளி
ஒரு புரட்சியின் தீபம்.

அவள் நடக்கும் ஒவ்வொரு அடியும்
சரித்திரத்தின் மார்பில் பதியும் முத்திரை.
அவள் பிடித்திருக்கும் கம்பி
ஒரு வண்டியின் கைப்பிடி அல்ல ...
தன் விதியின் கட்டுப்பாடு.

சேலையைச் சுருட்டி
சரணடையவில்லை அவள்
சங்கிலியைச் சுருட்டி
சக்தியாக்குகிறாள்.

'நான் பலவீனம் அல்ல'
என்று சொல்லவில்லை ...
அவள் இழுக்கும் ஒலி
அதையே முழங்குகிறது.


மழை நின்றுவிடும்.
பாதை உலரும்.
ஆனால் இன்று
இந்த சாலையில்
ஒரு பெண் மட்டும் அல்ல ...
ஒரு விடுதலை நகர்கிறது
விடியலைத் தேடி!!



டி.ராஸ்மிலா

# ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக தொடரும் சூத்திரதாரி பற்றிய சர்ச்சை

**பணம்** இருந்தால் எதையும் வாங்கலாம், அதிகாரம் இருந்தால் எப்பேர்ப்பட்ட குற்றத்தையும் மறைக்கலாம் என்று நினைக்கும் ஒரு கும்பலின் முகத்திரையைக் கிழிக்கும் ஆவணங்கள் தான் இன்றைய உலகையே அதிரச் செய்து கொண்டிருக்கும் 'எப்ஸ்டீன் கோப்புகள்.'



ஒரு சாதாரணக் கணித ஆசிரியராகத் தொடங்கி, உலக வல்லரசு நாடுகளின் தலைவர்கள், பெரும் கோடீஸ்வரர்கள் மற்றும் அரச வம்சத்தினரைத் தனது விரல் நுனியில் ஆட்டிப்படைத்த ஜெஃப்ரி எப்ஸ்டீன் எனும் மர்ம மனிதனின் பின்னணி என்ன?

பிரித்தானிய இளவரசர் ஆண்ட்ரூவின் பட்டங்களைப் பறிக்க வைத்தது முதல், அமெரிக்காவின் முன்னாள், இன்னாள் அதிபர்கள் வரை பலரது பெயர்களைப் பதற வைத்துக் கொண்டிருக்கும் அந்த 30 லட்சம் பக்கங்கள் சொல்லும் ரகசியங்கள் என்ன?

சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திப் பிஞ்சுயிர்களைச் சிதைத்த அந்தப் 'பீடோபைல் தீவு' (Pedophile Island) கொடூரங்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவர்கள் செய்த அநீதிகளையும், மறைக்கப்பட்ட உண்மைகளையும் தோலுரித்துக் காட்டுகிறது இந்தச் சிறப்புப் பதிவு.

**இது ஏதோ அமெரிக்காவில் நடந்த கதை என்று கடந்து போகாதீர்கள். நமது சமூகத்திலும் அதிகார மிரட்டலுக்குப் பயந்து எத்தனை பிஞ்சுயிர்கள் மௌனமாக அழுகின்றனவோ? 'எப்ஸ்டீன் கோப்புகள்' வெறும் காகிதங்கள் அல்ல; அவை அதிகார வர்க்கத்தின் முகத்தில் பூசப்பட்ட கரி. நீதியைத் தற்காலிகமாகப் புதைக்கலாம், ஆனால் அது ஒருநாள் எரிமலையாக வெடிக்கும் என்பதற்கு எப்ஸ்டீன் கோப்புகளே சாட்சி. எப்ஸ்டீன் செத்து விட்டார். ஆனா எப்ஸ்டீன் சிஸ்டம் இன்னும் உயிரோடு இருக்கிறது. அதை வேரோடு அழிக்க நாம் குரல் எழுப்ப வேண்டிய நேரம் இது.**

தவறு யார் செய்தாலும் தண்டிக்கும் பிரித்தானியா! நூற்றாண்டு காலப் பாரம்பரியமும், கண்ணியமும் கொண்ட பிரித்தானிய அரச குடும்பத்தில், ஒரு தனி நபர் செய்த தவறால் இன்று அந்தப் பெயருக்கே ஒரு கறை படிந்திருக்கிறது! அந்த வம்சத்தின் ஒரு வாரிசு, ஒரு தகாத ஒருவரோடு நட்பு வைத்ததால், இன்று அந்தப் பரம்பரையின் கௌரவமான பொறுப்புகளில் இருந்தே அவர் தூக்கி எறியப்பட்டிருக்கிறார். இதற்கு ஒரே ஒரு பெயர்தான் காரணம் அது ஜெஃப்ரி எப்ஸ்டீன் எனும் சர்ச்சைக்குரிய நபர்.

டிசம்பர் 2010-ல், இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மூன்றாவது மகனான இளவரசர் ஆண்ட்ரூ, நியூயார்க்கின் சென்ட்ரல் பார்க் பகுதியில் இந்த கொடூரன் எப்ஸ்டீனுடன் இருக்கும் புகைப்படம் வெளியாகி உலகையே அதிர வைத்தது. 2019-ல் பிபிசி நேர்காணலில், 'அந்த நட்பை முறிக்கத்தான் நான் அங்கு சென்றேன்' என்று ஆண்ட்ரூ தெரிவித்த போதிலும், 2011-ன் ரகசிய மின்னஞ்சல்கள் அவர் சொன்னது பொய் என்பதை நிரூபித்தன.

விளைவு? தவறு செய்தவர் இளவரசராக இருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்தது. 2025-ல் ஆண்ட்ரூவின் அரச பட்டங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. நூற்றாண்டு காலப் பாரம்பரியம் கொண்ட ஒரு சாம்ராஜ்யத்தின் கிரீடத்தையே குழிதோண்டிப் புதைத்தது இந்த எப்ஸ்டீன் சிஸ்டம்.

## ஆசிரியர் முதல் கோடீஸ்வரன் வரை: அந்த மர்ம வளர்ச்சி

இங்கு நாம் பார்க்கப்போவது ஒரு தனி மனிதனைப் பற்றிய கதையல்ல. அதிகாரத்தின் இருண்ட பக்கம். செல்வம் இருந்தால் எதையும் மறைக்கலாம் என்று நினைத்தவர்களின் முகமூடியைக் கிழித்தெறிந்த 'எப்ஸ்டீன் கோப்புகள்' பற்றிய ஒரு அலசல்.

1970 களில் ஒரு சாதாரணக் கணித ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய எப்ஸ்டீன், தனது தந்திரத்தால் வால் ஸ்ட்ரீட் வங்கியாளர்களை வளைத்துப் போட்டார்.

ஒரு மாணவனின் தந்தை மூலம் 'பியர் ஸ்டியர்ன்ஸ்' வங்கிக்குள் நுழைந்த எப்ஸ்டீன், நான்கே ஆண்டுகளில் பங்குதாரராக உயர்ந்தார்.



1982-ல் தனது சொந்த நிறுவனத்தைத் தொடங்கி, ஒரு பில்லியன் டாலர் சொத்துக்களை நிர்வகிக்கும் அளவுக்கு வளர்ந்தார். அதன் பிறகு அவர் சேர்த்த செல்வம், அவனது காமவெறிக்கும் அதிகார ஆட்டத்திற்கும் எரிபொருளானது.


30 லட்சம் பக்கங்கள் நடுங்கும் உலகத் தலைவர்கள்.

ஜனவரி 30-ஆம் தேதி வெளியிடப்பட்ட அந்த ஆவணங்கள் உலகையே உலுக்கி வருகின்றன. சுமார் 30 லட்சம் பக்கங்கள், 2,000 வீடியோக்கள், 1.8 லட்சம் படங்கள். இதில் பில் கிளிண்டன் முதல் டொனால்ட் டிரம்ப் வரை, பில் கேட்ஸ் முதல் எலான் மஸ்க் வரை எனப் பெரும் புள்ளிகளின் பெயர்கள் அடிபடுகின்றன.

எலான் மஸ்க் தனது 'எக்ஸ்' பக்கத்தில் டிரம்ப் பெயர் இருப்பதைப் பதிவிட்டு விட்டு பின் அதை நீக்கியது பெரும் சர்ச்சையானது. 2002-லேயே டிரம்ப், 'ஜெப் ஒரு அருமையான மனிதர், என்னைப் போலவே அவருக்கும் இளம் பெண்களைப் பிடிக்கும்' என்று புகழ்ந்து தள்ளினார்.

ஆனால், விவகாரம் முற்றியவுடன், 'அவர் என் கிளப் பெண்களிடம் தவறாக நடந்ததால் விரட்டி விட்டேன்' என்று மாற்றி பேசினார். இதற்கிடையே, இந்தியப் பிரதமர் மோடி, அம்பானி போன்றோரின் பெயர்களும் மின்னஞ்சல்களில் இடம் பெற்றுள்ளதாகக் கசிந்த செய்தியை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

எது எப்படியோ, இந்த ஆவணங்கள் அதிகார வர்க்கத்தின் உறக்கத்தைக் கலைத்துள்ளன என்பதுதான் நிதர்சனம். இதனிடையே, 'இலங்கை' என்ற பெயர் 188 இடங்களில் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.



## அதிகாரத்தின் பலமும் 'வசதியான' சிறைவாசமும்

2003 லேயே பத்திரிகையாளர் விக்கி வார்டு இவனது மர்மங்களைக் கண்டுபிடித்தார். 1996-ல் மரியா ஃபார்மர் என்ற பெண்ணும் அவரது 14 வயது தங்கையும் பாதிக்கப்பட்டதை வெளிப்படுத்த முயன்றார். ஆனால், எப்ஸ்டீன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தச் செய்தியையே நசுக்கியுள்ளார்.

2005-ல் 14 வயது சிறுமியின் பெற்றோர் புகார் அளித்தனர். 50-க்கும் மேற்பட்ட சிறுமிகள் புகார் அளித்தும், 'நூற்றாண்டின் மிகப்பெரிய ரகசிய ஒப்பந்தம்' மூலம் இவருக்கு வெறும் 13 மாதங்கள் மட்டும் சிறைத் தண்டனை கிடைத்தது. அதுவும் எப்படி? வாரத்தில் ஆறு நாட்கள், ஒரு நாளைக்கு 12 மணி நேரம் தனது அலுவலகத்திற்குச் சென்று வர 'பணி நிமித்தமான விடுப்பு' வழங்கப்பட்டது. இதுதான் அதிகாரத்தின் பலம். இதுதான் அநீதியின் உச்சம்.

## மர்மமான மரணம்: தற்கொலையா? கொலையா?

பாதிக்கப்பட்ட வர்ஜீனியா ஜியூஃப்ரேயின் நீண்ட சட்டப் போராட்டத்தால், நீதிபதி லோரெட்டா பிரெஸ்கா இந்த ரகசியங்களை வெளியிட உத்தரவிட்டார். ஆனால், 2019-ல் மீண்டும் கைதான எப்ஸ்டீன், உண்மைகளைச் சொல்லப்போகும் நேரத்தில் மர்மமாக இறந்து கிடந்தார்.

கேமராக்கள் திடீரென வேலை செய்யவில்லை.

காவலர்கள் தூங்கிவிட்டார்கள். இது தற்கொலையா? இல்லை உண்மைகளைத் மறைக்க பெரிய இடத்து ஆட்கள் செய்த கொலையா? இன்றும் மர்மம் நீடிக்கிறது. அதனால்தான், இந்த வழக்கின் விசாரணையும் ஆதாரங்களும் இப்போது வெளிப்படையாக வெளியிடப்பட்டு வருகின்றன.

கூட்டாளி கிஸ்லேன் மேக்ஸ்வெல்: கொடூரனின் ஏஜென்ட்.

இந்தக் காமக் கொடூரனின் வலது கையாக இருந்தவள் அவனது காதலி கிஸ்லேன் மேக்ஸ்வெல். உலகத் தலைவர்களையும் கோடீஸ்வரர்களையும் எப்ஸ்டீனுக்கு அறிமுகப்படுத்தியது இவள்தான். சிறுமிகளைப் பாலியல் சுரண்டலுக்காகக் கடத்திய குற்றத்திற்காக இன்று இவர் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறாள்.

17 வயதில் இளவரசர் ஆண்ட்ரூவால் பாதிக்கப்பட்டதாகக் கூறிய வர்ஜீனியா ஜியூஃப்ரேயுடன், ஆண்ட்ரூ பல மில்லியன் டாலர்கள் கொடுத்து சமரசம் செய்து கொண்டது எதை உணர்த்துகிறது?


இறுதி எச்சரிக்கை: சிஸ்டம் இன்னும் உயிரோடுதான் இருக்கிறது.

இவர்களெல்லாம் அந்த 'பீடோபைல் தீவுக்கு' (Pedophile Island) ஏன் சென்றார்கள்? அங்கு நடந்த அசிங்கங்களில் இவர்களுக்குப் பங்கு என்ன? அதிகாரம் என்பது ஏழை மக்களைக் காக்கவா? அல்லது இதுபோல பிஞ்சுயிர்களைச் சிதைக்கும் காமவெறிக்குக் கேடயமாக இருக்கவா?

எப்ஸ்டீன் செத்துவிட்டார். ஆனால் அவர் உருவாக்கிய அந்த 'எப்ஸ்டீன் சிஸ்டம்' இன்றும் உயிரோடுதான் இருக்கிறது. அதிகாரமும் பணமும் இருந்தால் எதையும் செய்யலாம் என்ற அந்தத் தைரியத்தை இந்த சிஸ்டம் இன்னும் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இது ஏதோ அமெரிக்காவில் நடந்த கதை என்று கடந்து போகாதீர்கள். நமது சமூகத்திலும் அதிகார மிரட்டலுக்குப் பயந்து எத்தனை பிஞ்சுயிர்கள் மௌனமாக அழுகின்றனவோ? 'எப்ஸ்டீன் கோப்புகள்' வெறும் காகிதங்கள் அல்ல; அவை அதிகார வர்க்கத்தின் முகத்தில் பூசப்பட்ட கரி.

நீதியைத் தற்காலிகமாகப் புதைக்கலாம், ஆனால் அது ஒருநாள் எரிமலையாக வெடிக்கும் என்பதற்கு எப்ஸ்டீன் கோப்புகளே சாட்சி.

எப்ஸ்டீன் செத்து விட்டார். ஆனா எப்ஸ்டீன் சிஸ்டம் இன்னும் உயிரோடு இருக்கிறது. அதை வேரோடு அழிக்க நாம் குரல் எழுப்ப வேண்டிய நேரம் இது.



2005-ல் 14 வயது சிறுமியின் பெற்றோர் புகார் அளித்தனர். 50-க்கும் மேற்பட்ட சிறுமிகள் புகார் அளித்தும், 'நூற்றாண்டின் மிகப்பெரிய ரகசிய ஒப்பந்தம்' மூலம் இவருக்கு வெறும் 13 மாதங்கள் மட்டும் சிறைத் தண்டனை கிடைத்தது. அதுவும் எப்படி? வாரத்தில் ஆறு நாட்கள், ஒரு நாளைக்கு 12 மணி நேரம் தனது அலுவலகத்திற்குச் சென்று வர 'பணி நிமித்தமான விடுப்பு' வழங்கப்பட்டது. இதுதான் அதிகாரத்தின் பலம். இதுதான் அநீதியின் உச்சம்.

சிறுகதை...

அம்முக்குட்டி



# பெண் மனம்

**பளிச்சென** சுத்தமாக எப்போதும் அந்த வீடு காணப்படும். சாரதா எப்படி அதனை செய்கிறாள் என எனக்கு எப்போதும் ஆச்சரியமாக இருக்கும். எப்போது பார்த்தாலும் வீடு மிக சுத்தமாக அந்தந்த பொருட்கள் அதற்குரிய இடத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

சமையலறை, சாமியறை, படுக்கயறை என்று எதுவாக இருந்தாலும் அவ்வளவு அழகாக இருக்கும். சாரதாவிடம் ‘எப்படி உங்களால் முடிகிறது’ என்று கேட்டால் சிறுபுன்னகை மட்டுமே பதிலாகும்.

சில வாரங்களின் பின் எதேச்சையாக சாரதாவின் கணவரை சந்திக்க



நேர்ந்தது. அப்போது அவர் பதற்றமாகவும் சோக மாகவும் இருப்பதுபோல் மனதில் தோன்றியது. அருகே சென்று “ராகவன்..!” என்று அழைக்க திருப்பி பார்த்தவர் ”ஓ....! நீங்களா? கவனிக்கவில்லை.” என்றார்.

”என்ன யோசனை? சாரதா குழந்தைகள் நலமா? நான் வேலை காரணத்தால் அதிக நாள் சாரதாவை காணவில்லை” என்றேன்.

அவர் தலை குனிந்து, ”அவளை மன நல மருத்துவமனையில் சேர்த்துள்ளேன். குழந் தைகளை நான்தான் பார்க்கிறேன். சாரதாவின் இந்த நிலைக்கு நான்தான் காரணம் என்ற குற்றவுணர்வு என்னைக் கொல்கிறது” என்றார்.

“பெண்கள் வீட்டிலேயே இருந்தாலும் நிறைய வேலைகள் செய்வார்கள். நாள் முழுவதும் ஓய்வின்றி உழைக்கும் அவர்கள் மனதில் என்ன இருக்கிறது என நாம் சிந்திப்பது இல்லை. நானே உழைப்பது போலவும், அவர்கள் வேலை இல்லாமல் வீட்டில் சும்மா இருக்கிறார்கள் என்பது போலவுமான நினைப்பே எமக்கு பெரிதாக தோன்றுகிறது.

வீட்டுக்கு வரும் போது பிள்ளைகளின் கூச்சல் கேட்டாலோ இல்லை வீட்டுப் பெண்கள் ஓய்வாக



இருந்து தொலைக்காட்சி பார்ப்பதை சமயங்களில் கண்டாலோ எம்மையும் அறியாமல் கோபம் வருகிறது.

எப்போதும் 'மகாராணி என்ன செய்கீறீங்க...?' என்று நக்கலாக, குதர்க்கமான குத்திக் காட்டும் பேச்சுக்கள், குழந்தைகள் மீது எரிந்து விழுதல் போன்று கடுமையாக நடந்து கொள்வதுதாலோ என்னவோ, சாதாரணமாக நான் வரும் நேரம் வீடு மிக அமைதியாகவே இருக்கும்.

பிள்ளைகளும் புத்தகத்தோடு இருந்து விடுவார்கள். அங்கு சட்டமில்லா ஹிட்லர் ஆட்சி நடைபெறும். நான் சாரதாவை ஒரு பொருட்டாக கூட மதித்தது இல்லை. என் இஷ்டத்திற்கு ஏற்றவாறு நடத்தினேன்.

அவளுக்கும் மனசிருக்கு, அதில் கனவுகள், கற்பனைகள் இருக்கும் என்பதைக் கூட நான் புரிந்து கொள்ளவில்லை. அவளை கிட்டத்தட்ட ஒரு அடிமை போலவே நடத்தினேன். ஏன் படுக்கையறையில் கூட.... நான் என்ற கர்வம் மட்டுமே என்னிடம் இருந்தது. இவை எல்லாம் சரியென்று எண்ண முடிந்த என்னால் அவள் மனதை அறிய முடியவில்லை.

அதற்குள் 'இருபது வருட இல்வாழ்க்கை அமைதியாக போகிறது' என்ற திமிர் வேற.

அன்றைய நாளை என்னால் மறக்கமுடியாது. சாரதா வீட்டில் எதுவும் செய்யாமல் சோபாவில் அமர்ந்து தனக்கு தானே பேசி, சிரித்து, அழுது கொண்டிருந்தாள். பிள்ளைகள் அம்மாவைப் பார்த்து வெளிறிய முகத்துடன் அழுது கொண்டிருந்தார்கள்.

வீட்டினுள் நுழையும்போதே நிலைமை வழமைக்கு மாறாக இருப்பதைப் பார்த்து எனக்கு கோபம் வந்தது.

"சாரதா..!" என்று கத்தினேன். அவளிடம் எந்த அசைவுமில்லை. தனக்குத் தானே ஏதோ பேசி, சிரித்து கொண்டிருந்தாள். எனக்கு வந்த கோபத்தில் பளிரென கன்னத்தில் அறைந்தது விட்டேன்.

அவள் அப்போது சிரித்த அந்த பயங்கரமான சிரிப்பு... அப்பப்பா..! இப்ப நினைத்தாலும் பயமாக உள்ளது. எனது சேட்டை பிடித்தபடி

"ராகவா...! வந்திட்டியா? உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்." அவள் பேசிய போது நான் அதிர்ந்து போனேன். சாரதாவா என அதிர்ச்சியில் உறைந்த போது, அவள் என்னைப் பார்த்து,

"கல்யாணம் பண்ணி வந்த நாளிலிருந்துஉனக்கு எது பிடிக்கும்.... எது பிடிக்காது என்று எனக்கு தெரியும். உனக்கு என்னைப் பற்றித் தெரியுமா...? தெரியாது... நின்றால் குற்றம்... நடந்தால் குற்றம்..., இருந்தால் குற்றம் என்று பேச்சுக்கள் பேசியே என்னைக் கொன்று விட்டாய். குழந்தைகளிடம் அன்பாக ஒரு வார்த்தை பேசியிருப்பாயா? அவர்கள் என்ன படிக்கிறார்கள்? வகுப்பாசிரியர் பெயராவது தெரியுமா....?" என்றவள் தன் தலையில் அடித்துவாறே

"என் ஆசைகள், கனவுகள் எல்லாவற்றையும் குழி தோண்டி புதைத்து விட்டாய். நான் நினைத்து வந்தது எல்லாம் முடிந்து விட்டது. பிள்ளைகளிலும் நீ பாசம் காட்டுவதில்லை...." என்று கூறியபடி மயங்கி விட்டாள்.

மயக்கம் தெளியாத நிலையில் மருத்துவமனையில் அனுமதித்த போதுதான் அவள் மனரீதியான பாதிப்பிலுள்ளது தெரிய வந்தது.

மனநல டாக்டர் என்னை ஒரு பார்வை பார்த்தார். அது எனக்கு நிறைய கதைகளை கூறியது.

"குடும்பம் என்றால் என்னவென்று தெரியாதா? இருமனங்கள் ஒத்து ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து, இன்ப துன்பங்களை பகிர்ந்து, வாழவேண்டும். உங்கள் மனைவியோடு பேசியபோது அவவிற்கு தற்கொலை செய்யும் எண்ணம் வந்திருக்கு. ஆனால், தன் பிள்ளைகள் வாழ்வை எண்ணி முடிவை மாற்றிய போதும், அவளுள் ஒரு பூகம்பம் இருந்திருக்கு. அது வெடித்து விட்டது. இன்று சுய நினைவை இழந்து விட்டா. உங்கள் அன்பு மாத்திரமே அவளை மீட்கும்.." என்றார்.

தற்போது வீட்டுக்கு மருத்துவர் ஆலோசனைப்படி வேலைக்கு விடுமுறை போட்டு விட்டு, சாரதாவை வீட்டிலிருந்தே கவனிக்கிறேன்.. பராமரிப்பில் கொஞ்சம் தேறி வருகிறாள். இப்பதான் எனக்கு எல்லாம் புரிகிறது" என்று கூறி விடை பெற்றார்.

நானும் விடைபெற்று என் வீட்டை நோக்கி நடந்தேன்.



ஒருவன்

# பயங்கரவாதச் சட்டங்கள் மூலம் கொண்டுவரப்படும் பயங்கரவாதம்




**தேசிய** மக்கள் சக்தி அரசாங்கம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) நீக்குவதற்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கும் தனது 2024 தேர்தல் அறிக்கையின் ஊடாக (ஆங்கிலப் பதிப்பின் 4.9 சரத்து, 129ஆம் பக்கம்) வாக்குறுதி அளித்திருந்தது.

அந்த இரு வாக்குறுதிகளும் இதுவரை நிறைவேற்றப் படவில்லை. தேர்தலில் பிரதானமாக அமைந்த இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு விருப்பமும் தெரிவதாகவும் இல்லை.

அதற்குப் பதிலாக, NPP அரசாங்கமானது பலரை PTA சட்டத்தின் கீழ் கைதுசெய்வதற்கும், நடைமுறையிலுள்ள சாதாரண சட்டங்களின் கீழ் விசாரணை செய்யவோ அல்லது வழக்குத் தொடரவோ கூடிய குற்றங்களுக்காகவும், தாம் நீக்குவதாக வாக்குறுதியளித்த அதே சட்டத்தை வெட்கமின்றிப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விடவும் மிகக் கடுமையான விதிகளைக் கொண்ட ‘அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை’ (Protection of the State from Terrorism Act – PSTA) கொண்டு வருவதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## செய்த மற்றும் செய்யத் தவறியவை?

இலங்கையர்களை அச்சுறுத்துவதற்காக அனைத்து அரசாங்கங்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தின. நானும் பயங்கரவாதத்

தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டேன், அதன் விளைவாக எனது கருத்துச் சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரத்திற்கு நீதிமன்றக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன, எனது மின்னணு சாதனங்கள் பறிமுதல் செய்யப்படுவதையும் நான் எதிர்கொள்ள நேரிட்டது.

எனது வழக்கு சுமார் 5 ஆண்டுகள் வரை நீடித்ததுடன், நான் விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட சமூக மற்றும் அரசியல் ரீதியான அவதூறுகளுக்கும் இழிவுபடுத்தல்களுக்கும் உள்ளானேன்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அநீதியான முறையில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் என்னைப்போன்ற மனித உரிமை ஆர்வலர்கள், மாணவர் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், ஒரு சட்டத்தரணி, ஒரு கத்தோலிக்க மதகுரு மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் உள்ளடங்குகின்றனர்.

அதிகாரத்திலுள்ள அரசாங்கங்களை விமர்சிப்பது, சவால் விடுப்பது, கேள்வி எழுப்புவது மற்றும் உயிர் பிழைத்தவர்கள் அல்லது உரிமைகள் மீறப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவு தெரிவிப்பதுமே நாம் செய்த குற்றமாக இருந்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் நபர்களாக இருப்பது, இச்சட்டம் இன சிறுபான்மையினரை எவ்வாறு சமமற்ற முறையில் பாதிக்கிறது என்பதைக் காட்டுகின்றது.

நாட்டின் பிரஜைகளை நீண்டகாலம் தடுத்து வைப்பதற்கும், சித்திரவதை செய்வதற்கும் மற்றும் அவர்களின் சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டைத் தடுப்பதற்கும் ஒரு அனுமதிப் பத்திரமாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மாறியுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த, குற்றவாளிகள் என உறுதிப்படுத்தப்படாத சில கைதிகள் விடுவிக்கப்படுவதற்கு 15 ஆண்டுகள் போன்ற நீண்ட காலம் எடுத்துள்ளது. சிலர் முறை






யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாமலேயே விடுவிக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது அந்த நபர்களினதும் அவர்களது குடும்பத்தினரினதும் வாழ்க்கையைச் சீர்குலைத்துள்ளது.

எவ்வாறாயினும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் தமது உரிமைகள் மீறப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வித நட்டஈடும் வழங்கப் படவில்லை. நீண்டகாலத் தடுப்புக் காவலினால் ஏற்பட்ட சித்திரவதைகள், நோய்கள், மன உளைச்சல், அவதூறு மற்றும் வாழ்வாதார இழப்பு உள்ளிட்ட பாதிப்புகளுக்காக ஒரு அங்கீகாரமோ, மன்னிப்புக் கோரலோ அல்லது நிதி ரீதியான இழப்பீடோ பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கவில்லை.

எப்படியிருப்பினும், இச்சட்டம் நடைமுறையில் இருந்த காலப்பகுதி முழுவதும் இடம்பெற்ற பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பதற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தவறிவிட்டது.

அதற்குப் பதிலாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதன் பின்னரான யுத்த காலத்திலும் அதன் பின்னரும் அளுத்கம மற்றும் திகன போன்ற பகுதிகளில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளின் போதும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போதும் வன்முறைகள் பாரியளவில் தீவிரமடைந்தன.

## பயங்கரவாதச் சட்டங்கள் நமக்குத் தேவையா?

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு பாரிய அதிகாரங்கள் உள்ளன. அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி தேவைப்படுவது, நிறைவேற்று அதிகாரத்தின் சமநிலையைப் பேணுவதாகக் கருதலாம்.

இலங்கையில் பயங்கரவாதம் தொடர்பான சட்ட விதிகளைக் கொண்ட 15 சட்டங்கள் இருப்பதாக முன்னைய கட்டுரையொன்றில் குறிப்பிடப் பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) என ஒரு தனிச் சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரத்திற்கு அசாதாரணமான மற்றும் அதீத அதிகாரங்களை வழங்குவதும், நீதிமன்றத்தின் பங்களிப்பையும் அரசினால் முன்னெடுக்கப்படும் முறைகேடுகளைக் கட்டுப்படுத்தும் திறனையும் பலவீனப்படுத்துவதுமே இதன் அடிப்படை அம்சமாகும்.

இதுவரை இருந்த அரசாங்கங்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கு மறுத்துவிட்டன. அதற்குப் பதிலாக, அதனைத் திருத்துவதற்கு அல்லது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) மற்றும் எதிர்ப்புப் பயங்கரவாதச் சட்டம் (CTA) போன்ற சட்டங்களைக் கொண்டு வந்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்குப் பதிலாக அவற்றை ஈடுசெய்ய முயற்சித்தன.

ஆனால், அத்தகைய சட்டங்களின் தேவை குறித்த எந்தவொரு தர்க்கரீதியான விளக்கத்தையும் அந்த அரசாங்கங்கள் முன்வைக்கவில்லை.

பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு அல்லது அதற்குப் பதிலளிப்பதற்குத் தற்போதைய சட்ட அமைப்பில் ஏதேனும் இடைவெளிகள் காணப்பட்டால்,




அவை பொதுமக்களுக்குச் சுட்டிக்காட்டப்பட வேண்டும். அது மிகவும் அவசியமெனில், அதற்காகத் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை ஆகியவற்றைத் திருத்த முடியும்.

எவ்வாறாயினும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், எதிர்க்கட்சிக் குழுக்கள், அறிஞர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், மனநல நிபுணர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள் போன்ற சர்வதேச நிபுணர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்த பின்னரே இதனைச் செய்ய வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Anti – Terrorism Act), பயங்கரவாத தடைச் சட்டம் (Counter Terrorism Act) மற்றும் அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PSTA) ஆகியவை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) விடச் சிறந்தவை எனச் சிலர் வாதிடுகின்றனர். ஆனால், எந்தவொரு சட்டமூலத்தையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துடன் ஒப்பிடுவது என்பது அடிப்படையிலேயே ஒரு குழப்பமான அணுகுமுறையாகும்.

எந்தவொரு ஒப்பீடும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான மனித உரிமைத் தரநிலைகள் மற்றும் நடைமுறைகளுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற அபாயகரமான விதிகளைக் கொண்ட ஒரு சட்டத்துடன் அல்ல. PTA உடன் இவ்வாறான ஒப்பீடுகளைச் செய்வதன் மூலம், தரம் மற்றும் அளவுகோல்கள் கடுமையாகக் கீழ்மட்டத்திற்குத் தள்ளப்படுகின்றன.

PSTA சட்டத்தின் சில விதிகள் PTA சட்டத்தை விடச் சிறந்ததாக இருந்தாலும், PTA-வை விடவும் தீங்கு விளைவிக்கும் பல விதிகள் PSTA-வில் காணப்படுகின்றன. அடிப்படையாக, NPP அரசாங்கமானது PTA சட்டத்திலுள்ள அடக்குமுறை அம்சங்களை அதன் சொல்லமைப்பிலும் நோக்கத்திலும் அவ்வாறே பேணி வருகின்றது. PSTA சட்டமூலத்தைக் கவனமாக வாசிக்கும்போது, அது குடிமக்களை, குறிப்பாக விமர்சகர்களை இலக்கு வைத்து அரச பயங்கரவாதத்திற்குத் துணைபோகும் ஒரு சட்டமூலம் என்பது தெளிவாகின்றது.

## தீர்மானிப்பவர்கள் யார்?

PSTA சட்டத்தின் ஊடாக பயங்கரவாதம் என்றால் என்ன, பயங்கரவாதி யார் மற்றும் அதற்கான தண்டனை என்ன என்பதை நிறைவேற்று அதிகாரத்தரப்பே (ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர், பொலிஸார், இராணுவம், கடலோர பாதுகாப்புப் படையினர்) தீர்மானிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு நீதிமன்றம் இத்தகைய நடவடிக்கைகளை மீறி தீர்ப்புகளை வழங்கினாலும், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அந்த நேரத்தில் ஏற்கனவே கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

அதன் மூலம் ஏற்பட்ட சேதங்கள் மீள முடியாத அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம். PTA மற்றும் PSTA சட்டங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு பெறுவதற்கோ அல்லது பொறுப்புக்கூற வேண்டியவர்களை சட்டரீதியாகப் பொறுப்புக்கூற வைப்பதற்கோ வழிவகை இல்லாமை நிலைமையை மேலும் மோசமாக்குகிறது.

PSTA சட்டமானது, நோக்கம் மற்றும் விளைவுகளின் அடிப்படையில் பரந்த அளவிலான குற்றங்களை பயங்கரவாதம் என வகைப்படுத்துகிறது. இவ்வாறு ஒரு செயல் பயங்கரவாதமாக இல்லாவிட்டாலும், அதன் விளைவுகளை பயங்கரவாதம் என வகைப்படுத்தும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்தரப்பிற்கு உள்ளது. இவ்வாறான பல குற்றங்கள் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் வந்தாலும், அவற்றை PSTA சட்டத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் சாதாரண குற்றங்களுக்காகவும் PSTA சட்டத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

PSTA சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்கப்படும் எல்லையற்ற அதிகாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. நடைமுறையில் இவை, நிறைவேற்று அதிகாரத்தரப்பு தாமாகவே பயங்கரவாதம் எனப் பெயரிடும் ஒரு செயலுக்கும், அவ்வாறு பெயரிடப்பட்ட ஒரு நபருக்கும் நடைமுறையில் வழங்கப்படும் தண்டனைகளாகும்.


இராணுவம் மற்றும் கடலோர பாதுகாப்புப் படையினர் நபர்களைக் கைது செய்யவும், ஆவணங்கள் உள்ளிட்ட எதனையும் பொறுப்பேற்கவும் முடியும் (PTA இதற்கு இடமளிக்கவில்லை).

பொலிஸாரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் நீதிமன்றத்தின் விருப்பம் ஏதுமின்றி ஒரு வருடம் வரை நபர்களைத் தடுத்து வைக்க முடியும் (நீதவான் இரண்டு மாதங்களுக்குப் பின்னரே விளக்கமறியலில் வைக்கவோ அல்லது பிணை வழங்கவோ முடியும்).

பொலிஸாரும் நீதவானும் இணைந்து ஒரு நபரை வழக்கு விசாரணையின்றி இரண்டு ஆண்டுகள் வரை தடுத்து வைக்க முடியும். அதன் பின்னரும் கூட நீதவான் பிணை வழங்க முடியுமே தவிர, அந்த நபரை விடுவிக்க முடியாது.

ஜனாதிபதி தனது விருப்பத்திற்கேற்ப, தற்போதுள்ள சிறைச்சாலை அமைப்புக்கு இணையாக தற்காலிக தடுப்பு மையங்களையும் நிபந்தனைகளையும் உருவாக்க முடியும்.

ஒரு நபர் குற்றத்தை ஒப்புக்கொள்ளவும் தண்டனையை ஏற்கவும் கட்டாயப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை சட்டமா அதிபர் உருவாக்க முடிதல் (வழக்கு விசாரணையின்றி குற்றவாளியாக்கப்படுதல் மற்றும் தண்டனை பெறுதல்).




# இலங்கையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

ஜனாதிபதி எந்தவொரு அமைப்பையும் கால வரையறையின்றி தடை செய்ய முடியும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எந்தவொரு இடத்தையும் தடை செய்யப்பட்ட இடமாக அறிவிக்க முடியும்.

நாட்டிற்குள் நடமாடுவதைக் கட்டுப்படுத்தவும், வெளிநாட்டுப் பயணங்களைக் கட்டுப்படுத்தவும், பெயரிடப்பட்ட நபர்களுடன் தொடர்புகொள்வதைத் தடுக்கவும், குற்றமொன்றுக்கு உடந்தையாக அமையலாம் எனக் கருதப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கவும் பொலிஸார் நீதவானிடம் கோரிக்கை விடுக்க முடியும்.

## நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தல்

தற்போது நடைமுறையிலுள்ள ஒரு சட்டத்தை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவதற்கு எமது அரசியலமைப்பு, பிரஜைகளுக்கு அனுமதி வழங்கவில்லை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) போன்ற ஒரு சட்டம், அதன் சொல்லமைப்பிலும் சாராம்சத்திலும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தையோ அல்லது சர்வதேச தரநிலைகளையோ மீறினாலும் கூட, அதனை நீதிமன்றத்தின் முன் சவாலுக்கு உட்படுத்த பிரஜைகளுக்கு வாய்ப்பு இல்லை.

எவ்வாறாயினும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு சட்டமூலத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியும். 'அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்' (PSTA) இந்தத் தருணத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரை அதனை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது.

இதற்கு முன்னர், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தங்கள் மற்றும் அதற்குப் பதிலாகக் கொண்டு வரப்பட்ட சட்டமூலங்களை நானும் பாதிக்கப்பட்டவர்களும் மற்றும் சிலரும் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தினோம். நீதிமன்றத்தால் இங்கு செய்யக்கூடியவை மிகக் குறைவு என்பதும், இவற்றை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவது மிகவும் கடினமானது என்பதுமே எனது அனுபவமாகும்.

சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலமானது அரசியலமைப்பு விதிகளுக்கு முரணாக அமைகின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கும், அவ்வாறு முரணாக அமைந்தால் அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும் அல்லது சில சந்தர்ப்பங்களில் மக்கள் தீர்ப்பின் மூலம் (சர்வசன வாக்கெடுப்பு) நிறைவேற்றப்பட வேண்டும் என அறிவுறுத்துவதற்கும் மாத்திரமே நீதிமன்றத்தின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தீர்மானம் இங்கு நாடாளுமன்ற சபாநாயகருக்கே அறிவிக்கப்படும், எமது மனுதாரர்களுக்கு அல்ல. சில வருடங்களுக்கு முன்னர் நானும் மற்றும் சிலரும் நீதிமன்றத்தில் ஒரு சட்டமூலத்தைச் சவாலுக்கு உட்படுத்தியபோது, நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஒரு பெண் சட்டத்தரணி வெளியிட்ட Facebook பதிவின் மூலமே என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. அவர் தற்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவார்.

நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டால் அது குறித்து நாம் அறிந்திருக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் அந்தச் சட்டமூலத்தைச் சவாலுக்கு உட்படுத்தி மனுத்தாக்கல் செய்யப்பட வேண்டும். அதற்காக நாம் சட்டமூலத்தின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டு அதன் உள்ளடக்கங்களை ஆய்வு செய்து, அதற்குத் தகுதியான சட்டத் தரணிகளைத் தேடிக்கொள்ள வேண்டும். அதற்கான நிதியையும் திரட்ட வேண்டும்.

அர்ப்பணிப்புள்ள சட்டத்தரணிகள் ஆவணங்களைத் தயார் செய்து நீதிமன்றத்தில் இலவசமாகத் தோன்றும் போது கூட, ஆயிரக்கணக்கான அச்சுப் பிரதிகள் (Printouts), நிழற்பிரதிகள் (Photocopies) மற்றும் ஆலோசனை வழங்கும் சட்ட நிபுணர்களுக்கான கொடுப்பனவுகள் போன்ற செலவுகளுக்காகப் பணம் அவசியமாகின்றது.

மனு மற்றும் பல இணைப்புகளைக் கொண்ட இந்த ஆவணங்கள் மிகவும் சட்டரீதியானவையாகவும் ஆங்கில மொழியிலும் அமைந்திருக்கும் என்பதால், பல பிரஜைகள் அவற்றைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு காலமும் உதவியும் தேவைப்படுகின்றது. இதற்கு முன்னர் எமது சட்டத்தரணிகள் மனு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் காலத்தையும் உழைப்பையும் நான் குறைவாகவே மதிப்பிட்டிருந்தேன்.

நாம் மனுத்தாக்கல் செய்யும் அதே நேரத்தில் அதன் பிரதியொன்றைச் சபாநாயகரிடமும் ஒப்படைக்க வேண்டும். சட்டமூலங்களை கொழும்பிலுள்ள உயர் நீதிமன்றத்தில் மாத்திரமே சவாலுக்கு உட்படுத்த முடியும் என்பதால், கொழும்புக்கு அப்பால் வசிக்கும் பிரஜைகள் இதில் பங்கெடுப்பது மேலும் கடினமாகின்றது.

இவ்வாறான நிலையில், சட்டமூலங்களை நீதிமன்றத்தின் முன் சவாலுக்கு






உட்படுத்துவதற்கான அரசியலமைப்பு உரிமையை நனவாக்குவது மிகவும் கடினமான ஒரு பணியாகும். அத்துடன், ஆங்கில மொழியில் தேர்ச்சி இல்லாத, கொழும்புக்குத் தொலைவில் வசிக்கும், சட்ட மற்றும் நிதி வசதிகள் தாராள-மாகக் கிடைக்காத சாதாரண பிரஜைகளுக்கு இது இன்னும் கடினமானதாக அமைகின்றது.

**சமூக அரசியல் ரீதியாக சவாலுக்கு உட்படுத்தல்.**

நீதிமன்ற மறுஆய்வின் எல்லைகள் மற்றும் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, PSTA சட்டமூலத்தைச் சவாலுக்கு உட்படுத்துவதானது அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே சமூக மற்றும் அரசியல் ரீதியான முன்னெடுப்புகளின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் (CTA) போன்ற சட்டங்களைக் கொண்டு வந்தபோது, அவற்றை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு அந்த அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்தது இவ்வாறான இயக்கங்களே என்று நான் நம்புகிறேன்.

தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க போன்ற முன்னணி NPP தலைவர்கள் இவ்வாறான இயக்கங்களின் ஒரு அங்கமாக இருந்தனர். எவ்வாறாயினும், PTA சட்டத்தை ரத்து செய்வதற்கு நாம் தவறியமையால், முன்மொழியப்பட்ட மாற்றுச் சட்டங்களை நீக்குவது அவ்வளவு அர்த்தமுள்ளதாக அமையவில்லை.

எனவே, இப்போது PTA சட்டத்தை நீக்குவதற்கும், PSTA சட்டமூலத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் கடும் அவதானம் செலுத்த வேண்டும். NPP தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி PTA சட்டத்தை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தில் ஒரு சாதாரண பெரும்பான்மை அதற்குப் போதுமானதாகும்.

அதேபோன்று PSTA சட்டமூலமும் மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், PTA சட்டத்தை மீண்டும் அவ்வாறானதொரு அபாயகரமான சட்டத்தினால் ஈடுசெய்வதைத் தவிர்க்க வேண்டும். NPP-க்குத் தமது வாக்குகளை வழங்கியவர்கள் இப்போது முன்வர வேண்டும் என்பதுடன், NPP வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறை வேற்றுமாறு கோரிக்கை விடுக்க வேண்டும்.



# ஆஸியில் வெறுப்புப் பேச்சு எதிர்ப்புச் சட்டம்

# பல்லின கலாசாரத்தில் தீவிர முரண்பாடா?




ஐங்கரன் விக்னேஸ்வரா

(வெறுப்புப் பேச்சைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டத்தின் உச்ச விளைவாக அவுஸ்திரேலியாவில் செயல்படும் ஒரு நாசி அமைப்பான 'National Socialist Network' (NSN). தனது அமைப்பைக் கலைப்பதாக அறிவித்துள்ளது. மேலும் 'White Australia Party' மற்றும் 'European Australian Movement' போன்ற பல தீவிரவாத குழுக்கள் இந்த புதிய சட்டத்தின் பின்னர் தங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்த முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.)

---

**அவுஸ்திரேலியாவில்** வெறுப்புப் பேச்சைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் (hate speech legislation) கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த வருட இறுதியில் டிசம்பர் 14 இல் அவுஸ்திரேலியாவின் பொண்டி (Bondi) கடற்கரை பகுதியில் யூதர்களின் ஹனுக்கா விழாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறையைத் தூண்டும் செயல்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்துள்ளதாக பிரதமர் அந்தோணி அல்பனீஸ் அறிவித்துள்ளார்.

பொண்டி தாக்குதல், இஸ்லாமிய தீவிரவாத அமைப்பால் தூண்டப்பட்டதாக சிட்னி காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்த 50 வயது சாஜித் அக்ரம் மற்றும் அவரது 24 வயது மகன் நவீத் அக்ரம் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இதில் சாஜித் பொலிஸாரால் உடனடியாக சுட்டுக் கொல்லப்பட்டார். நவீத் பல குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெறுப்புப் பேச்சு புதிய சட்டத்தில் (hate speech legislation) முக்கிய பல விடயங்கள் குறித்து தொடர்ந்து நாடளாவிய ரீதியாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. வெறுப்புப் பேச்சு மற்றும் வன்முறையை ஊக்குவிப்பவர்களை எளிதில் குற்றம்













சாட்டும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துடன் அதிகமான தண்டனைகள் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மேலும் வெறுப்புப் பேச்சில் ஈடுபடும் அமைப்புகளைக் குறிவைக்கும் தனி நடைமுறை அமுல்படுத்தப்படும். இந்த சட்டத்தால் பல்லின கலாசார நாட்டின் அடிப்படை மனித உரிமைகள் பாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் யூத அமைப்புக்கள், அவுஸ்திரேலிய அரசு பல ஆண்டுகளாக யூத விரோத தாக்குதல்களை புறக்கணித்துள்ளது என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பாக குற்றம் சாட்டியுள்ளனர். பொண்டி கடற்கரை தாக்குதலில் பத்து வயது மடில்டா உள்ளிட்ட பலர் உயிரிழந்ததால், நாடு முழுவதும் துயரமும் கோப மும் ஏற்பட்டது.

அதேவேளை சிட்னி மற்றும் மெல்போர்னில் நடந்த யூதர்களை குறிவைத்த தீக்கிரை சம்பவங்கள் காரணமாக, அவுஸ்திரேலியா கடந்த ஆகஸ்டில் ஈரான் நாட்டின் தூதுவரை வெளியேற்றியதும் குறிப்பிடத்தக்கது.

## கடுமையான துப்பாக்கி சட்டங்கள்:

அவுஸ்திரேலியாவில், பொதுமக்களிடம் இருக்கும் அதிகப்படியான துப்பாக்கிகளை, வாங்கி அழிக்கும் சட்ட வரைவு ஒன்று நிறைவேறி உள்ளது. பிரதமர் அந்தோணி அல்பனீஸ், துப்பாக்கிப் பயன்பாட்டிற்கான சட்டங்களை கடுமையாக்க முடிவு செய்துள்ளார்.

அரசு நிதியுதவியுடன் மக்களிடமிருந்து துப்பாக்கிகளை வாங்கி அழிப்பது, ஒருவருக்கு ஐந்து துப்பாக்கிகள் மட்டுமே அனுமதி என பல்வேறு கட்டுப்பாடுகளை கொண்ட சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. இதனுடன், இனம், மதத்திற்கு எதிரான வெறுப்புப் பேச்சுகளை தூண்டுவதற்கு எதிராகவும் சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேறியது.

இந்நிலையில் புதிய சட்டம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டால், பொதுக் கூட்டங்களைத் தடுக்கக் காவல்துறைக்குக் கூடுதல் அதிகாரம் கிடைக்கக்கூடும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

சிட்னியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் வகையில், நியூ சவுத் வேல்ஸ் அரசு துப்பாக்கிச் சட்டங்களை கடுமைப்படுத்த மாநில சட்டமன்றமும் உத்தரவிட்டுள்ளது. பொண்டி படுகொலைகளைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய தேசிய காவல்துறை இஸ்லாமிய தீவிர வாத அமைப்புகளுடன் தொடர்புடைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வலையமைப்புகளை தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் அவுஸ்திரேலியாவில் வெறுப்புப் பேச்சு மற்றும் மத அடிப்படையிலான வன்முறை கட்டுப்படுத்தப்படும் முக்கிய முன்னேற்றமாக அமையும் என்று ஆளும் அரசு தெரிவித்துள்ளது.

## பிரதமரின் கடும் போக்கு:

புதிய சட்டங்களின் படி வெறுப்பு, பிரிவினை மற்றும் தீவிரவாதக் கருத்துகளை பரப்புபவர்களையும் குறிவைக்கும் என அவுஸ்திரேலிய பிரதமர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். வெறுப்புப் பேச்சைக் கட்டுப்படுத்த தனது அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் வெறுப்பைப் பரப்புபவர்களுக்கு விசாக்களை ரத்து செய்யவோ அல்லது மறுக்கவோ உள்துறை அமைச்சருக்கு புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. யூத எதிர்ப்பைத் தடுக்கவும், எதிர்த்துப் போராடுவதை யும் தகுந்த முறையில் பதிலளிப்பதையும் உறுதிசெய்யவும் ஒரு புதிய பணிக்குழு நிறுவப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனாலும் லிபரல் (Liberal) எதிர்க்கட்சியும், கிரீன்ஸ் கட்சியும் (Greens) கூட்டாக இந்த சட்ட வரைவை ஆரம்பத்திலேயே எதிர்த்தன. பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கவும், நாட்டின் பாதுகாப்பு மற்றும் அமைதியான இருப்புக்காகவுமே அரசாங்கம் 'யூத எதிர்ப்பு, வெறுப்பு மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் மசோதா 2026' ஐ அறிமுகப்படுத்தி உள்ளது.

இருப்பினும் இந்த புதிய சட்டம் கருத்துச் சுதந்திரத்திற்கு இடையூறாக இருக்கலாம் என்று பசுமைக் கட்சியும் கூட்டணி அரசாங்கமும் கூறியுள்ளன.

இதற்கிடையில், கடுமையாக எதிர்க்கப்பட்ட 'இன இழிவுபடுத்துதல்' தொடர்பான சட்டப் பிரிவு இப்போது நீக்கப்பட்டுள்ளது. புதிய திருத்திய சட்டவரைவு நாடாளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

இருப்பினும், கிரீன்ஸ் கட்சித் தலைவர் லாரிசா வாட்டர்ஸ் துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கு தனது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் மற்ற சட்டங்கள் மேலும் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

## கடும்போக்கில் யூத அமைப்புகள்:

ஆனால் அவுஸ்திரேலியா வெறுப்புப் பேச்சு சட்டத்தில் கடுமையான



மாற்றங்களை கொண்டுவர பல்வேறு யூத அமைப்புகளும் கோரியுள்ளன.

குறிப்பாக இன வெறுப்பைத் தூண்டுவதற்கு எதிரான புதிய சட்டத் திருத்தங்களில் உள்ள ஒரு குறிப்பிட்ட பாதுகாப்பு விதியை (Defence) நீக்குமாறு அந்நாட்டின் முதன்மை யூத அமைப்பின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஆளும் லேபர் கட்சியின் (Labor Party) புதிய சட்டத்தின் கீழ், கல்வி அல்லது மத விவாதங்களின் போது மத நூல்களிலிருந்து நேரடியாக மேற்கோள் காட்டிப் பேசுபவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்க முன்மொழியப் பட்டுள்ளது. இந்தச் சலுகையையும் அகற்ற வேண்டும் என்று அவுஸ்திரேலிய யூதர்களின் நிர்வாகக் குழுவின் தலைமை நிர்வாகி பீட்டர் வெர்தைம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தச் சட்டவரைவு குறித்த நாடாளுமன்ற விசாரணையில் பேசிய பீட்டர் வெர்தைம், மத நூல்களை மேற்கோள் காட்டி வெறுப்புணர்வைப் பரப்ப நினைக்கும் போதகர்களுக்கு இந்த விலக்கு ஒரு சட்ட ஓட்டையாக அமைந்துவிடும் என்று எச்சரித்துள்ளார்.

வெறுப்புப் பேச்சுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் சட்டத்தில் இத்தகைய விலக்குகள் இருப்பது, வெறுப்புணர்வை விதைப்பவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிடும் என்றும் அவர் வாதிடுகிறார்.

ஆனால் இந்தக் கோரிக்கை அவுஸ்திரேலியாவின் பல்லின நல்லிணக்கம் மற்றும் மத சுதந்திரத்திற்கு இடையிலான விவாதத்தை மீண்டும் முன்னெடுத்துள்ளது. இதேவேளை வெறுப்புக் குழுக்களை தடை செய்ய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் புதிய சட்டச் சூழ்நிலை அறிமுகமாகிய சில நாட்களில் , அவுஸ்திரேலியாவில் செயல்படும் பல சக்திவாய்ந்த (Neo-Nazi) நவ நாசிச அமைப்புகள் கலைந்து செல்ல முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சட்டம் வெறுப்புக் குழுக்களின் தலைவர்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையையும், அத்தகைய அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு ஏழு ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனையையும் விதிக்க அதிகாரம் அளிக்கிறது.

இதன் உச்ச விளைவாக அவுஸ்திரேலியாவில் செயல்படும் ஒரு நாசி அமைப்பான 'National Socialist Network' (NSN), தனது அமைப்பைக் கலைப்பதாக அறிவித்துள்ளது.

மேலும் 'White Australia Party' மற்றும் 'European Australian Movement' போன்ற பல தீவிரவாத குழுக்கள் இந்த புதிய சட்டங்களின் பின்னர் தங்கள் செயற்பாட்டை நிறுத்த முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்கட்சிக்குள் பிளவு:


அவுஸ்திரேலிய எதிர்கட்சியான லிபரல் கட்சியின் தலைமைப் பதவியில் சுசன் லே நியமிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே, கட்சிக்குள் தற்போது நிலவும் தலைமைத்துவ பதற்றங்கள் அவுஸ்திரேலிய அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளன.

குறிப்பாக, வெறுப்புப் பேச்சுச் சட்டங்கள் தொடர்பான கொள்கை முரண்பாடுகள் கட்சிக்குள் ஒரு ஆழமான நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளன. இத்தகைய சூழலில், உட்கட்சி நிலைத்தன்மையை மீளக் கட்டியெழுப்புவது என்பது வெறும் நிர்வாக முடிவு மட்டுமல்ல, அது கட்சியின் எதிர்கால இருப்பைத் தீர்மானிக்கும் ஒரு மூலோபாயத் தேவையாக இருக்கிறது.

தற்போது, சுசன் லீ மிதவாத அணி மற்றும் மத்திய அணியின் பெரும் பகுதியினரின் ஆதரவுடன் தனது பதவியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார். மிதவாத அணியினரின் தற்போதைய நிலைப்பாடு சுசன் லீயின் தலைமைக்கு ஒரு பாதுகாப்பு வளையமாகச் செயல்படுகிறது. இருப்பினும், அண்மைய சட்ட மியற்றல் விவகாரங்கள் இந்தத் தலைமைத்துவ அமைப்பில் பாரிய வெடிப்பு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இதேவேளை வெறுப்புப் பேச்சுச் சட்டங்களை வலுப்படுத்தும் சட்டமூலம் தொடர்பான விவகாரம், லிபரல் மற்றும் நேஷனல்ஸ் கட்சிகளுக்கு இடையே ஒரு மூலோபாயப் பிளவையும் ஏற்படுத்தியுள்ளது. நிழல் அமைச்சரவை (Shadow Cabinet) எடுத்த கூட்டு முடிவை மீறி, நேஷனல்ஸ் கட்சி கூட்டணியை முறிக்கத் துணிந்தது, எதிர்க்கட்சியின் நிர்வாக ஒழுக்கத்தின் தோல்வியாகவே பார்க்கப்படுகிறது. இது சுசன் லீயின் தலைமைத்துவ அதிகாரத்தின் மீதான நேரடி சவாலாக அமைந்தது.

இதற்கிடையில் இன வெறுப்பை விதைக்கும் எந்தவொரு அமைப்பும் தொடர நாட்டில் அனுமதிக்கப்படாது என்று உள்துறை அமைச்சர் டோனி பேர்க் கடும் தொனியில் தெரிவித்துள்ளார். ஆனாலும் இந்த சட்டத்தால் பல்லின கலாச்சார நாட்டின் அடிப்படை மனித உரிமைகள் பாதிக்கப்படும் என்று பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்துள்ளனர்.



# ஆரணி என்கிற மிதிலா



சிறுகதை...

பாரி

“சத்யா ரீச்சர்...! நீங்கள் வெளிநாட்டுக்கு வெளிக்கிடுறியள் எண்டு கேள்வி... உண்மையாகவோ....?“ அடுத்த ஊர் கடைக்கோடியில் இருக்கும் சுமதியின் கேள்வி இது. புதினம் அறியும் ஆர்வத்தில் பின்னால் ஓடிவந்ததில் மூச்சிரைத்தது அவவுக்கு.

“ஓம்..! மகனும் கனதரம் கேட்டிட்டார்... நானும் இல்லை இல்லை எண்டு சொல்லிக் களைச்சுப் போனனன்.

இந்தமுறை சரி போய்வருவம் எண்டுதான்... அது சரி! பெரிசா ஆருக்கும் சொல்லேல்லை. என்னெண்டு அறிஞ்சனியள்?“ சிரிப்புடன் கேட்டேன்.

“நீங்கள் சொல்லாட்டா...? என்னெண்டு நினைச்சியள் எங்கடை ஊரை? நீங்கள் நினைக்கிறதையே கண்டுபிடிச்சிடுவம் தெரியுமோ?“ பகிடியாகச் சொன்னா சுமதி. அவவின் கையில் பொருட்களுடன் கூடிய ஒரு பை. சற்று தூரத்திலிருந்து ஹார்ன் அடிக்கும் சத்தம் கேட்டது.

“இந்தாள்தான்... ஒரு அஞ்சு நிமிசம் கதைக்க விடாது. கடைக்கு வந்தனாங்கள். வரட்டாம்... கோண் அடிக்கிறார்... சரி..! தற்செயலா நான் பிறகு காணாட்டாலும்.... சந்தோசமாப் போட்டு வாங்கோ என்ன...?“

தன்னுடைய பெருத்த சரீரத்தைத் தூக்கிக்கொண்டு விரைவாக நடந்து சனங்களுக்கிடையில் மறைந்தா அவ. சுமதி என்னுடைய தங்கையுடன் படித்தவ. என்னைவிட பத்து வயது குறைவு. மிதிலா இப்ப இருந்திருந்தால் அவளும் குடும்பம், குட்டி, பிள்ளையள் எண்டு வாழ்ந்திருப்பாள். நெஞ்சில் வேதனையுடன் கூடிய ஒரு வலி தோன்றி மறைந்தது.

எங்கள் இரண்டுபேருக்கும் இடையில் ஞாயமான வயது வித்தியாசம். இருந்தும் நாங்கள் எவ்வளவு அந்நியோன்னியமாக இருந்தனாங்கள்? அவள் இளையவள், ஆனாலும் என்னை அம்மா மாதிரிப் பார்ப்பாள்.. நான் பிறந்த காலம் தொட்டு அப்பாவுக்கு என்னைக் கண்டாலே ஆகாது. நான் பிறந்தவுடனே ‘மூத்தது பெண்ணாப் பிறந்தால் தேப்பன் நாய் படாப் பாடு படுவர்‘ எண்டு ஆரோ சாத்திரி சொல்லிப் போட்டானாம். ‘அண்டையில இருந்து என்னை அடுக்குறேல்லை‘ எண்டு அம்மா... பாவம் சாகும் மட்டும் கவலைப்பட்டவா.

மிதிலா பிறந்த வீட்டுக்கையே அம்மா மோசம் போட்டா. பிறகு,... அவளுக்கு நான்தான் அம்மா. அவள் அம்மாவைப்போலை.. நல்ல நிறமா இருப்பாள். நான் அப்பாவைப்போல.. அப்பாவைப் போல எண்டால்... கடுகடு எண்டு மூஞ்சையை வைச்சிராத கந்தசாமியர் எப்பிடி இருப்பர்? அப்பிடி இருப்பன் நான்.

மிதிலா அப்பாவின்ரை செல்லம். அதால, எனக்கெண்டா எதையும் மாட்டன் எண்ணுற அப்பா மிதிலா போய்க் கேட்டவுடனை சரி என்று சொல்லிப் போடுவர். நாங்கள் நடுத்தர வர்க்க குடும்பம்தான். பெரிசா சொத்துப்பத்து எண்டு எதுகும் இருக்கேல்லை. வீடு, வளவு.. அதோடை கச்சேரியில கிளாக்கரா இருந்த அப்பாவின்ரை சம்பளம்.. அவ்வளவுந்தான்.

மிதிலா நல்ல கெட்டிக்காரி. நான் கொஞ்சம் சுமார்தான். அதாலதான் பிற்காலத்தில யூனிவேசிற்றிக்கு போகேலாம தட்டுப்பட்டு ரீச்சிங்குக்கு வந்தது.



'வீட்டுப் பொறுப்பு முழுவதையும் பார்த்தால் என்னெண்டு படிக்கிறது' என்று எனக்குள்ள ஒரு சாக்கு வைச்சிருந்தாலும், அடியாழத்தில நான் கொஞ்சம் குறைவுதான் எண்டு எனக்கே தெரியும்.

யூனிவேசிற்றி கிடைக்கேல்லை எண்ட உடனை அப்பா சம்பந்தம் பார்க்கத் தொடங்கீட்டார். ஒண்டும் அமையேல்லை. அப்பிடி அமைஞ்சு வந்தவையும் என்னைப் பார்த்திட்டு ஒண்டும் சொல்லாமப் போயிடுவினம். அதுவேற அப்பாவின்ரை கடுப்பைக் கிளப்பி விட்டிடும். அப்பதான் ஊருகளுக்குள்ள ரீவி ஓடத்தொடங்கின காலம். அதில வாற கதாநாயகியளைப் பாத்திட்டு வாற மாப்பிளையளுக்கு என்னை என்னெண்டு பிடிக்கும்?

அங்கையொண்டு இங்கையொண்டாக் கேட்ட குண்டுச் சத்தங்களும் இப்ப அமளியாக் கேட்கத் தொடங்கீட்டுது. ரெண்டு மூண்டு தரம் நாங்களும் வீட்டை விட்டிட்டு அடுத்த ஊருக்கு ஓடிப்போய் நிற்க வேண்டியும் வந்திட்டுது.

அதுவல்ல விசயம்... இடம்பெயர்ந்தது என்பது ஊரோடை ஒத்தது. இந்தக் காலத்தில பெடி, பெட்டையள் திடீர் திடீரெண்டு காணாமற் போனாங்கள். நாட்டுக்காக போட்டாங்கள் எண்ட குசுகுசுப்பு எழுந்தது. இன்னுமொரு பக்கத்தால வெளிநாட்டுக்கு அள்ளுப்பட்டாங்கள். அதுக்கும் அப்பா ஏன் கடுகடுவெண்டு இருக்கிறார் எண்டதுக்கும் என்ன சம்பந்தம் எண்டது அப்ப எனக்கு விளங்கேல்லை.

"இஞ்சை பார் கந்தசாமி...! சும்மாவே எக்கச்சக்க சீதனம் கேட்பாங்கள்... இப்ப வெளிநாடு எண்டு ஒண்டு வந்து... சனம் டொலரிலரும் பவுண்ஸிலயும் காசைப் பற்றிக் கதைக்க வெளிக்கிட்டிட்டுது... பின்ன இனி சீதனம் குடுத்துப் பாரன்..!"

அப்பாவின்ரை நண்பன் கதைத்தது கேட்ட போதுதான் விசயம் விளங்கியது. குமர்களை எப்பிடிக் கரையேத்துறது எண்டு அப்பா கவலைப்படுறார்.

அப்பா பென்சன் எடுத்து வீட்டை நிக்கத் தொடங்கின அந்த வருசம்தான் நான் முதன்முதலா பக்கத்து ஊர் சின்னப் பள்ளிக்குடத்தில ரீச்சரா சேர்ந்தன். காலையிலயே சமைச்சு வைச்சிட்டு சைக்கிளில பள்ளிக்கூடம் போவன். அப்ப மிதிலா ஊர்ப் பள்ளிக்குடத்தில ஓ எல் படிக்கிறாள். அந்த வருசம் சோதனை எடுத்திட்டு மறுமொழிக்காக காத்திருந்தாள்.. அவள்தான் நல்ல பெறுபேறு எடுப்பாள் என்று பள்ளிக்கூடம் எதிர்பார்த்திருந்தது.

அப்ப இந்தியன் ஆமி இறங்கியிருந்த நேரம். கொரோனாவைப் போல எல்லா இடங்களிலும் பரவியிருந்தாங்கள் அவங்கள். எங்களுக்கே தெரியாத எங்கடை குச்சொழுங்கையளுக்கை கூட அவங்கள் பூசுற எண்ணெயின்ரை நாத்தம் அடிக்கும். அதால, எவ்வளவு சுத்துப் பாதை எண்டாலும் முடிஞ்சளவு பெரிய ரோட்டாலதான் வீட்டை வரவேணும்.

அன்றைக்கு நான் வீட்டை வர கொஞ்சம் சுணாங்கிப் போச்சு. வழமைக்கு மாறாக வீட்டு முத்தத்தில ஆக்கள் கொஞ்சப் பேர் நிண்டினம். அப்பா திண்ணையில இடிஞ்சுபோய் இருந்தார். அவர் கண்களில் கண்ணீர். எல்லாரும் ஏதோ இழவு வீட்டில துக்கம் விசாரிக்க வந்த மாதிரி நிண்டினம்.

"மிதிலாவை ஒரு இடத்திலயும் காணேல்லை... நான் நாட்டுக்காகப் போறன்... என்னைத்தேடி வராதேங்கோ எண்டு கொப்பாவுக்கு எழுதி வைச்சிட்டு ஓடீட்டாள்...." பாக்கியம் மாமி சொன்னா.

"ரிக்கற் எடுக்காத ஆக்கள் எடுங்கோ..!" அருகில் கேட்ட கொண்டக்டரின் குரல் என்னை நிஜவுலகிற்குக் கொண்டு வந்தது. யோசனையுடன், என்னையுமறியாமலே இவ்வளவு தூரம் நடந்து வந்து பஸ்ஸிலேயும் ஏறியிருக்கிறன்.

வீட்டுக்கு வந்தும் எனக்கு எதுவும் செய்யத் தோன்றவில்லை. காய்கறிப் பையை குசினிக்குள் வைத்துவிட்டு விறாந்தையில் வந்து உட்கார்ந்தேன்.

அப்ப அந்த நேரம் மிதிலாவை எங்கேயென்று போய்த் தேடுறது என்று தெரியேல்லை. வெளியில தெரியவந்தால் ஆமிக்காரன் வீட்டை வந்திடுவான். அப்பா அழுது அன்றைக்குத்தான் நான் பார்த்தனான். அதுக்குப் பிறகு அப்பா என்னைத் திட்டுறதில்லை. எங்கையாவது துவக்கு வேட்டுச் சத்தம் கேட்டால் திடுக்கிட்டுப்போய் என்னைப் பார்ப்பார். அன்றையப் பொழுது நெஞ்சிடியுடன் கழியும்.

மிதிலா எல்லாப் பாடங்களிலும் சிறப்புச் சித்தி அடைந்திருந்தாள். அவள் இல்லாமலே அதை நாங்கள் பாயாசம் வைத்துக் கொண்டாடினோம். வீட்டை விட்டுப் போன மிதிலாவை அதற்குப் பிறகு நாங்கள் காணவேயில்லை. அச்செழுவில் நடந்த சண்டையொன்றில் அவள் வீரச்சாவடைந்ததாகவும் அருகில் உள்ள சுடுகாடு ஒன்றில் அவளை எரித்ததாகவும் யாரோ முகமறியாத ஒருவர் வந்து தகவல் சொன்னார்.

அது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஒரு வலி. மீள முடியாத ஒரு இழப்பு. கிட்டத்தட்ட முப்பத்தெட்டு வருடங்களாகின்றன நான் தங்கை என்னும் என்னுடைய பொக்கிசத்தைத் தொலைத்து. அன்றிலிருந்து ஒரு நாள்கூட நான் அவளை நினையாதிருந்தது கிடையாது. உண்மையைச் சொல்லப்போனால் நான் அவளை என் மகளாகத்தான் வளர்த்தேன். என்னையுமறியாமல் என் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டேன்.

அதன் பின்தான் எனக்குத் திருமணமாகியது. அவர் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். வயது வித்தியாசம் அதிகம்தான். நான் மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயம் எதுவும்கூட சொல்லவில்லை. அப்பாவின் மனம் நோகாமல் நடந்துகொண்டேன் என்பதை அவரும் புரிந்துகொண்டார். சரியாக ஒரு வருடத்தில் எங்களுக்கு ஒரு மகன் பிறந்தான். துரதிஷ்டவசமாக என்னுடைய மணவாழ்க்கை நீடிக்கவில்லை.

ஒருநாள் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு சாய்ந்தவர்தான். அப்படியே போய்விட்டார். அவர் நல்லவரா கெட்டவரா என்று தெரிந்து கொள்ளும் நெருக்கத்துக்கு வருமுன் அவர் போய்விட்டார். அப்போது அகிலனுக்கு ஐந்து வயது.

போர்க்காலத்திலும் கையில் நிரந்தர வருமானம் இருந்ததனால் என்னால் பிழைக்க முடிந்தது. அதற்கிடையில் இடப்பெயர்வுகள், பட்டினிகள், பொருளாதாரத்தடை, மருத்துவ வசதியின்மை,அப்பாவின் பாரிசவாதம் என்று ஆயிரம் பிரச்சனைகள்.

இடம் பெயர்ந்து பெயர்ந்து நோயாளியான அப்பாவையும் பார்த்து, அகிலனையும் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, பாடசாலைக்கும் போவது கஷ்டமாக இருந்தது.

அதனால் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று அப்போது அகிலனை அவன் அத்தையுடன் விட்டிருந்தேன். அவ தூரமாக வேறொரு ஊரில் இருந்தா. பின்னாளில் அவர்களும் இடம்பெயர வேண்டி வந்தது. இடம் பெயர்ந்து பெயர்ந்து இறுதியில் அவனையும் கூட்டிக்கொண்டு அப்படியே லண்டன் வரை போய்விட்டார்கள்.

அது எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சி. என்னுடைய பிள்ளைப் பாசமா அல்லது அவனது பாதுகாப்பா என்ற கேள்வி எழ, பாதுகாப்புத்தான் என்ற கசப்பான முடிவு கிடைத்தது. அத்தையுடனே வளர்ந்தான் அவன். கிழமைக்குக் கிழமை தவறாமல் ஃபோன் பண்ணுவான். அன்று முழுக்க அழுவேன் நான்.

எனக்கு அப்பா, அப்பாவுக்கு நான், வேலைக்கு பள்ளிக்கூடம் என்று வருடங்கள் பறந்தன. இடையில் அப்பாவும் தவறிவிட தனிமை பழக்கமானது. என்னுடன் மிதிலாவும் இருப்பதாக கற்பனை செய்துகொள்வதால் தனிமை தெரிவதில்லை.

வருடங்கள்ஓடின. அகிலன்காதலித்துதிருமணமும் செய்துகொண்டான். அவனும், மனைவியுமாக இந்தியாவில் வைத்து என்னை சந்தித்தனர். அது ஒரு உணர்வுபூர்வமான சந்திப்பு. அத்தனை வருடங்கள் கடந்த சந்திப்பிலும் அகிலன் என்னிடம் அவ்வளவு பாசமாக நடந்து கொண்டான்.

அவனுக்கு இப்போது இரட்டைக் குழந்தைகள். நான் நேரில் வந்து பார்க்கும்வரை பிள்ளைகளின் பெயரைக்கூட சொல்ல மாட்டேன் என்றுவிட்டான் மகன். நானும் பென்சன் எடுத்துவிட்டேன். இப்போதெல்லாம் பேரப்பிள்ளைகளைப் பார்க்கும் ஆவல் என்னுள் கிளர்ந்தெழுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

இதோ....! அந்த நாளும் வந்து விட்டது. ஹீத்ரோ விமான நிலையத்தில் வந்து இறங்கினேன். இறங்கியவுடனேயே குளிர் என்பு வரை குத்தியது. எனக்காகக் காத்திருந்த மகன் ஓடி வந்து கட்டியணைத்துக் கொண்டான். மனைவி பிள்ளைகள் வீட்டில் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னான்.

“அம்மா..! இந்த மொமென்ற் எனக்கானது. அதைப் பங்குபோட என்னால் இயலாது..... அது தான் அவையை வீட்டில காத்திருக்கச் சொல்லி விட்டிட்டன். எல்லாரும் எக்சைற்மென்ரோடை இருக்கினம்.....“ சிரித்தான் மகன்.

முதன் முதலில் லண்டன் வந்திருக்கிறேன். கார்ப் பயணத்தின் போதுகூட வெளியில் பராக்குப் பார்க்கும் மனமின்றி காரோடும் அகிலனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். எத்தனை வருட காலத்தை தொலைத்து விட்டிருக்கிறேன்?

ஒரு மணித்தியால பயணத்தில் வீட்டை அடைந்து விட்டோம். வீட்டு வாசல் பலூன்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. கதவு திறந்தே இருந்தது. உள்ளே நுழைந்ததுதான் தாமதம் பளிச்சென்று லைற் போடப்பட்டது. உள்ளே ‘வெல்கம் ஹோம்‘ என்று கொட்டை எழுத்தில் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ‘பார்ட்டி பொப்பேஸ்‘ ஐ வெடிக்க வைத்து என்னை மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைத்து விட்டார்கள்.



“அத்தை...!! எவ்வளவு காலம் பிடிச்சிருக்கு இங்க வர...?“ என்று ஓடி வந்து அணைத்துக்கொண்டாள் மருமகள்.

“இப்ப முக்கியமான தருணம்... அம்மா...! றெடியா..?“ என்ற மகன்,

“இப்ப வெளியில வாங்கோ செல்லங்கள்..!“ என்று கூப்பிட்டான்.

மருமகளின் பின்னாலிருந்து இடது புறமாக ஒரு சின்ன உருவம் எட்டிப் பார்த்தது. குறும்புப் புன்னகையுடன் மெல்ல வெளியே வந்தது. அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனேன் நான். நான் என் கைகளில் தூக்கி வளர்த்த, என் உயிரின் பாதியான மிதிலா மூன்று வயதில் எப்படி இருந்தாளோ கொஞ்சமும் பிசகாமல் அப்படியே இருந்தாள் அவள்.

“மீற்... மிதிலா..!“ என்றான் என் மகன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் காலச்சக்கரத்தில் பின்னோக்கிப் போய்விட்டேனா...? அல்லது மிதிலா மறுபடி பிறந்து என்னிடம் வந்து விட்டாளா..?

“அப்பம்மா....!!“ கூப்பிட்டபடி குழந்தை ஓடி வந்தது கூட எனக்கு... “அக்கா...!“ என்றுதான் கேட்டது.

அதிர்ச்சியில் இருந்து விடுபட முன்பு மருமகளின் வலது புறத்திலிருந்து அச்சொட்டாக அதேபோன்ற இன்னொரு உருவம் வெளிப்பட்டது.

“இது ஆரணி.....! அப்பம்மாட்டை ஓடி வாங்கோ...“ என்றவன் “ஒத்த இரட்டையர்..“ என்றான்.

‘வீரவேங்கை ஆரணி என்கிற மிதிலா‘ ஒவ்வொரு மாவீரர் நாளிலும் நான் கேட்கும் ஒலிபரப்பு..... என்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.





கே.பாலா

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிங்கள 'ஶ்ரீ'யும் தமிழ் 'சிறி'யும்

**1957 இல்**, தனிச் சிங்களச் சட்டம் அமுலான பின்னர், இலங்கையில் வாகனத் இலக்கத் தகடுகளில் சிங்கள 'ஶ்ரீ' எழுத்தைப் பயன்படுத்தியதற்கு எதிராகத் தமிழரசுக் கட்சி தலைமையில் போராட்டம் வெடித்து சிங்கள 'ஶ்ரீ' எழுத்து கறுப்பு மை பூசப்பட்டு, தமிழ் 'சிறி' யாக மாற்றப்பட்டது.

இந்தப் போராட்டமே தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் பலமான அடித்தளமாக அமைந்தது. ஆனால் அதே தமிழரசுக் கட்சி தற்போது தமது கட்சியிலுள்ள மக்கள் பலமான தமிழ் 'ஶ்ரீ' க்கு (சிறிதரனுக்கு) எதிராக முன்னெடுக்கும் சதி தமிழரசுக் கட்சியின் அடித் தளத்தை, மக்கள் பலத்தை ஆட்டம் காண வைக்கப் போகின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவராக பொதுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சிறிதரனை சட்ட சதியினால் அப்பதவியை ஏற்கவிடாது தடுத்தவர்கள் தற்போது அவரை பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதாக அறிவித்துள்ளனர்.

இதன் மூலம் சிறிதரனுக்கு எதிரான தமது 'பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியை பறிப்பது, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பறிப்பது, தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவது' என்ற மூன்று சதிகளில் ஒன்றை சகுனித்தனமாக அரங்கேற்றியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக என்று சிவஞானம் சிறிதரன் வாக்கெடுப்பு மூலம் பொதுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டாரோ அன்று அவருக்கு பிடித்த சனி இன்றுவரை அவரை விடாது துரத்தி வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை சிறிதரன் ஆதரித்தமையை சாட்டாக வைத்து 'சிறி தரன் கட்சிக்கு கட்டுப்படவில்லை, தலைமையின் முடிவுக்கு முரணாக செயற்படுகின்றார், ஆகவே அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற சதியை முன்னெடுத்தனர். ஆனால் அது வெற்றி பெறவில்லை.

அடுத்ததாக சிறிதரனை பாராளுமன்றத் தேர்தலில் எப்படியாவது தோற்கடித்து அவரின் மக்கள் செல்வாக்கை இல்லாமல் செய்து அதன்மூலம் அவரை கட்சியிலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டமிட்டு 'சிறிதரன் மதுபானசாலைக்கான அனுமதிகளை ரணில் அரசிடமிருந்து அரசியல் இலஞ்சமாக பெற்றுள்ளார்' என்ற குற்றச்சாட்டை பாராளுமன்றத் தேர்தலின்போது தீவிர பிரசாரமாக முன்னெடுத்தனர். ஆனால் சிறிதரனின் வெற்றியை தடுப்பதற்கு பதிலாக அவர்களே தேர்தலில் மண் கவ்வினர். சற்றும் மனம்தளராத விக்கிரமாதித்தனாக சற்று மாற்றி யோசித்தவர்கள் சிறிதரனுக்கு எதிராக

சிங்களவர்களை பயன்படுத்தத் தொடங்கினர். இவர்களின் பின்னணியில் சிறிதரன் சட்டத்துக்கு முரணாக சொத்துக்கள் வைத்திருப்பதாக சிவில் ஆர்வலர் சஞ்சய் மஹாவத்த என்பவர் குற்றப் புலனாய்வுத்துறையில் முறைப்பாடு செய்தனர்.

அந்த முறைப்பாட்டை உடனடியாக விசாரணை செய்து உண்மையை வெளிப்படுத்துமாறு சிறிதரனும் வலியுறுத்தியபோதும் சில மாதங்கள் கடந்தும் அந்த முறைப்பாடு கிடப்பில்தான் கிடக்கின்றது.

அதன் தொடர்ச்சியாக அரசியலமைப்பு பேரவையில் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாகவுள்ள சிறிதரன் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாகவுள்ள ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக அரசு நியமிக்க ஆதரவாக வாக்களித்து விட்டார் என்ற குற்றச்சாட்டை சிங்கள இனவாத எம்.பி.க்களான சாமர சம்பத் தசாநாயக்க ,தயாசிறி ஜயசேகர ஆகியோர் மூலமாக பாராளுமன்றத்தில் முன் வைக்க வைத்தனர்.

அதனைப் பயன்படுத்தி கட்சியின் கட்டுப்பாட்டை மீறி இராணுவ அதிகாரி ஒருவருக்கு சிறிதரன் ஆதரவாக வாக்களித்து விட்டார் என்ற குற்றச்சாட்டில் சிறிதரனிடம் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு விளக்கம் கோரியதுடன் அரசியலமைப்பு பேரவையிலிருந்து சிறிதரன் உடனடியாக விலக வேண்டுமெனவும் பணித்தது.

ஆனால், “அரசியலமைப்பு பேரவை ஒரு சுயாதீனமான பேரவை. இதில் எந்தவிதமான அரசிய தலையீடும் கட்சி செல்வாக்கும் இருக்க முடியாது. இதில் எனது கட்சியின் செல்வாக்குகளை நான் பிரயோகிக்க முடியாது. இந்த சபை மூலம் கட்சி சார்பு அரசியலும் செய்ய முடியாது. செய்யக் கூடாது.

அரசியலமைப்பு பேரவையில் எனது பங்களிப்பும் வாக்களிப்பும் மனச் சாட்சியின் படியானவை. அத்துடன் அரசியலமைப்பு பேரவைக்கு நான் எனது கட்சியின் அரசியல் குழு அல்லது மத்திய செயற்குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் எனது கட்சியின் அரசியற் குழுவிலுள்ள சிலரின் தனிப்பட்ட அரசியல் விரோதங்களுக்காகவும் நிகழ்ச்சி நிரலுக்காகவும் நான் பதவி விலக முடியாது” என சிறிதரன் உறுதியாக கூறிவிட்டார்

இவ்வாறான நிலையில்தான் இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் ஆலோசனையை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தினால் அவரின் பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியை மீளப்பெற கட்சி தீர்மானித்துள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் அறிவித்துள்ளார். அரசியற்குழு அவர்மீது நம்பிக்கை வைத்து ஏகமனதாக பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியை அவருக்கு வழங்கியது. அரசியல் குழு இரண்டு தடவைகள் அவர் பாராளுமன்ற அரசியல் பேரவையிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கியிருந்தது.




தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் ஆலோசனையினை ஏற்றுக்கொள்ள சிறிதரன் மறுத்ததன் காரணத்தினால் அரசியல் குழுவினால் வழங்கப்பட்ட நியமனத்தினை மீளப்பெறுவது எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் முக்கிய குற்றச்சாட்டு ‘நாட்டின் கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க ஒரு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிக்கு சிறிதரன் ஆதரவாக வாக்களித்து விட்டார்’ என்பதாகவே உள்ளது.

அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்ட, இனப் படுகொலையில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தை சேர்ந்த ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு சிறிதரன் ஆதரவாக வாக்களித்து விட்டார். இதன் மூலம் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக சிறிதரன் செயற்பட்டு விட்டார் என்பதே தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் முக்கிய குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு நியாயம் என்றால் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவிடம் சில கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

இலங்கை இராணுவத் தளபதியாகவிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான இறுதிப்போரை வழிநடத்தி பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களை இனப்படுகொலை செய்ததன் முக்கிய சூத்திரதாரியான ஜெனரல் சரத் பொன்சேகா 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கினார்.

அப்போது சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென இலங்கை தமிழரசுக் கட்சி பகிரங்க வேண்டுகோள் விடுத்ததுடன் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக பிரசாரங்களும் மேற்கொண்டது. சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக வாக்களித்தது. இது எந்த வகையில் நியாயம்?

தமிழினத் துரோகி என தமிழ் மக்களினால் அடையாளப் படுத்தப்படும் இராணுவ துணைக் குழுவாக செயற்பட்ட, நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட, காணாமல் போக காரணமாகவிருந்த, மனிதப் படு கொலையாளர் எனக் குற்றம் சாட்டப்பட்டவர் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தா.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் மூலம் சபைகளில் ஆட்சியமைக்கவென, யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கிலுள்ள அவரின் அலுவலகம் தேடிச்சென்ற தமிழரசுக் கட்சியின் தலைமை, அதாவது பதில் தலைவரான சிவஞானம் ஈ.,.பி. டி.பி.யின் காலடியில் மண்டியிட்டது குற்றமில்லையா? சில சபைகளில் அவரின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது குற்றமில்லையா?

2017 ஜனவரியில் சுமந்திரனைக் கொலை செய்யத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டி இலங்கை புலனாய்வுப் பிரிவினர் சிலரைக் கைது செய்தனர். இதனைத்



தொடர்ந்து சுமந்திரனுக்கு விசேட அதிரடிப் படையினரின் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவரது வீடு, அலுவலகம், வாகனம் என அனைத்திலும் விசேட அதிரடிப் படையினரே நிறைந்திருந்தனர். சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் தனது சொந்தத் தொகுதிக்கு செல்லும்போது கூட அதிரடிப் படையினர் புடைசூழவே சென்றார்.

சிறிதரன் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு அதுவும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் எதுவும் முன்வைக்கப்படாத ஒருவருக்கு ஆதர வளித்தது குற்றமென்றால் சுமந்திரன் தமிழினப் படுகொலையாளிகளின் ஒரு தரப்பான விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் வடக்கில் வலம் வந்தது குற்றமில்லையா?

அது அரசாக வழங்கிய பாதுகாப்பு என்று கூறினாலும் அதனை வேண்டாம் என மறுக்கும் உரிமை சுமந்திரனுக்கு இருந்தது. ஏன் மறுக்கவில்லை?

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகளினதும் தமிழ் பொது அமைப்புகளினதும் ஆதரவுடன் தமிழ் பொது வேட்பாளராக தமிழின உணர்வாளரும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான அரியநேத்திரன் களமிறங்கிய போது தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக அரிய நேத்திரனை தோற்கடித்தே தீருவோம், சஜித் பிரேமதாசாவை வெற்றிபெற வைப்போம் என தமிழரசுக் கட்சியின் தற்போதைய பதில் பொது செயலாளர் பொது வெளியில் சூளுரைத்ததுடன் சொன்னதையும் செய்தார்.

தமிழ் தேசிய உணர்வாளரான அரியநேத்திரனுக்கு வாக்களிக்க வேண்டாம், சஜித் பிரேமதாசவுக்கு வாக்களியுங்கள் என தமிழ் மக்களின் விருப்புக்கு எதிராக செயற்பட்ட குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக் கப்படவில்லை? தமிழ் தேசிய உணர்வாளருக்கு எதிராகவும் சிங்கள இனவாதி ஒருவருக்கு ஆதரவாகவும் தமிழரசுக் கட்சியின் தலைமை செயற்பட்டது குற்றமில்லையா?

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கான வாக்கெடுப்புக்கு பின்னர் வேறு ஒரு தெரிவுக்கான வாக்கெடுப்பு அரசியலைப்பு பேரவையில் நடந்தபோது அதில் சிறிதரன் வாக்களிக்கவில்லை. இதனையும் வாக்களிக்காது விட்டது மூலம் சிறிதரன் அரசுக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளார் என்று தமிழரசின் சில பிரகிரு திகள் சிறிதரனுக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தனர்.

அநுரகுமார அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்ற போது தமிழரசுக் கட்சி வாக்களிக்கவில்லை. அப்படியானால் அநுரகுமார அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கு தமிழரசுக் கட்சி மறைமுகமாக ஆதரவளித்ததா?

இது மட்டுமா சிறிதரன் ஓய்வுபெற்ற சிங்கள இராணுவ அதிகாரி ஒருவருக்கு ஆதரவாக அரசிலமைப்பு பேரவையில் வாக்களித்து விட்டார் என்பதற்காக கொதித்தெழுந்து அவரது பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியை பறிப்பதில் முன்னின்ற இருவரில் ஒருவர் தனது மருமகளாகவும் சம்பந்தியாகவும் சிங்களக் குடும்பத்துடன் இணைந்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தலைவராக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் முக்கிய பதவியில் இருந்தவரும் பின்னர் அங்கிருந்து மஹிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுனவுக்கு தாவி தேர்தலில் போட்டியிட்டு மக்களினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழரசுக்குள் பின்க தவால் நுழைந்தவருமான இன்னொருவரோ தனது வருங்கால மனைவியாக, தற்போதைய காதலியாக ஒரு சிங்களப் பெண்ணுடன் தொடர்பில் இருக்கின்றதாக தகவல்கள் உள்ளபோதும் தற்போது அதனை வெளிக்காட்டாமல் இருக்கின்றார்.

இவர்கள்தான் ஓய்வு பெற்ற சிங்கள இராணுவ அதிகாரி ஒருவருக்கு சிறிதரன் வாக்களித்துவிட்டதாக 'தமிழ் தேசிய உணர்வோடு' குமுறுகின்றனர்.

எனவே தற்போது அரசியலமைப்பு பேரவையில் சிறிதரன் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு வாக் களித்துவிட்டார் என்ற குற்றச்சாட்டை பயன்படுத்தி தமது உள்வீட்டு அரசியல் எதிரியான சிறிதரனை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி அந்தப் பதவியை கைப்பற்றுவதுடன் தமி ழரசுக் கட்சியிலிருந்து சிறிதரனை வெளியேற்றும் சதியே முன்னெடுக்கப் படுகின்றது.

1957 இல், தனிச் சிங்களச் சட்டம் அமுலான பின்னர், இலங்கையில் வாகனத் இலக்கத் தகடுக ளில் சிங்கள 'ஸ்ரீ' எழுத்தைப் பயன்படுத்தியதற்கு எதிராகத் தமிழர் தரப்பில் போராட்டங்கள் வெடித்தன. இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமையிலேயே இப்போராட்டம் தீவிரமடைந்து சிங்கள 'ஸ்ரீ' எழுத்து கறுப்பு மை பூசப்பட்டு, தமிழ் 'சிறி' யாக மாற்றப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் தீவிர தமிழ்த் தேசியப்பற்றை வெளிப்படுத்திய இந்த போராட்டமே தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் தமிழ் மக்களின் பேராதரவுக்கும் பலமான அடித்தளமாக அமைந்து தமிழரசுக் கட்சியை தமிழ் தேசிய இனத்தின் தாய்க் கட்சியாக மாற்றியது .

தமிழ் தேசிய உணர்வாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் வெளியேற்றங்கள், உறுப்புரிமை நீக்கங்கள், பழிவாங்கல்கள், பதவிப் பறிப்புக்கள், சதிகள் தமிழரசுக் கட்சியை மிகவும் பலவீனப்படுத்தி, தமிழ் மக்கள் வெறுத்து ஒதுக்கும் ஒரு கட்சியாக மாற்றி வருகின்றது.

இதற்கு உதாரணமாக அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கில் தமி ழரசுக் கட்சி அடைந்த படுதோல்வியையும் அதன் பின்னர் நடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்ட பரிதாப நிலையையும் எடுத்துக் கொள்ளமுடியும்.

இவ்வாறானதொரு நிலையில் இந்த நிலையை மேலும் மோசமாக்கும் வகையில் தமிழரசுக் கட்சி தற்போது தமது கட்சியிலுள்ள மக்கள் பலமான தமிழ் சிறிக்கு (சிறிதரனுக்கு) எதிராக முன்னெடுக்கும் சதி தமிழரசுக் கட்சியின் அடித்தளத்தை ஆட்டம் காண வைப்பதுடன், தற்போதுள்ள கொஞ்ச நஞ்ச மக்கள் பலத்தை அடியோடு இல்லாமல் செய்யும் என்பது மட்டும் உண்மை.




அமுதே! என் அன்னைத் தமிழே!
ஊனிலும் உயிரிலும்
உறைந்தவளே • என்
ஆவியில் நிறைந்தவளே!
கருத்தில் நிறைந்தவளே!
கருப்பொருளாய் இருப்பவளே • உனை
சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்!!

இமைக்கும் நொடியும்
மறக்க முடியா செழுந்தமிழே!
சிந்தனைக்கும் செயலுக்கும்
அடித்தளமான
தொன்மை மிகுந்த செம்மொழியே!

வீழ்ந்த தமிழனையும் வாழவைக்கும்
இன்மொழியே! நறுங்கனியே! • நீ
தமிழ் அன்னை என்பதனாற்தான்
பிறக்கும்போதே
'அம்மா' என்று அழுகின்றோமா?

ஆதிக்குடிகளாய் நாமிருப்பதால்
வீதிக்கு வந்தோம்.
வீடிழந்தோம். ஊரிழந்தோம்..
தாயகம் துறந்து
ஏதிலியாய் அல்லற்படுகிறோம்!

திக்கெட்டும் முரசு கொட்டி
நாம் வாழ்ந்ததால்
வேரோடு பிடுங்கி வீசிவிட்டார் வீணர்!
அகிலமெங்கும் பரவிக் கிடக்கிறோம்.
அந்நிய மொழிகளில்
பேசுகிறோம். ஆயினும்
ஆணிவேராக நீயிருந்து
எமை வழிநடத்துகிறாய் முத்தமிழே!!

தேன்மொழியே! ஞாலத்தில்
முந்தையவளே!
பார் போற்றும் பழந்தமிழே!
தினம் உனை வணங்கினாலும்
தாய்மொழித் தினத்தில்
உனக்கொரு சிறப்பு வணக்கம்!!
நீ வளர்வாய்!
வாழ்வாங்கு வாழ்வாய்!
எமை வாழ வைப்பாய்!!

(உலக தாய்மொழித் தினம்
21/02/2026 இல் எழுதப்பட்டது.)



# போர்க்காலத்தின் தகவல் பரிமாற்ற ஊடகமாக விளங்கிய வானொலி

**ஒவ்வொரு** ஆண்டும் பெப்ரவரி 13 ஆம் தேதி UNESCO அறிவித்துள்ள உலக வானொலி நாள் உலகெங்கும் வானொலியின் சமூகப் பங்களிப்பை நினைபடுத்துகிறது. தகவல் பரிமாற்றத்தின் மிக எளிய, மலிவு மற்றும் விரைவான சேவைக்காக வானொலி இன்னும் பல கோடி மக்களின் வாழ்வோடு இணைந்திருக்கிறது.

தொலைதூர கிராமங்களிலிருந்து நகர மையங்கள்வரை மனிதர்களை ஒன்றிணைக்கும் ஒலிப் பாலமாக வானொலி தேசங்களையும் உலகத்தையும் இணைக்கின்றது. இலங்கைக்கு என்று தனித்துவமான வானொலிப் பாரம்பரியம் உண்டு. அத்துடன் புலிகளின் குரல் என்ற தமிழர்களின் போராட்ட வானொலிப் பாரம்பரியமும் ஈழ மண்ணிற்குள்ளது.

## இலங்கையின் வானொலிப் பாரம்பரியம்

தென்னாசியாவில் வானொலி ஒளிபரப்பின் முன்னோடிகளில் ஒன்றாக இலங்கை வானொலி எனப்படும் Sri Lanka Broadcasting Corporation (SLBC) விளங்குகிறது. 1920 களிலேயே ஆரம்பித்த ஒலிபரப்பு, பின்னர் 'Radio Ceylon' என உலகளவில் பிரசித்திபெற்றது ஆசியாவின் முதல் வானொலி. குறிப்பாக தமிழ்ச் சேவை, வடக்கு – கிழக்கு மக்களின் கலாசார, அரசியல் மற்றும் சமூக உணர்வுகளை வெளிப்படுத்திய முக்கிய மேடையாக இருந்தது.

போர்க்காலத்திலும் பேரிடர் சூழல்களிலும், தகவல் பரிமாற்றத்தின் முதன்மை ஆதாரமாக வானொலி திகழ்ந்தது. நூற்றாண்டு கடந்து இன்னமும் மக்களின் மனங்களில் இலங்கை வானொலி நீங்காத இடத்தை தக்க வைத்திருக்கின்றது. இலங்கையில் உள்ள மக்கள் மாத்திரமின்றி தமிழ்நாட்டு மக்களின் வாழ்விலும் உயர்விலும் நகர்விலும் இலங்கை வானொலிக்கென ஒரு தனியான இடமுண்டு. இலங்கையில் வானொலி வெறும் செய்தி ஊடகமல்ல; அது கலாசார நினைவகமாகவும் இருந்தது.

நாட்டுப்புறப் பாடல்கள், இலக்கிய நிகழ்ச்சிகள், விவசாய அறிவுரைகள், கல்வி ஒலிப்பரப்புகள் ஆகியவை கிராமிய வாழ்க்கையுடன் வானொலியை நெருக்கமாக இணைத்தன. இன்று தனியார் எப்.எம். நிலையங்கள் பெருகியுள்ளன. இசை, இளைஞர் நிகழ்ச்சிகள், அரசியல் விவாதங்கள் என வானொலி புதிய வடிவம் பெற்றாலும், அதன் அடிப்படை நோக்கம் மக்களை இணைக்கும் சேவையில் எந்த மாற்றமுமில்லை.

## இந்தியாவின் வானொலி வளம்.

இந்தியாவில் All India Radio (AIR), 'ஆகாஷ் வாணி' என அழைக்கப்படும் அரசு வானொலி, 1936 இல் தொடங்கப்பட்டது. பல மொழிகளிலும்

ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் AIR, இந்தியாவின் மொழி மற்றும் பண்பாட்டு பல்வகைப்பாட்டை பிரதிபலிக்கிறது.

செய்தி, நாடகம், இசை, கல்வி, விவசாயம், அறிவியல் எல்லாவற்றிற்கும் தனித்தனி நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

சுதந்திரப் போராட்ட காலத்தில் வானொலி தேசிய உணர்வை ஊட்டிய கருவியாக இருந்தது. பின்னர், கிராமிய மேம்பாடு, சுகாதார விழிப்புணர்வு, பெண்கள் முன்னேற்றம் போன்ற சமூகப் பணிகளில் முக்கிய பங்கு வகித்தது.

சமீப காலங்களில் சமூக வானொலிகள் (Community Radio) இந்தியாவில் வேகமாக வளர்ந்து வருகின்றன. உள்ளூர்க் குரல்களுக்கு இடமளித்து, சிறுபான்மையினரின் அனுபவங்களை வெளிக்கொணரும் பணியை அவை மேற்கொள்கின்றன.

டிஜிட்டல் காலத்திலும் வானொலியின் தேவை.

இணையம், சமூக ஊடகங்கள், பொட்காஸ்ட்கள் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் வளர்ந்தாலும், வானொலி தனது தனித்தன்மையை இழக்கவில்லை. மின்சாரம் அல்லது இணையம் இல்லாத சூழல்களிலும் செயல்படக் கூடிய சாதனமாக அது தொடர்ந்து பயன்படுகிறது.

இயற்கை அனர்த்தங்கள், அரசியல் பதற்றங்கள் போன்ற அவசர நேரங்களில் வானொலி நம்பகமான தகவல் ஊடகமாக விளங்குகிறது.

## தமிழீழ வானொலித்துறை

'புலிகளின் குரல்' என்பது இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஒலிபரப்பு சேவையாக இயங்கியது. 1990 களில் வடக்கு இலங்கையில் இருந்து ஒலிபரப்பான இந்த வானொலி, செய்தி அறிவிப்புகள், அரசியல் கருத்துரைகள், நினைவுநாள் நிகழ்ச்சிகள் மற்றும் இயக்கத்தின் உள்நிலை தகவல்களை வெளியிட்டது.

போர் நிலையிலிருந்த சூழலில், அது இயக்கம் மற்றும் போர் சார்ந்த தகவல் பரிமாற்ற ஊடகமாகவும் கருத்தியல் பரப்புரைக் கருவியாகவும் செயல்பட்டது. 2009ஆம் ஆண்டு இறுதிப் போருடன் ஈழ மண்ணில் அதன் ஒலிபரப்பு நிறுத்தப்பட்டது.

சினிமா பாடல்களைத் தவிர்த்து, களியாட்ட நோக்கம் தவிர்த்து விடுதலை பற்றிய உணர்வை ஊட்டியதுடன் சமூக எழுச்சிக்கான ஒலிப் படைப்புக்களையும் புலிகளின் குரலும் தமிழீழ வானொலியும் வடக்கு, கிழக்கு மண்ணிற்கு வழ ங்கியது.

விடுதலைப் போராட்டம் பற்றிய பாடல்கள் மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்தன. இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் நிலத்திலற்ற




காலத்திலும் விடுதலை பற்றிய உணர்வும் கருத்துக்களும் போராளிகளைப் பற்றிய நினைவும் ஆழமாக வேரூன்றி இருக்கின்றன என்றால் அதற்கு அன்றைய காலத்தில் புலிகளின் குரல் வானொலியும் விடுதலை இயக்கப் பாடல்களும் ஏற்படுத்திய தாக்கமே ஆகும்.

## உலகத் தமிழர் வானொலிச் சேவை.

உலகத் தமிழர்களின் வானொலி முயற்சிகள், புலம்பெயர் வாழ்வின் மத்தியில் மொழி, கலாசாரம் மற்றும் அடையாளத்தைப் பாதுகாக்கும் பண்பாட்டு இயக்கமாக உருவெடுத்துள்ளன. கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இயங்கும் சமூக மற்றும் இணைய வானொலிகள், உள்ளூர் தமிழர் சமூகத்தின் செய்திகள், இலக்கியம், இசை, மத நிகழ்வுகள் மற்றும் அரசியல் விவாதங்களை ஒலிபரப்புகின்றன.

இணைய தொழில்நுட்ப வளர்ச்சியால், பாரம்பரிய எப்.எம். ஒலிபரப்பைத் தாண்டி, ஆன்லைன் ஸ்ட்ரீமிங் மற்றும் பொட்காஸ்ட் வடிவங்களில் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களை இணைக்கும் ஒலி வலைப் பின்னல் உருவாகியுள்ளது.

இவ்வாறான முயற்சிகள் வெறும் தகவல் பரிமாற்றம் மட்டுமல்ல; தலைமுறைகள் இடையிலான மொழிப் பிணைப்பை உறுதிப்படுத்தும் சமூக நினைவகங்களாகவும் செயல்படுகின்றன.

தொழில்நுட்ப மாற்றங்கள் எவ்வளவு ஏற்பட்டாலும், மனித குரலின் நம்பகத்தன்மை மற்றும் உணர்ச்சி பிணைப்பு அழியாது என்பதையே உலக வானொலி நாள் கற்றுத் தருகிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் வானொலி, வரலாற்றை சாட்சியமாகக் கொண்டதும், எதிர்காலத்தை நோக்கியதுமான பயணத்தைக் கொண்டது.

அது வெறும் தகவல் தொடர்புச் சாதனமல்ல. நாடு மற்றும் சமூகங்க நினைவுகளின் ஒலிப்பதிவு. மக்களின் இதயத் துடிப்பை எடுத்துச் செல்லும் ஒலி மொழி.

இலங்கையிலும் இந்தியாவிலும், வானொலி இன உரிமை, சமூக நீதி, மொழி உரிமை, கலாச்சார அடையாளம் ஆகியவற்றை பாதுகாக்கும் கருவியாகத் திகழ்கிறது.

ஈழ மண்ணில் போர் நடந்த காலத்தில் வானொலிகள் பொழுதுபோக்கைக் கடந்து மக்களை ஆற்றுப்படுத்தவும், தகவல் பரிமாற்றத்திற்கும் பயன்பட்டது ஒரு மாறுபட்ட வரலாற்று அனுபவம் ஆகும்.

அத்துடன் தமிழ்ச் சேவைகள், மொழி மற்றும் இன அடையாளங்களை காக்கும் பணியில் முக்கிய இடம் வகிக்கின்றன. ஒலியின் மூலம் உணர்வுகளைப் பகிரும் சக்தி, மனிதர்களின் உள்ளங்களை நேரடியாகத் தொட்டுச் செல்கிறது.

# வனைவு

கொற்றவை | அங்கம்: 40




**மெத்தப்** படித்தவர்கள், அதிகம் படியாதவர்கள் என்ற எந்த வித்தியாசமும் இல்லாமல் போராளிகளால், போராளிகளாக இருந்தவர்களால் எழுதப்படும் ஆக்கங்கள் அத்தனையும் அவ்வளவுக்கு உணர்வு பூர்வமானவையாகவும் எழுத்தில் ஒரு நேர்த்தியுடனும் அமைந்து விடுகின்றன. இதன் இரகசியம்தான் புரியவில்லை என்று எண்ணிக் கொண்டான் ஆனந்தன். மண் மீதும் மக்கள் மீதும் கொண்ட தூய்மையான நேசிப்புத்தான் இதற்குக் காரணமாக இருக்க முடியும். வேறென்னவாக இருக்கும்?

கவனித்துப் பார்த்தால் இன்னுமொரு ஒத்த பழக்கமும் போராளிகளிடையே இருந்தது. பெரும்பாலான போராளிகள் வாசிப்பதை நேசித்தார்கள். யாரும் ஊக்குவிக்காமலே பல்தரப்பட்ட புத்தகங்களையும் வாசிக்கும் பழக்கம் அவர்களிடையே இருந்தது. இதனால் சிந்தனையில் ஒரு தெளிவிருந்தது. ஒரு பிரச்சனையைப் பற்றி பல கோணங்களில் விவாதிக்கும் ஆற்றலும், கால அவகாசம் கோராமல் சரியான முடிவெடுக்கும் திறனும் அனேகமாக எல்லோரிடமும் இருந்தது.

அது மட்டுமல்லாமல் வாசிப்பதால் எழுந்த மொழி ஆளுகையை அவர்கள் எழுத்தில் பார்க்கலாம். இதன் ஒரு வெளிப்பாடாகவே தேவியின் கவிதைகளும் மிளிர்ந்தன. ஒரு அனுபவமிக்க கவிஞரின் பேனாவிலிருந்து உதிர்ந்த வரிகளாக தன்னுடைய உணர்வுகளைக் கொட்டியிருந்தா தேவி.

நிதானமாக, அனுபவித்துப் படிக்க வேண்டிய பல கவிதைகள் அவ தந்த கொப்பியில் இருந்தன. 'நாளைக்கு பார்த்துக்கொள்வோம்' என்ற நினைப்புடன் படுக்க தயாரானான் ஆனந்தன்.

வரும் வழியில் விதுரனையும் பார்த்துவிட்டு வந்தது ஒரு நிம்மதி. விதுரன் உடல், மன நிலைகள் தேறி தெளிந்த சிந்தனையுடன் இருந்தான். அது சந்தோசத்தைக் கொடுத்தாலும் இப்போது அவனை வீட்டுக்குக் கூட்டி வர முடியாது. வைத்தியர்கள் சொல்லுவதுபோல் முழுதான மாற்றம் கிடைக்காமல் அவனை வீட்டுக்குக் கூட்டி வந்தால் மீண்டும் பழைய வழியில் போகும் உந்துதல் ஏற்பட்டு விடவும் கூடும். 'வெங்கியின் இடத்தில் இருந்து அவனை சரியான வழிக்குக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது' என்று எண்ணிக்கொண்டான் ஆனந்தன்.

சாந்தி கேட்டுக்கொண்டபடி படுப்பதற்கு முன் அலாரம் வைக்க ஃபோனை எடுத்தபோதுதான் மணிவண்ணனின் குறுந்தகவலைப் பார்த்தான்.



“என்னப்பா…? ஏங்கிப்போய் நிக்கிறியள்? அசதியாக் கிடக்கு எண்டனீங்கள்…. படுக்காம என்னத்தைப் பாக்கிறியள்…? ஆர் விடாம ஃபோன் அடிச்சது?“ சாந்தி கேட்டாள்.

“அது…. அது… மணிவண்ணன்தான்… அங்க சுப்பிரமணி ஐயா மோசம் போட்டாராம்…. அதுதான் மெசேஜ் விட்டிருக்கிறான்..“ சுரத்தில்லாமல் சொன்னான் ஆனந்தன்.

“ஐயையோ…! எப்பவாம்? மனிசனுக்கு வயசு போட்டுது தானே….? கொஞ்சம் வருத்தமும் பிடிச்சிட்டுது…. என்ன?“ ஆறுதல்படுத்தும் தொனியில் சொன்னாள் சாந்தி.

வயது மூப்பில் மனிதர்கள் இறந்து போவார்கள்தான். இருந்தும் மனதுக்கு நெருக்கமானவர்கள் இறக்கும்போது சட்டென்று அதிர்ச்சியாகி விடுகிறது. சுப்பிரமணியத்தார் ஆனந்தனுக்கு எவ்வளவு நெருக்கமானவர் என்று சாந்திக்குத் தெரியும்.

சாதியம் வேரோடியிருந்த யாழ்ப்பாண சமூகத்தின் சாதிய தடிப்பு மிக்க குடும்பத்தில் வந்தவர் சுப்பிரமணி ஐயா. தன் சாதி பழக்க வழக்கங்களை இறுக்கிப் பிடித்து வைத்திருப்பதையும், அதைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதையும்தான் ஆச்சாரம் என்று எண்ணுபவர் அவரின் பத்தினி இராசமணி அம்மா.

அப்போது, அந்தப் பிரதேசப் பொறுப்பாளனாக இருந்த வசந்தன் அவர்கள் வீட்டுக்கு அண்மையில் அமைந்த முகாமில்தான் தங்கியிருந்தான். அப்போது ஏற்பட்ட பழக்கம். சாதிய முறைமை படிப்படியாகத் தகர்ந்து வந்த அந்தப் பொன்னான காலத்தில், முற்றுமுழுதாக சாதிய அமைப்பை தூக்கி எறியவும் முடியாமல் அதே சமயம் அதைக் கட்டிப்பிடித்து வைத்திருக்கவும் முடியாமல் அவதிப்பட்ட பல குடும்பங்களில் சுப்பிரமணி ஐயாவினதும் ஒன்று. அவர்கள் மனநிலை எப்படி படிப்படியாக மாற்றம் கண்டது என்பதை ஆனந்தன் கண்கூடாகக் கண்டிருக்கிறான்.

போராளியாக இருந்தபோது ஏற்பட்ட நெருக்கம் ஏதோவொரு பந்தமாக இன்றுவரை தொடர்கிறது. ‘தடிப்புப் பிடித்தவராக‘ தென்படும் இராசமணி அம்மா தனக்கு ஏதும் மனக்கிலேசம் ஏற்படும் போதெல்லாம் அவனை வரவழைத்து அவனிடம்தான் கொட்டுவா. அவ்வளவுக்கு ஒரு நெருக்கம் அவர்களிடையே மலர்ந்திருந்தது. இப்போது ஐயாவும் போய்விட, கட்டாயம் அவனின் உதவியை எதிர்பார்ப்பா.

‘நாளைக்கு இரண்டுபேருமே செத்தவீட்டுக்குப் போக வேண்டும்‘ என்ற நினைப்புடன் படுக்கைக்குப் போனார்கள் ஆனந்தனும் சாந்தியும்.

அவர்களைக் கண்டதும் ‘ஓ….!‘வென்று ஒப்பாரி வைத்து அழுதா இராசமணி அம்மா. ஆள் நல்லாத் தளர்ந்து போனா. இத்தனை வருடங்களாக அவவை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காமல் அந்நியோன்னியமாக இருந்த துணை தன்னை விட்டுப் பிரிந்த அதிர்ச்சியை அவவால் தாங்க முடியவில்லை.

“ராசம்…! உனக்கு ஆளில்லை எண்டு நினைக்காதை…. என்ன பிரச்சனை எண்டாலும் வசந்தனுக்கு சொல்லி விடு. ஓடி வந்திடுவான்…. என்ன…? இப்ப அவனுக்கும் கொஞ்சம் உடம்பு சரியில்லை… அதுதான் இந்தப் பக்கம் காணேல்லை… என்னனண்டாலும் ஒரு புள்ளை மாதிரி அவன் இருப்பான்… பெத்ததுகளை நம்பேலாட்டியும் வசந்தனை நம்பலாம் எண்டு கடைசி வரைக்கும் இவர் சொல்லிக்கொண்டு இருந்தவர்….“ என்று ராசமணி அம்மா பல தடவைகள் சொல்லிச் சொல்லி அழுதா.

சாந்தி ஆதரவாக அவவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். கொஞ்சம் தேத்தண்ணி கொண்டுவந்து வற்புறுத்தி குடிக்க வைத்தாள். ஆனந்தனுக்கும் மனது கனத்துக் கிடந்தது. செத்த வீட்டுக்கான அத்தனை ஆயத்தங்களையும் முன்னின்று செய்தான் அவன். எப்போது எடுப்பது என்பதை அம்மாவிடம் கேட்டுத்தான் முடிவெடுக்க வேண்டும்.

அம்மா சொன்னதைப் பார்த்தால் பிள்ளைகள் இன்னமும் அவர்களை சரியாகக் கவனிக்கவில்லை போல்தான் தெரிகிறது.

“நடுவிலான் வெளிக்கிட்டிட்டானாம்…. இண்டைக்கு இரவு இங்க வந்திடுவானாம்…. அப்ப, நாளைக்கு சவத்தை எடுக்கலாம் எண்டு நினைக்கிறன்… மற்றவங்கள் வரேல்லையாம்…“ பக்கத்து வீட்டுக்காரரும் சுப்பிரமணி ஐயாவின் நண்பருமான சிவராமன் சொன்னார்.

வந்த மகனின் முகத்தில் தகப்பனை இழந்த கவலை தெரிந்தாலும் அவன் வேறு மாதிரி இருந்தான். அவனை கொள்ளிக்குடம் எடுக்க வைக்கவே படாதபாடு படவேண்டி இருந்தது.

“உந்த பழங்கால சம்பிரதாயங்கள் எல்லாம் தேவையோ? டீசன்டா அலுவலைப் பார்த்துப்போட்டு சுடலைக்கு கொண்டு போறதுதான் சரி…“ என்று நின்றான் அவன்.

சுப்பிரமணி ஐயாவை காடாத்தி முடித்தும் ஆனந்தனுக்கு அந்த வீட்டில் வேலையிருந்தது.

“உங்களைத்தான் பிள்ளை மாதிரி நம்பி இருக்கிறா அம்மா…. எல்லாத்தையும் ஒழுங்குபடுத்திக் குடுக்கும் மட்டும் நீங்கள் அங்கை போய்வரத்தான் வேணும்… உங்கடை உடம்பையும் கவனிச்சுக்கொண்டு உதுகளைச் செய்யுங்கோ அப்பா…. இஞ்சை நான் பார்த்துக் கொள்ளுறன்…“ என்றாள் சாந்தி.

“எனக்கென்னவோ வந்து நிக்கிற மகன் வில்லங்கம் பிடிக்கப் போறார் எண்டுதான் படுகுது….“

அது உண்மைதான். தனித்துப்போன தாய்க்கு ஆதரவாகப் பேசும் விருப்பத்தில்கூட மகன் இருக்கவில்லை. கறாராகப் பேசினான்.




"வசந்தன்..! இவாவை அங்க லண்டனுக்கு கொண்டு போகேலாது... என்ரை லைஃப் ஸ்ரைல் வேற.... இவாவால தாக்குப் பிடிக்கேலா... நான் வெளியில பெடியளோடை வெளிக்கிட்டா நாலைஞ்சு நாள் வீட்டையும் வரமாட்டன். வேலையும் லோங் அவர்ஸ்.... பின்ன இவாவை ஆர் பாக்கிறது?

அது மட்டுமில்லை... அங்க மூத்தவர் தண்ணியடிச்சுப் போட்டு ரோட்டு ரோட்டாக் கிடப்பர்.... ஊரெல்லாங் கடன்.... அவற்றை மனுசி அவருக்கு ஒருபடி மேலை. இந்த விசயத்தில நல்ல பொருத்தம்.... தெரிஞ்ச ஆக்கள் வந்து கதைகதையாச் சொல்லேக்கை பரிசுகேடாக் கிடக்கும்...

தப்பித்தவறி இவா லண்டன் வந்தா.... அங்கை மகன் பாசத்தில அடிக்கடி ஓடியோடி, அந்தப் பிரச்சனையை என்ரை தலையில கட்டப் பாப்பா... நான் கலியாணம் எண்டு ஒண்டைச் செய்யாமல் லிவிங் ருகெதரில இருக்கிறதே இப்பிடியான பிரச்சனையள் வேண்டாமெண்டுதான்....

உந்தச் சில்லெடுப்பெல்லாம் எனக்கு வேண்டாம்.... அப்பர் எல்லாச் சொத்தையும் 'அம்மாவுக்குப் பிறகு' எண்டு பின்னுரித்துக் காட்டித்தான் பிள்ளையளுக்குப் பிரிச்சு எழுதியிருக்கிறன் எண்டு கடிதம் போட்டவர்....

அப்ப பேந்தென்ன? காசு தாராளமாக் காணும்... அதை வைச்சுக்கொண்டு எங்கையாவது கௌரவமான வயோதிபர் இல்லத்தில சேர்ந்து காலத்தைக் கழிக்கலாம் தானே... இப்ப திறமான ஓல்ட் ஹோம் எல்லாம் வந்திட்டுது. வசந்தனிட்டைச் சொன்னாக் காணும், எந்த உதவியும் செய்வான் எண்டதையும் அப்பா எழுதினவர்...."

இரக்கமேயில்லாமல் அவன் பேசப்பேச ஆனந்தனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அதேசமயம், பெற்ற பிள்ளை தாயைப் பார்த்து பேசும் பேச்சா இது என்று அதிர்ச்சியாகவும் இருந்தது.

கோபத்தோடு அவன் வாய் திறக்க முன்பு,

"என்ன பேய்க்கதை பறையிறாய்? கொப்பர் உங்களை எவ்வளவு கஸ்டப்பட்டு சீரும் சிறப்புமா வளர்த்தவர் எண்டதை பக்கத்திலை இருந்து நானும் பார்த்திருக்கிறன். கொம்மா அந்தரிச்சுக் கிடக்கிறா. கொப்பாவைக் கிடத்தியிருந்த இடத்தைக் கழுவின ஈரங்கூடக் காயேல்லை. அதுக்கிடையில இந்தமாதிரி தெனாவெட்டாக் கதைக்கிறாய்... வெளிநாடு போய் இங்கிலீசு கதைச்சு, நாலு காசு பாத்தா எல்லாம் மறந்திடுமோ..? விசரா...! கொஞ்சமெண்டாலும் கொம்மாவை நெச்சுப் பாக்க மாட்டியோ...?" உரிமையும் ஆதங்கமுமாக வெடித்தார் சிவராமன்.

"உங்களுக்கு விளங்குதில்லை மாமா....! நீங்கள் அந்தக் காலத்து ஆள்... அது சரி..! அம்மாவுக்கு நான் மட்டுமோ பிள்ளை? மற்ற ரெண்டுபேரும் என்ன நாசூக்கா கழண்டிட்டினம் பாத்தியளோ...?"

அவன் இப்பவும் தான் சொல்வதுதான் சரி என்று நின்றான். ஆனந்தன் பேசுவதற்கு வாய் திறக்க முன்பு பக்கத்தில் இருந்த இராசமணி அம்மா அவனின் உள்ளங்கையைப் பிடித்து அழுத்தினா. 'கதைக்க வேண்டாம்' என்பதுபோல கண்சாடை காட்டினா.

ஆனந்தனுக்கு தலை கிறுகிறுத்துக்கொண்டு வந்தது.

'இவனுக்கு கிட்டத்தட்ட என்னுடைய வயது.... நாட்டில் நடந்த பிரச்சனைகளைப் பார்த்து அதற்குள் வளர்ந்தவன்... வீட்டுக்கு வீடு மாவீரர்கள் விழுவதைப் பார்த்தவன்... இவனே இப்படி இருக்கிறானே..? எங்களுடைய மக்கள் எதை நோக்கிப் போகிறார்கள்..? கடவுளே..! உங்களுக்காக தன்ரை வாழ்நாளைக் கொடுத்து போராடிய அண்ணையை கொஞ்சமும் நினைச்சுப் பாக்க மாட்டாங்களா...? அப்ப, அடுத்தடுத்த தலைமுறை எப்படி சரியா வளரும்...?'

ஆனந்தனின் சிந்தனை அங்கு நடந்த விவாதத்தை நிறுத்தவில்லை.

இறுதியாக,

"தம்பி... ! நீ எப்ப திரும்பிப் போக வேணும்?" இராசமணி அம்மா கேட்டா. வழக்கத்துக்கு மாறான நிதானமிருந்தது அவவின் குரலில்.

"இப்ப விட்டாலும் ஓடிப் போடுவன்.... செத்தவீடு முடிஞ்சுது... இனி நான் இங்க இருந்து என்ன செய்யிறது? அதோடை வெயில் அகோரமா இருக்கு... ஒரே கசகசவெண்டு தாங்க ஏலாதாம்.... அம்மா..! குறை நினைக்காதேங்கோ... ஆருக்கு விளங்காட்டாலும் உங்களுக்கு விளங்கும்...." அவன் வசனத்தைப் பூர்த்தி செய்ய முதல் அம்மா குறுக்கிட்டா.

"ஓம் அப்பு...! எனக்கு விளங்குது... நீ சொன்ன மாதிரி வளவுகளின்ரை வருமானமே எனக்குக் காணும். எனக்கு உந்த வெளிநாடெல்லாம் சரிப்படாது... நான் கொப்பர் இருந்த இடத்திலயே இருந்து என்ரை வாழ்க்கையைக் கழிச்சிடுவன்.... இந்தா என்ரை இன்னொரு பிள்ளை வசந்தன் இருக்கிறான்.... அவன் என்னை உள்ளங்கையில வைச்சுத் தாங்குவான்... நீ என்னைப்பற்றிக் கவலைப்படாதை... பயணத்துக்கான அலுவலைப் பார்!"

அம்மா பேசப்பேச ஆனந்தனின் கண்கள் பனித்தன. இறுதியில், இன்னும் இரண்டு நாட்களில் மகன் புறப்படுவது என்று முடிவாகியது. அதனால் வீட்டுக்குப் புறப்பட்டான் ஆனந்தன்.

நடந்த கதையைக் கேட்ட சாந்திக்கு ஆதங்கம் தாங்க முடியவில்லை.

"இவங்களை பிள்ளையள் இல்லை எண்டு அறிவிச்சுப்போட்டு ஆரும் அநாதைப் பிள்ளையளை எடுத்து வளர்த்திருக்கலாம்.... இப்பிடியும் பிள்ளையள் இருப்பாங்களோ..?? ச்சை..." சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள் அவள்.

வெண்ணிலா வேறு விதமாக எதிர்வினை ஆற்றினாள்.

"அப்பா....! பாதிக்கப்படக்கூடிய நிலையில இருக்கிறவைக்காகத்தானே வசந்தம் இருக்குது. பாதிப்பு என்றால் வயசு போனவையும் அடக்கம்தானே? அதிலயும் பார்க்க யாருமில்லாத ஆக்கள் இருந்தா? அதையும் எங்கடை அறக்கட்டளை எடுத்துச் செய்யட்டன். முதல் ஆளா இராசமணி அம்மம்மாவோடை தொடங்குவம்... என்ன? அவவும் சந்தோசப்படுவா....."

வெண்ணிலா ஒரு புதிய திட்டத்தை விபரிக்கத் தொடங்கினாள்.

தொடரும்.....



# வேர்கள்

**நாகி**

கண்களுக்குத் தெரியாமல்
வாழும் வித்தையை
வேர்களிடமிருந்தும் - என்
அம்மாவிடமிருந்தும்
கற்றுக்கொண்டேன்.

எல்லாமாக இருந்தும்
எதுவுமே இல்லாதது போல் வாழும்
ஒரு ரகமான வாழ்க்கை இது.

ஒப்பாரிகளில் அழுவதுபோல
ஆணிவேர் அறுந்தபின்தான்
தாங்கியது வேர்தான் என்ற
உண்மை
வெளிச்சத்துக்கு வரும்!

பல்லாயிரம் பெண்கள்
இப்படித்தான் வாழ்கிறார்கள்!!

இடைவிடாது இயங்கும்
இயந்திரங்கள் போல....
ஓய்வின்றி உழைக்கும்
ஊதியமில்லா சேவகராக...
அவர்கள் வாழ்க்கை
கழிந்துபோய் விடுகிறது!

குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்கும்
என்னென்ன பிடிக்கும் என்பது
ஒரு அம்மாவுக்கு அத்துபடி!

யார் யாருக்கு
எதெல்லாம் பிடிக்காது என்பதை
நித்திரையிலும் சொல்வாள்
கெட்டிக்காரி!

அது சரி...!
அம்மாவிற்கு என்ன பிடிக்கும்?
அவள் பார்க்க விரும்பிய ஊர் எது?
எந்த உணவை ஒருமுறையாகிலும்
சுவைத்துப் பார்க்க வேண்டுமென்ற
பேரவா கொண்டிருந்தாள்?
அவளின் பிரியமான
பள்ளித் தோழி யார்?
மறக்க முடியாத நினைவுகள் சுமந்த
தருணம் எது?

தேடித்தேடி வாசித்த புத்தகம் எது?
தேடவே வேண்டாமென்று விட்ட
உறவெது?

அப்பாவுடன் கைகோர்த்து நடக்க
ஆசைப்பட்டாளா?
முக்கிய முடிவுகளை எடுப்பதன் முன்பு
அவள் சம்மதத்திற்காக
அப்பாவின் பார்வை
தன்பக்கம் திரும்பும் என்று
எதிர்பார்த்தாளா?

அவளுள்ளிருக்கும்
ஆயிரம் ஆசைகளை
மனதோடு போற்றும்
ஓராயிரம் எண்ணங்களை
யாராவது என்றாவது கேட்டதுண்டா?

எத்தனை பேருக்குத் தெரியும்?
அம்மாவிற்குள் துடிக்கும் இதயம்
அவளுக்காகவும் துடிக்கும் என்று..

தாயாக.... தாரமாக...
சகோதரியாக.... சமூக சேவகியாக...
வீட்டு வேலைகள் அத்தனையையும்
தனியே நிர்வகிக்கும்
குடும்பத் தலைவியாக...

பல அவதாரம் பூண்டு
மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும்
பெண்களைப் பாருங்கள்!

அந்த
இல்லத்தரசிகளைப்
புரிந்து கொள்ளுங்கள்...
இல்வாழ்க்கை சிறக்கும்!
அவர்களை மதித்து நடவுங்கள்
நாடே நலம்பெறும்!!




யுகணேஸ்
(கொட்டகலை, இலங்கை)

# மலையக மண்ணில் ஒரு பல்கலைக்கழகம் உருவாகினால்?

**மலையகம்** - பசுமைப் பரப்புகளால் சூழப்பட்ட மலைத் தொடர்கள், தேயிலைத் தோட்டங்களின் மணம், மழைநீரின் இசை, உழைப்பின் வியர்வையால் வாழ்வை உருவாக்கிய மக்களின் வரலாறு.

நாட்டின் மையப் பகுதியை அலங்கரிக்கும் இந்த மலைநாடு, இயற்கை வளங்களாலும் பண்பாட்டு பல் வகைமையாலும் சிறப்புடையது. எனினும், கல்வி மற்றும் உயர்கல்வி வாய்ப்புகளில் மலையகப் பகுதிகள் நீண்டகாலமாக பின்னடைவைச் சந்தித்துள்ளன. இந்நிலையிலே, 'மலையக மண்ணில் ஒரு பல்கலைக்கழகம் உருவாகினால்?' என்ற சிந்தனை ஒரு சாதாரண கற்பனை அல்ல: அது சமூக மாற்றத்திற்கான வலுவான விதை.

## கல்வி வாய்ப்பின் சமநிலை

மலையகப் பகுதிகளில் வசிக்கும் பல மாணவர்கள் உயர்கல்வி பெற நகரப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பொருளாதார சிக்கல்கள், தங்குமிடம், பயணச் செலவுகள் போன்றவை பலரின் கனவுகளைப் பாதிக்கின்றன. மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகம் உருவானால், உள்ளூர் மாணவர்களுக்கு தாயகத்திலேயே தரமான உயர்கல்வி கிடைக்கும். இது கல்வி சமத்துவத்தை வலுப்படுத்தும்.

குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உயர் கல்வி அடைய புதிய வாய்ப்புகளைப் பெறுவர். பல்கலைக்கழகம் அவர்களுக்கானஉதவித்தொகைகள், சிறப்பு நுழைவுத் திட்டங்கள், தொழில்முறை பயிற்சிகள் ஆகியவற்றை வழங்கினால், சமூக முன்னேற்றம் வேகமாகும்.

## சமூக முன்னேற்றத்தின் ஊற்று

பல்கலைக்கழகம் என்பது அறிவைப் பரப்பும் இடமாக மட்டுமல்ல: அது சமூக மாற்றத்தின் மையமாகவும் விளங்குகிறது. மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகம் உருவாகினால், அந்தப் பகுதியின் சமூக அமைப்பில் நேர்மறையான மாற்றங்கள் ஏற்படும். கல்வியறிவு அதிகரிப்பதால் ஆரோக்கியம், பெண்கள் அதிகாரமடைதல், குழந்தைகள் கல்வி, மனித உரிமை விழிப்புணர்வு போன்ற துறைகளில்

முன்னேற்றம் காணலாம். பெண்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பு அதிகரித்தால், திருமண வயது உயர்வு, வேலைவாய்ப்பு அதிகரிப்பு, குடும்ப வருமான உயர்வு போன்ற பல சமூக நன்மைகள் உருவாகும். இத்தகைய மாற்றங்கள் முழு சமூகத்தையும் உயர்த்தும்.

## பொருளாதார வளர்ச்சி.

ஒரு பல்கலைக்கழகம் உருவாகினால், அதன் சுற்று வட்டாரத்தில் பொருளாதார செயற்பாடுகள் விரைவாக வளர்ச்சி அடையும். தங்குமிடங்கள், உணவகங்கள், புத்தகக் கடைகள், போக்குவரத்து சேவைகள் போன்றவை வளர்ச்சி பெறும். இவை உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும். மேலும், ஆராய்ச்சி மையங்கள் உருவாகி தேயிலை, காய்கறி, மலர் வளர்ப்பு, சுற்றுலா போன்ற துறைகளில் புதுமையான கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்படலாம். மலையகத்தின் முக்கிய தொழிலாக விளங்கும் தேயிலைத் துறையில் அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால், உற்பத்தித் திறன் மற்றும் தரம் மேம்படும்.

## சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்த வளர்ச்சி.

மலையகம் இயற்கை வளங்களால் செழித்து உள்ளது. ஆனால், நிலச்சரிவு, காடழிப்பு, கால நிலை மாற்றம் போன்ற சவால்கள் இப்பகுதியை பாதிக்கின்றன. பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் அறிவியல், நிலவள மேலாண்மை, நீர்வள பாதுகாப்பு போன்ற துறைகள் தொடங்கப்பட்டால், உள்ளூர் பிரச்சினைகளுக்கு அறிவியல் அடிப்படையிலான தீர்வுகள் கிடைக்கும். மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து நிலச்சரிவு தடுப்பு முறைகள், மழைநீர் சேமிப்பு, பசுமை தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை மேம்படுத்தினால், மலையகத்தின் இயற்கைச் செல்வம் பாதுகாக்கப்படும்.

## பண்பாட்டு வளம் மற்றும் அடையாளம்.

மலையக மக்களின் பண்பாடு தனித்துவமானது. தமிழ் மொழி, நாட்டுப்புறக் கலைகள், பாடல்கள், பாரம்பரிய விழாக்கள் ஆகியவை இப்பகுதியின் அடையாளமாகும். பல்கலைக்கழகத்தில் கலாசார ஆய்வு மையம் தொடங்கப்பட்டால், மலையக மக்களின் வரலாறு, பண்பாடு, சமூகப் போராட்டங்கள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படலாம்.

இத்தகைய ஆய்வுகள் புதிய தலைமுறைக்கு தமது அடையாளத்தை உணர்த்தும். இது தன்னம்பிக்கை மற்றும் சமூக ஒற்றுமையை வளர்க்கும்.

## தொழில்நுட்ப முன்னேற்றம்.

இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்பத்தின் காலம். மலையகத்தின் ஒரு தொழில்நுட்பப்பீடம் உருவானால், மாணவர்கள் மென்பொருள் உருவாக்கம், தரவியல், செயற்கை நுண்ணறிவு, இணைய பாதுகாப்பு போன்ற துறைகளில் பயிற்சி பெறலாம். இதன்மூலம் உலகளாவிய வேலை வாய்ப்புகள் அவர்களுக்கு திறக்கப்படும். மேலும், ஆன்லைன் கல்வி தளங்கள், டிஜிட்டல் நூலகங்கள், மெய்நிகர் ஆய்வகங்கள் ஆகியவை மலையகத்தை உலகத்துடன் இணைக்கும் பாலமாக அமையும்.



## சவால்கள் மற்றும் தீர்வுகள்.

பல்கலைக்கழகத்தை உருவாக்குவது எளிதான செயல் அல்ல. நிலத்தேர்வு, கட்டிட வசதிகள், தகுதி வாய்ந்த பேராசிரியர்கள், நிதி ஆதாரணம் போன்ற பல சவால்கள் உள்ளன. ஆனால், அரசு, தனியார் துறை, சர்வதேச அமைப்புகள் ஆகியவை இணைந்து செயல்பட்டால் இச்சவால்களைத் தாண்ட முடியும்.

மலையகத்தில் ஏற்கனவே உள்ள கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, கட்டமைப்பை மேம்படுத்தி, படிப்படியாக பல்கலைக்கழக நிலைக்கு உணர்த்தலாம். சமூகத்தின் பங்களிப்பும் முக்கியமானது.

## தேசிய ஒருமைப்பாட்டிற்கான பாலம்.

மலையக பல்கலைக்கழகம் பல இன, மத மாணவர்களை ஒன்றிணைக்கும் கல்வி மையமாக விளங்கலாம். இது பரஸ்பர புரிதலை வளர்த்து தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும். மாணவர்கள் பல்வேறு பின்னணிகளில் இருந்து வந்து ஒன்றாகக் கற்றுக் கொள்வதால், அமைதி மற்றும் சகிப்புத்தன்மை வளர்ச்சி பெறும்.

## எதிர்காலக் கனவு.

மலையக மண்ணில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கினால், அது வெறும் கட்டிடம் அல்ல. அது ஒரு தலைமுறையின் கனவுகளின் வடிவம். அது அறிவை விதைத்து நம்பிக்கையை வளர்க்கும். அது சமூகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் புதிய ஒளியை அளிக்கும்.

மலையக மாணவன் அல்லது மாணவி தனது கிராமத்திலிருந்தே உலக தரத்தில் கல்வி கற்று விஞ்ஞானியாகவும் மருத்துவராகவும் ஆசிரியராகவும் தொழிலதிபராகவும் உயர்வதைக் கற்பனை செய்யுங்கள். அந்த நாளில் மலையகத்தின் மலைகள் அறிவின் ஒலியால் முழங்கும்.

மலையக மண்ணில் ஒரு பல்கலைக்கழகம் உருவாகினால்? என்ற கேள்வி, உண்மையில் ஒரு சமூகத்தின் எதிர்காலத்தைக் குறிக்கும் கேள்வியாகும். அது கல்விச் சமத்துவம், பொருளாதார முன்னேற்றம், சமூக மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பண்பாட்டு வளர்ச்சி ஆகிய அனைத்திற்கும் அடித்தளமாக அமையும்.

எனவே, மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குவது காலத்தின் அவசியம். அது மலையக மக்களின் நீண்டநாள் கனவாக மட்டுமன்றி, முழு நாட்டின் வளர்ச்சிக்கான முதலீடாகவும் அமையும். அறிவு மலர்ந்திடும் மலையகம், நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தை உருவாக்கும்.

# காவியத் தடம்



சிறுகதை...

-பிரபா அன்பு

"அம்மம்மா...!"

"ஓம் அய்யா! என்ன வேணும்?"

"அம்மம்மா நாங்கள் இந்தமுறை கொலிடேக்கு ரஸ்யா போவமா?"

"ஏனப்பன் அங்க போவான்? இந்த முறை நாட்டுக்குத்தானே போறதென்று அம்மா சொன்னவா?"

"அங்க ஏன் அம்மம்மா போவான்? என்ர பிறன்ட் ஜான்கிறேசி ரஸ்யால நிறைய அழகான இடங்கள் இருக்கெண்டு சொன்னவன். நான் அங்கதான் போகப்போறன்"

"அது சரி அப்பு..! நீங்கள் பிறந்து வளர்ந்ததுக்கு இன்னும் எங்கட நாட்டுக்கு போகேலத்தானே? அதால இந்த முறை அங்கதான் போறது. அம்மா ஏற்கனவை உங்களுக்குச் சொல்லியிருக்கிறாதானே?"

"நோ அம்மம்மா..! பிளீஸ்! இந்த முறை வேற பிளேஸ் போவம்."

"அப்பன் இப்பிடி அடம்பிடிச்சிட்டு நிற்க அம்மா பிறகு அடிச்சுப்போடுவாள். அம்மான்ர குணம் தெரியும்தானே உங்களுக்கு?"

"ஓ..தெரியும். எங்கட அம்மா பொல்லாதவா."

"அப்பிடி எல்லாம் சொல்லக்கூடாது குட்டி. ஏன் அம்மாவை இப்பிடி சொல்லுறீங்கள்?"

"அம்மம்மா அங்க பார்க்கிறதுக்கு என்னதான் இருக்குது அழகாக?"

"அங்கதானே குட்டி எத்தனையோ வீரவரலாற்று இடங்களும் நினைவிடங்களும் இருக்குது? எங்கட இனத்துக்காக போராடின மாமா, அன்ரியாக்கள் எல்லாரும் உறங்குகிற துயிலுமில்லம் ஆமிக்காறனுகளால இடிச்சாலும் அவர்கள் உடலை விதைத்த இடம் இருக்குது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கிறவர்கள் எல்லாரும் தங்கட பிள்ளைகளை கட்டாயம் கூட்டிச்சென்று காட்டவேண்டிய பல இடங்கள் இருக்குது அங்க. நாங்கள் அவற்றை எல்லாம் போய் கட்டாயம் பார்க்க வேணும்"

"அம்மம்மா துயிலுமில்லம் என்றால் என்ன?"

"தாத்தா.. உங்கட அம்மான்ர அப்பா போராளியாக இருந்து வீரச்சாவு அடைந்தவர்தானே? தாத்தாதான் தன்னோட நின்று வீரச்சாவு அடைந்த தன்ர சினேகித மாமான்ர பெயரைத்தான் உங்களுக்கு பூவேந்தன் என்று வைத்தவர்"

"ஆ,.யெஸ்! அம்மம்மா! ஒரு நாள் என்னை கூட்டிக்கொண்டுபோய் ஒரு மண்டபத்தில கார்த்திகைப் பூ வச்சு கும்பிட்டீங்கதானே? அந்த இடமா?"

"ஓ..! அந்த இடம்போலதான் அப்பு. இங்கபோல அங்கு பெரிசா கொண்டாடுவினம். இம்முறை போய் அந்த துயிலுமில்லங்கள்



எல்லாவற்றையும் பார்ப்பம் என்ன?"

"நோ அம்மம்மா…! பிளீஸ்!"

"பூவேந்தன்….! இப்பிடி அடம்பிடிச்சுக்கொண்டு நிற்கக்கூடாது. இந்த முறை தாத்தா வீரச்சாவு அடைந்த இடம் எல்லாத்தையும் அம்மா காட்டித்தான் கூட்டிக்கொண்டு வருவா."

"அப்ப சரி. இண்டைக்கு நான் தமிழ் வகுப்புக்குப் போகேல. ஓகேயா?"

"அதுக்கேன் தமிழ் வகுப்புக்குப் போகேல? கிழமையில ஒரு நாளைக்குத்தான் தமிழ் வகுப்பு நடக்கிறது. நேரத்தை பார்த்து வெளிக்கிடு. வாற கிழமை வகுப்புக்கு வரமாட்டன் என்று பிறன்ட் பெடியளுக்கு சொல்லிப்போட்டு வா"

"ஏன்? எங்க போறம் வாறகிழமை?"

"வாற கிழமைதானே கொலிடே போறம் யாழ்ப்பாணத்துக்கு?"

"சரி அம்மம்மா! இன்று மட்டும் தமிழ் வகுப்புக்கு போகாமல் விடட்டுமா?"

"இல்லை! இல்லை! அம்மா உன்னை வெளிக்கிடுத்தி கூட்டிக்கொண்டு போய் விடச் சொன்னவா. அம்மா வேலை யால வரேக்க நீ வகுப்புக்குப் போகாமல் நின்றால் அடிச்சுப் போடுவாள்"

"அம்மம்மா! தமிழ் கட்டாயம் படிக்கணுமா?"

"அய்யோ இதென்ன கேள்வி அப்பன்? நாங்கள் தமிழர். எந்த நாட்டுக்குப் போனாலும் எங்கட பூர்வீகத்தை மறக்கக்கூடாது. தமிழ் எங்கட அடையாளம். நாங்கள் எங்கட தாய் மொழி தெரிந்திருக்க வேணும். நீங்கள் தமிழில எழுத வாசிக்க கட்டாயம் தெரிந்திருக்க வேணும்."

"அம்மம்மா! இந்த நாட்டு லாங்குவேச்சும் தமிழும் படிக்கிறது றொம்ப கஸ்ரம்."

"அப்புக்குட்டி…! இப்படி எல்லாம் சொல்லக்கூடாதடி. ஓடிப்போய் வெளிக்கிட்டுக் கொண்டு வாங்கோ."

"ஓ..சரி அம்மம்மா! இந்தா வாறேன்.கொஞ்சம் பொறுங்க."

வேகமாக வெளிக்கிட்டு வந்தவனை றெயினில் ஏற்றிச்சென்று தமிழ் வகுப்பில் விட்டுவிட்டு வகுப்பு முடிய கூட்டிவந்தேன். பல யோசனைகள் முள்ளிவாய்க்காலை சுற்றியே நின்றன. ஆனந்தபுரத்தில் வீரச்சாவு அடைந்த எனது கணவன் சக தோழி யரென அனைவரும் நினைவில் வந்து வந்து மறைந்தனர்.

வேகமாக ஒரு கிழமையும் கடந்தது. நாட்டுக்குப்போற நாளும் வந்தது. புறப்பட்டு நானும் மகளும் மருமகனும் இரண்டு பேரப்பிள்ளைகளுமாக வரும்போது

"அம்மம்மா…! இது என்ன வாகனம்? ஏன் கடலடியில கொண்டுவந்து வாகனத்தை வச்சிருக்கினம்?"

"அது அப்பன்…. அம்மம்மாவும் முந்தி இயக்கத்தில இருந்ததென்று சொன்னான்தானே உங்களுக்கு?"

"ஓம்! முந்தி சிறீலங்கா ஆமியோட சண்டை போட்டனீங்கள் என்று சொன்னீங்கள்."

"இதை ராங்க் என்று சொல்லுவினம். அப்ப அந்த நேரம் இயக்க மாமாக்களான சங்கர் மாமா, ராயு மாமா, குணா மாமா, ராஜன் மாமாக்கள் என்று பல பேர் சேர்ந்துதான் இதை தயாரித்தவே. இந்த மாமாக்கள் எல்லாருமே வீரச்சாவு."

"அப்ப இதை ஓட்டி வந்தது யார் அம்மம்மா?"

"இதை கேசரி மாமா என்று ஒரு மாமாதான் ஓட்டி வந்தவர். அவர் வீரச்சாவு அடைஞ்சிட்டார் ஆனையிறவில."

"அப்ப அவருக்கு பயம் வரேலயோ?"

"இல்லை அப்பன். அவர் துணிந்த போராளி. அதாலதான் அவர் அந்த வெட்டவெளியிலும் இதை கொண்டுவந்தவர்."

"இந்த ராங்க் இதில நிண்டால் கேசரி மாமான்ர வீரம் பேசப்படும்.. என்ன அம்மம்மா?"

"ஓமப்பு! இது எங்கட சொந்தத் தயாரிப்பு. நாங்கள் வெளிநாட்டில காசு கொடுத்து வாங்காமல் நாமாக கண்டு பிடித்து தயாரித்தது, அப்ப அது எங்கட இனத்துக்கும் பெருமைதானே நிற்கும்வரை?"

"ஆ..! சரி அம்மம்மா. குட் நியூஸ்."

"பூவாணி! எங்க எங்க போறதென்று முடிவெடுத்தாச்சுதே?"

"ஓம் அம்மா. கோப்பாய் துயிலுமில்லம் முதல் போவம். உவங்கள் இரண்டு பேருக்கும் காட்டிப்போட்டு வருவம்."

"ம்… அப்படியே நல்லூரடிக்கும்போய் திலீபன் மாமான்ர நினைவிடத்துக்கும் கூட்டிக்கொண்டு போய் பூ வச்சு கும்பிடவிட்டு கூட்டிட்டு வா."

"ஓம் அம்மா! அப்படித்தான் நினைச்சிட்டு இருக்கிறன் நானும். ஏலுமென்றால் அப்படியே சாட்டி துயிலுமில்லமும் போய் வருவம் நேரத்தைப் பார்த்து."

"பிள்ளை… கோயில் குளமெல்லாத்தையும் பிறகு வரும்போது பாருங்கோ. இந்த முறை இவங்களுக்கு காட்ட வேண்டிய இடமெல்லாத்தையும் கூட்டிக்கொண்ட காட்டிவிடு."

"ஓமம்மா… சரி."

எங்கட பூர்வீக வீட்டிற்குப்போய் குளித்து சாப்பிட்டு வெளியே வெளிக்கிட்டோம். காலையில் 9-00 மணிக்கே திலீபன் அண்ணையின்ர நினைவிடத்துக்கு நல்லூரடி வந்திட்டம்.

"பூவேந்தன்..! இந்த திலீபன் மாமாதான் 1987 ஆம் ஆண்டு 05 அம்சக் கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைத்து 12 நாட்கள் நீர்கூட அருந்தாமல் உண்ணாநோன்பிருந்து வீரச்சாவு அடைந்தவர்."

"அப்ப… இந்த மாமா எங்களுக்காகவா இறந்தவர்?"

"ஓம்! அந்த கோரிக்கை நிறைவேறாமல் 1987-09-26 அன்று தன்னுயிரை தியாகம் செய்தவர்."

"பூவேந்தன்… இந்தாங்கோ தம்பிக்கும் பூ கொடுத்து இருவருமாக சேர்ந்து பூ வச்சு கும்பிட்டிட்டு வாங்கோ."

"ஆ, சரி அம்மா!"

"தேனகன்….! ஓடியா… மாமாக்கு பூ வச்சிட்டு வருவம்" என்று மூத்த பேரன் தம்பியாரை அழைத்துக்கொண்டு சென்றான்.

"சரி! வேகமாக வாகனத்தில ஏறுங்கோ. கோப்பாய் துயிலுமில்லம் போவம்" எனக் கூறியவாறு மகளும் ஏறிக்கொண்டாள்



வாகனத்தில். சிறு நேரப்பயணத்தோடு கோப்பாய் துயிலுமில்ல வளாகத்திினோடு போய் நின்றுகொண்டோம்.

“பூவேந்தன் இங்க 800 க்கும் மேற்பட்ட மாவீரர்களின் வித்துடல் விதைத்த இடம். சண்டையில வீரச்சாவு அடையிற யாழ் மாவட்ட மாவீரர்களின் அனேகரது வித்துடல்கள் இங்கதான் விதைத்திருக்கினம்.

ஒவ்வொரு உடல்களின் மேலும் நினைவுக்கற்கள் கட்டப்பட்டிருந்தன. அவற்றை சிறீலங்கா இராணுவத்தினர் புல்டோசரால இடிச்சுப்போட்டு தங்கட முகாமினை அமைத்து இருக்கினம் இப்ப அதில“

“ஆ.. சரி அம்மம்மா. அப்படி என்றால் மாவீரர் தினத்துக்கு மாவீரர்களுக்கு விளக்கு வைக்கிறேலயோ?“

“மாவீரர் பெற்றோர், பொதுமக்கள் எல்லோரும் மாவீரர் தினத்துக்கு பக்கத்தில் உள்ள காணி ஒன்றில்தான் விளக்கு வைத்து அஞ்சலி செய்யிறவே. ஆயிரக்கணக்கான மக்கள் இந்நாளில ஒன்று கூடுவினம்“

“ஆ..சரி அம்மம்மா!“

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் துயிலுமில்லம்போல கொடிகாமம், சாட்டி, எள்ளங்குளம் போன்ற இடங்களிலையும் துயிலுமில்லங்கள் இருக்குது. தமிழர் வாழும் எல்லா மாவட்டங்களிலையும் துயிலுமில்லங்கள் உண்டு. அந்தந்த இடத்து மாவீரர்களை அங்கு விதைப்பார்கள். இறுதி நேரம் வேறு மாவட்ட மாவீரர்களையும் அருகிருக்கும் துயிலுமில்லங்களில் விதைத்தார்கள்“ என்று கூறினேன்.

“இப்படியே போறதோடபோய் முள்ளிவாய்க்கால் நினைவிடத்துக்கும் போவோம்“ எனக்கூறினாள் மகள்.

வீதியோரத்து கடை ஒன்றில் சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் ஓய்வுக்குப் பின்பு முள்ளிவாய்க்கால் நோக்கி புறப்பட்டோம். போகும் வழியெங்கும் யுத்தத்தின் அகோரங்களையும் இழப்புக்களையும் எனது பேரப்பிள்ளைகளுக்கு கூறியவாறே சென்றேன்.

“அந்தா நினைவிடம் வந்திட்டுது... செருப்பை கழற்றிப்போட்டு வாங்கோ!“

“அம்மம்மா! கால் சுடுகுது“

“அப்பு கொஞ்சம் சமாளித்து வாங்கோ. இங்கு யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கும் இறுதி நேரம் வீரச்சாவெய்திய போராளிகளுக்கும் சேர்த்து நினைவஞ்சலி செய்வார்கள்.“

“அப்படியா அம்மம்மா?“

“ஓம் அப்பன். ஒவ்வொரு வருடமும் மே மாதம் 18 ஆம் திகதி இங்கு முள்ளிவாய்க்கால் நினைவு தினம் கொண்டாடப்படுகிறது“

“ஆ..குட் அம்மம்மா. வாற வருசம் அப்ப நாங்க வருவமா.? வந்தால் பார்க்கலாமா?“

“ஓம்! யாரும் வரலாம், பார்க்கலாம். இவை எல்லாம் எமக்கு ஒரு வரலாற்றிடங்கள். கட்டாயம் உங்களோட படிக்கிற தமிழ் பிறன்ஸ் எல்லாரும் பார்க்க வேண்டிய இடங்கள். நீங்கள் அவையளுக்கு போய் சொல்ல வேணும். இப்படி இடங்கள் இருக்கென்று“

“ஓம் சரி அம்மம்மா! நான் சொல்லுறன்“

“இந்தாங்கோ இந்த சொப்பினில மண் எடுத்து கட்டிக்கொண்டு வாங்கோ. நாங்கள் வீட்டுக்கு கொண்டுபோவம்“

“ஏன் அம்மம்மா இந்த மண்?“

“இந்த மண் பல அவலங்களையும் வலிகளையும் சுமந்த மண். இந்த மண் எத்தனை ஆயிரம் எங்கள் மாவீரர்கள் பாதம் பட்ட மண். இந்த வீரநிலத்து மண்ணை நாங்கள் கொண்டுபோய் சாமி அறையில வைக்கவேணும்“

“ஓ..சரி அம்மாம்மா. பூவை தாங்கோ. கால் சுடுகுது“

“சரி சரி இந்தாங்கோ பூ. சீமெந்து கட்டில வச்சு கும்பிட்டிட்டு வாங்கோ“

“அம்மம்மா! இங்க வேற இப்படி இடங்கள் இருக்குதா?“

“இப்படி இங்க மட்டும்தான் இருக்குது. ஆனால் மாவீரர் துயிலுமில்லங்கள் நிறைய இருக்குது. மண்ணிற்காக தங்கட உயிரை அர்ப்பணித்தவர்களை ஒவ்வொரு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி அன்று பெரும் நினைவேந்தலாக மக்கள்கூடி மலரஞ்சலி செய்வார்கள்“

“ம்... அம்மம்மா நான் வாற வருசமும் இங்க வருவன். என்ர பிறன்ஸ் பெடியளையும் நாங்க போன இடம் எல்லாத்துக்கும் போகச்சொல்லுவன் சரியா?“

“ஆ.. நல்லது அப்பன். எங்கட இனம்பட்ட வலிகளையும் இழப்புக்களையும் இனிவாற சந்ததிக்கு நாங்கள்தான் ஒவ்வொருவரும் கட்டாயம் கடத்திச் செல்ல வேணும்.“

“எங்கட இனத்தில் இருந்து களமாடி மடிந்த வீரமறவர்கள் பற்றியும் நாங்கள் கட்டாயம் அறிய வேணும்.“

“ம்..! சரி அம்மம்மா! நாங்கள் வீட்ட போனபிறகு எனக்கு எல்லாவற்றையும் சொல்லுங்க. நான் கேட்கணும். சரியா?“

“ஓ.. நல்லது! கெட்டிக்காறன். அம்மம்மாகூட ஒரு போராளியாக இருந்தனான்தானே? எத்தனை சண்டைகளுக்குப் போய் காயங்கள் அடைந்திருக்கிறன். கட்டாயம் எல்லா வரலாற்றையும் நான் சொல்லுவன் பிள்ளைக்கு. சரியா?“

“அம்மா! சரி வாங்கோ. வெயில் ஏறிவந்திட்டுது. மணலுக்கு கால் சுடுகுது. வெளிக்கிடுவம்“ என்றாள் மகள்.

“போரின் அவலங்கள் சுமந்த என் மனம் மாவீரராகிப்போன எனது கணவனான பூவரசன் என் வாழ்வில் வந்தது ஆனந்தபுரத்தில் வீரச்சாவு அடைந்தது, என் மகள் பூவாணியோடு நான் தனித்து நின்று பட்ட துன்பங்கள், இரண்டு வருட புனர்வாழ்வு வாழ்க்கை, என்னோடு நின்று வீரகாவியமான மாவீரர்களின் நினைவுகள் என்று பலதையும் மீட்டியவாறு கண்களில் கண்ணீர் மல்கப் புறப்பட்டேன்.

# தமிழ் இனத்தின் துன்பியலை வெளிப்படுத்தும்
# போர்க்களத்தின் பேனாக்கள்

இ.சு.முரளிதரன்

**தொன்மப்** போர் மரபும் காவிய இதிகாசப் புனைவுப் போர்களும் கூட அறத்தின் சாய் மானத்தோடு நிகழ்ந்ததில்லை.

அவ்வா றிருக்கையில் ஈழத்தில் நிகழ்ந்த போரில் அறமீறல்கள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பது கற்பனைக்கும் அற்பாற்பட்டது.

பேரவலம் ஒன்றை எதிர்கொண்டு, மீண்டெழ முடியாத துயரில் தவிக்கின்ற இனமொன்று "நாளை விடியும்' என்ற போலிப் பிடிமானத்தோடும், கையறு நிலையோடும் வாழ்ந்து வருகின்றது. அதிகாரத்தை எதிர்ப்பதாக, அரசியற் களத்தின் கோமாளிக் கூத்துத் தொடரும் நிலையில், சர்வதேசத்தின் மௌனம் அதிகாரத்திற்குப் பக்கபலமாகவே அமைந்துள்ளது.

காலந்தின்ற நாள்களில், போர்க்களத்தில் பேனா முனைகளின் புரட்சி குறித்த பதிவாக, ஐங்கரன் விக்கினேஸ்வரா இந்நூலைக் கையளிக்கின்றார்.

போரிலக்கிய உருவாக்கம், சகோதர யுத்தம்,






நூலக எரிப்பு, நிலஅபகரிப்பு, புலம்பெயர்வு, காணாமற் போதல், சித்திரவதைகள், பதுங்குகுழி வாழ்வு, குண்டுவீச்சு, பௌத்த ஆதிக்கம், மொழி அதிகாரம், சோதனைச் சாவடி, வண்புணர்வு, கைதுகள், பரணி பாடுதல், பண்பாட்டு வரைபடச் சிதைப்பு, ஆயுதக் கலாசாரம், வன்மப் பரவலாக்கம் என எண்ணற்ற விடயங்களுக்கு உள்ளே சிக்கிப் பிதுங்கி வெளியேறிய இனத்தின் ஒட்டுமொத்தமான துன்பியலை வெளிப்படுத்த போர்க்களத்தின் பேனாக்கள் முனைகின்றன.

போராளிகளின் புனிதத்தைக் காவு கொடுக்காத வகையில், புரட்சியின் நெடுஞ்சாலையை விட்டுப் புறம் போகாமல் பயணிக்கின்றார் அவர்.

ஒவ்வொரு படைப்பாளியையும், நாம் சமகால விமர்சனப் பார்வையில் நோக்குவோம். அதாவது நடப்புக் காலத்தில் எவ்வகை நோக்கு நிலை மேலோங்கியுள்ளதோ, அதே வகையான தரிசனத்தில் அளந்துவிட முனை வோம்.

இதனால் காலத்திற்குக் காலம் மாறுபட்ட படைப்பாளிகள் கொண்டாடப்படுவது உண்டு. எனினும் தன் இனத்திற்காக, மனித வர்க்கத்தின் எழுச்சிக்காக இலக்கியம் படைத்தவர்களை அடுத்து வரும் காலம், ஏதோவொரு வகையில் புறந்தள்ளாமல் கொண்டாடும்.

அத்தகைய படைப்பாளிகளை ஐங்கரன் விக்கினேஸ்வரா இந்நூலில் இனங்காட்டுகின்றார்.

சிவ.ஆருரன், கி.பி.அரவிந்தன், அகிலன் திருச்செல்வம், க.வே.பால குமார்,

நா.யோகேந்திரநாதன், மகாலிங்கம் பத்மநாதன், பண்டிதர் வீ. பரந்தாமன் போன்றோர் ஈழப் போராட்டத்திற்கு நல்கிய இலக்கிய பங்களிப்பினைக் குறித்து சிலாகித்துள்ளார்.

ஊடகவியலாளர்களான மேரி கொல்வின், ஃபிரான்ஸிஸ் ஹரிசன் ஆகியோரின் மனிதாபிமானமும், துணிகரமிக்க செயற்பாடுகளை விதந்தோதுகின்றார். பெண் போராளிகளின் படைப்புகள், கறுப்பு ஜூலை, செம்மணி என்பன குறித்த ஆவணப்பதிவுகள் பற்றி துல்லியமான

தகவல்களை வெளிப்படுத்தும் நூல்களை சிறப்பாக நுணுகி நோக்கியுள்ளார்.

‘இளம் எழுத்தாளனையும் வரலாறு ஓர் நாள் விடுதலை செய்யும் எனும் நம்பிக்கைகளுடன்’ என நிறைவு செய்வதும், அந்த நம்பிக்கை மெய்யாகிப் போவதும் நெகிழ்வினைத் தருகின்றது.

மேரி கொல்வின் இறுதிக் கட்டப் போர்க்காலத்தில் எதிர் கொண்ட அனுபவங்களையும், சிரியா மற்றும் கிழக்கு தீமோரில் நிகழ்த்திய துணிகரச் செயற்பாடுகளையும் மெய்சிலிர்க்க எழுதிச் செல்லும் பாங்கு வியக்க வைக்கிறது.

ஈழப் போராட்டத்திற்குச் சேறு பூசுகின்ற நச்சு நிரற் படைப்புகளைத் துளியும் விரும்பாதவர் ஐங்கரன் விக்கினேஸ்வரா என்பதனையும் இந்நூல் இனங்காட்டுகின்றது. ஈழப் போராளிகள் மீதான பற்றுதலையும், அவர்களின் செயற்பாடுகளுக்கான மதிப்பினையும் கட்டுரைகளின் வழியே செவ்வனே உணர்த்தியுள்ளார்.

இந்நூல் மாற்றுக் கருத்துகளையும், அகலித்த விவாதத்தினையும் இலக்கிய உலகில் உண் டாக்குமென நம்புகிறேன். அலுப்பூட்டாத வகையிலும், பிறரைத் தொந்தரவு செய்யும் வகையிலும் அமைகின்ற நூலே ஆரோக்கியமானது. அத்தகைய பண்புகளோடு காணப்படும் ‘போர்க்களத்தின் பேனாக்கள்’ பாராட்டுதலுக்கு உரியது.





# சுயநலம்

பிரபா அன்பு

'நீ மாறிவிட்டாய்' என்று
கூறுகிறார்கள்.

இத்தனை
சுயநலமானவர்களைத்தான்
நானும்
நேசித்திருக்கிறேன்!

ஏமாற்றத்தை
தரத் துணிந்தவர்களின்
கண்ணீரைத்தான்
துடைத்துக்கொண்டு
இருந்திருக்கிறேன்!

எதைக் கூறினாலும்
நியாயப்படுத்துபவரின் அருகில்தான்
நானும்
இருந்திருக்கிறேன்!

யாரோ ஒருவருக்கு
முக்கியத்துவம்
கொடுப்பவருக்குத்தான்
நானும்
அத்தனை முக்கியத்துவம்
கொடுத்துக்
கொண்டிருந்திருக்கிறேன்!

சுலபமாக
தூக்கியெறிந்து செல்பவரைத்தான்
உயிரென
நினைத்துக்
கொண்டிருந்திருக்கிறேன்!

தேவைக்காக
பழகுபவரைத்தான்
பிடித்துப்போய் விடுகிறது எனக்கும்.

என்ன? இந்த
அகத்தனிமை
பிடித்தமானதுதான்.
அங்கே
ஏமாற்றங்கள் இல்லை...
வீணான வலிகள்கூட இல்லை..

நன்றி மொழிகிறேன்.
உங்களிடமிருந்து
கற்றுக்கொண்டதற்காக!

சுயநல உலகில்
நானும்
சுயநலம் கொண்டவளாய்
வாழ்ந்துவிட்டுப் போகிறேன்...

# திருக்குறள் பற்றி....

1. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812
2. திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது
 முதலாவது வது குறள்:
 அகர முதல் எழுத் தெல்லாம் ஆதிபகவன்
 முதற்றே உலகு
 1330 வது குறள்:
 ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
 கூடிமுயங்க பெறின்
3. முதல் உரை விளக்கம் எழுதியவர் மணக்குடவர்.
4. சிறந்த உரையெழுதியவர் பரிமேலழகர்.
5. உரை எழுதியவர்களில் காலத்தால் மூத்தவர் தருமர்.
6. இதில் பயன்படுத்தப்பட்ட மொத்த எழுத்துக்கள் எத்தனை?
 42194
7. இதில் அதிகம் பயன்படுத்தப் பட்ட எழுத்து எது?
 னி. (1705 முறை)
8. திருக்குறளில் எத்தனை மலர்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன?
 இரண்டு. (அனிச்சம்,குவளை)
9. எத்தனை விதை பயன்படுத்தபட்டது?
 ஒன்று (குண்டுமணி)
10. எத்தனை பழம் பயன்படுத்தப்பட்டது?
 ஒன்று (நெருஞ்சிப்பழம்)
11. எத்தனை மரம் பயன்படுத்தப்பட்டது?
 இரண்டு (பனை, மூங்கில்)
12. பயன்படுத்தப்படாத உயிரெழுத்து எது?
 ஔ. பயன்படுத்தப் படாமல் அவ் என்று பயன்படுத்தியுள்ளார்.
13. பயன்படுத்தப்படாத எண் எது? 9
14. இதில் கோடி என்ற சொல் எத்தனை முறை வரும்? 7
15. எல்லாத் திருக்குறளும் ஏழு சீரால் ஆனது
16. இதில் அதிகாரம் 133. குறள் 1330.
17. இதில் எத்தனை தரம் 7 எண் பாவிக்கப்பட்டுள்ளது? 8 இடங்கள்
18. ரஷ்யா கிரெம்ளின் மாளிகையில் பாதுகாக்கப்படும் தமிழ்நூல் திருக்குறள்.
19. ரஷ்யாவில் மட்டுமல்லாது பிரிட்டிஷ் மியூசியத்திலும் திருக்குறள், பாதுகாக்கப்படுகிறது.
20. திருக்குறளில் ஒரே ஒரு தரம் பயன்படுத்தப் பட்டுள்ள எழுத்துகள் ளீ, ங
21. மணக்குடவர் எழுதிய உரையை அச்சிட்டு வெளியிட்டவர் திருக்குறள் அன்பர் திரு.வ.உ.சி.தாம்பரனார்.
22. திருக்குறளை முதன்முதலில் மொழி பெயர்த்தவர் வீரமா முனிவர்.. இவர் இலத்தின் மொழியில் 1730 இல் மொழிபெயர்த்தார். இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க நேதனியல் ட்வர்ட் கிண்டர்ஸ்ஸ முதன்முதலில் முயற்சி செய்தார். பின் எல்லிஸ் துரை மொழிபெயர்த்தார். அதன் பின்1886 ம் ஆண்டில் ஜீ.யூ போப் முழுமையாக மொழிபெயர்த்தார்.

(படித்ததில் பிடித்தது)



# கரிநாள் பேரணி








ஸ்ரீ லங்காவின் சுதந்திர நாள் தமிழர் தாயகத்தின் கரிநாள்
Sri Lanka's Independence Day
Black Day for the Tamil Homeland
தமிழரின் தன்னாட்சி உரிமையை அங்கீகரி
Tamil People's external right to self-determination
JUSTICE CANNOT BE DELIVERED BY PERPETRATORS.
Kumananimages
Photo journalist